திருவள்ளுவர் ஆண்டு 2041

செப்டம்பர் - 2010

# செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 54

பகுதி : 10

விலை ரூ. 10/-

## 110ஆம் ஆண்டு விழா மலர்



மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

# உருக வைத்த
# திருவாசகம்

எத்தனையோ நல்லறிஞர் குறள்நூல் தன்னை
ஏற்றமுடன் தம்மொழியில் மொழிபெ யர்த்தார் !
அத்தனைக்கும் முத்தாய்ப்பாய் அமைந்த தென்றால்
அருஞ்செம்மல் ஜி.யூ. போப் மொழியாக் கம்தான் !
முத்தான பணிமுடித்தே ஓய்வைக் காண
முதிர்வயதில் போப்பையர் இலண்டன் சென்றார் !
தித்திக்கும் மறுதமிழ்நூல் மொழிபெ யர்க்கத்
'திருவாச க'ப்பெருநூல் மடியில் ஆழ்ந்தார் !

அமிழ்தனைய சிமிழ்நயத்தின் அழகில் மூழ்கி
அகமகிழ்ந்த அறிஞர்போப் அந்த நூலில்
தமதுள்ளம் உருகவைக்கும் வரிகள் பற்றித்
தமிழகத்தின் உ.வே.சா. அறிவ தற்கே
தமக்குரிய சுவைநடையில் கடிதம் தீட்டித்
தாம்அடையும் இன்பமெலாம் பகிர்ந்து கொண்டார் !
கமழ்தமிழில் போப்வரைந்த மடல்எ ழுத்தோ
கடும்மழையில் குளித்ததுபோல் இருந்த தாங்கே !

'மழைவெளியில் அமர்ந்தேஏன் எழுது கின்றீர்?
மங்கியுள்ள எழுத்தெனக்குப் புரிய வில்லை;
முழுவிளக்கம் தேவை'என்றே உ.வே. சாவும்
முடங்கலொன்றைத் தீட்டியபின், போப்பும் சொன்னார் :
'எழில்திருவா சகஇனிமை எழுதும் போதென்
இருவிழிகள் பொழியும்ஆ னந்தக் கண்ணீர்
எழுத்துகளை அழித்தால்நான் என்ன செய்வேன்?'
இதை அறிந்த உ.வே.சா. அதிர்ந்தே போனார் !

கவிவேந்தர் கா. வேழவேந்தன்

# செந்தமிழ்

(தோற்றம் 1902)

தொகுதி : 54 திங்கள் இதழ்
பகுதி : 11 திருவள்ளுவர் ஆண்டு 2041
செப்டம்பர் 2010

## 110ஆம் ஆண்டு விழா மலர்



வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867-02.12.1911

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |

**முகவை மன்னர் நா. குமரன் சேதுபதி**
தலைவர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்.

---

**ஆசிரியர்**
**இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை.

# பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| உருகவைத்த திருவாசகம் | கவிவேந்தர் கா. வேழவேந்தன் | 2 |
| சைவம் வளர்த்த தமிழ் இலக்கியங்கள் | முனைவர் இரா. செல்வக்கணபதி | 4 |
| கலைஞரின் கவிதைகளில் புதுமைக் கூறுகள் | பு. வழியரசன் | 10 |
| செற்று | புலவர் ஆறுவிரல் ஐம்பொறி | 13 |
| புறநானூற்றில் கல்வியியல் சிந்தனைகள் | இரா. கலைச்செல்வி | 17 |
| சங்க இளையோரும் மனித வளமும் | ச. விஜயகுமார் | 22 |
| இன்று போய் நாளை வா | தமிழ்ச்செம்மல் கதிர்மகாதேவன் | 32 |
| மொழியும் மொழியற்ற மொழியும் | முனைவர் வீ. ரேணுகாதேவி | 35 |
| தமிழோடு வாழ்வு | கவிஞர் வீ. மருதையன் | 43 |
| செந்தமிழ் நாடு | ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை | 44 |
| தமிழ்ச்சங்கம் | வா. குலாம் காதிறுநாவலன் | 47 |
| ஆராய்ச்சி | பத்திராசிரியர் | 53 |
| திருக்குறட் பரிமேலழகர் உரைப்பாயிர விளக்கம் | பத்திராசிரியர் | 54 |
| கலைச்சொல்லாக்கம் | முனைவர். த. பெரியாண்டவன் | 57 |

# இதழ் மணம்

அன்புடையீர்,

செந்தமிழ் வாசகர்களுக்கு வணக்கம்.

நூற்றுப்பத்தாவது ஆண்டு சிறப்பு மலரை உங்கள் கைகளில் தவழவிடுவதில் பெருமை அடைகிறோம்.

முனைவர் இரா. செல்வக் கணபதி அவர்களின் "சைவம் தந்த தமிழ் இலக்கியங்கள்" எனும் கட்டுரை சைவ சமய வரலாற்றை முறையாகத் தொகுத்து வழங்குகிறது. "தமிழ் ஆகமமாகத் திருமந்திரம் படைக்கப்பட்டது" போன்ற அழுத்தமான கருத்துக்களின் வெளிப்பாடே இக்கட்டுரை.

கலைஞர் கவி புனைவதில் வல்லவர். அவர் கவிதையை நாம் உற்று நோக்கினோம் எனில் இந்த உண்மையை நாம் எளிதில் உணரலாம் எனக்கூறும் ப. வழியரசன் "கலைஞரின் கவிதைகளில் புதுமைக்கூறுகள்" என்ற கட்டுரையை உங்கள் கவனத்திற்குத் தந்திருக்கிறார்.

ஆறுவிரல் ஐம்பொறி அவர்கள் அய்யன் திருவள்ளுவர் பயன்படுத்தியுள்ள 'செற்று', 'அற்கு' என்ற அரிய சொற்கள் எவ்வெப் பொருள்களில் வழங்குகிறது என இம்மாத இதழில் ஆராய்ச்சி செய்துள்ளார்.

'புறநானூற்றுக் கல்வியில் சிந்தனைகளை' நிரல்படக் கூறி அவற்றை நாம் கடைபிடித்து ஒழுகவேண்டிய மாட்சிமையையும் தகுந்த எடுத்துக்காட்டுகள் தந்து விளக்கியிருக்கிறார் இரா. கலைச்செல்வி.

பகைவரின் சொற்பொறுக்காத அரசன் புலவரின் சொல்லுக்குக் கட்டுப்பட்ட பாங்கினையும்' மேலும் பல சான்றான்மையையும் 'சங்க இளையோரும் மனித வளமும்' என்ற கட்டுரை விளக்குகிறது.

தமிழ்ச்செம்மல் முனைவர் கதிர்மகாதேவன் அவர்களின் 'இன்றுபோய் நாளை வா' என்ற குறுங்கட்டுரை படிக்கப் படிக்க நெஞ்சில் இனிக்கும் இனிமைத் தமிழ். 'மொழியும் மொழியற்ற மொழியும்' எனும் கட்டுரை மொழியாய்வாளர்களுக்கு நல்லதொரு விருந்து.

மேலும் செந்தமிழ்நாடு, தமிழ்ச்சங்கம் ஆராய்ச்சி என முன்னைச் செந்தமிழ் இதழ்களில் இருந்து இனிய பருகல்களாக எடுத்தாளப்பட்டுள்ளது. நிறைவாக.....

கவிஞர் வீ. மருதையன் அவர்களின் கவிதையால் தமிழர்கள் தலை நிமிரலாம்.

'நாம் கண்டுபிடிக்கும் அல்லது நாம் உண்டாக்கும் சொல் நாம் கூற வேண்டிய கருத்தைத் தெளிவாக விளக்கம் செய்வதாகவும், உச்சரிக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும்' என்ற மையக்கருத்தில் 'கலைச்சொல்லாக்கம்' என்ற ஆய்வுக் கட்டுரையை மேனாள் தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் முனைவர் சக்தி. த. பெரியாண்டவன் அவர்கள் நமது செந்தமிழ் சிறப்பு மலருக்கு உவந்தளித்திருப்பது மலருக்கு மகுடமாகும்.

மங்கல மலரோடு மாணிக்கக் கரங்கள்..... **முனைவர் க. சின்னப்பா**

**இனி நீங்களும் இதழும்....**

# சைவம் வளர்த்த தமிழ் இலக்கியங்கள்

*'செந்தமிழ் வாரிதி'*
முனைவர் இரா. செல்வக்கணபதி

**தமிழ் இலக்கியப் பகுப்புகள்**

கடந்த 2500 ஆண்டுகளில் தமிழில் தோற்றம் கொண்டு வளர்ந்தமைந்த இலக்கியங்களைத் தமிழ் இலக்கியங்கள் எனக் கூறலாம். எழுந்த காலம், மற்றும் இலக்கியத்தின் யாப்பியல், கருப்பொருள் முதலியன தொடர்பாகத் தமிழ் இலக்கியங்களை வேறு பிரித்து ஆராயும் முறை நிலவி வருகிறது. சங்க இலக்கியம், பல்லவர் கால இலக்கியம், இருண்ட கால இலக்கியம், சோழர் கால இலக்கியம், தற்கால இலக்கியம் எனப் பாகுபடுத்தல் ஒருவகை. யாப்பியல் மற்றும் கட்டமைப்பு வகையில் பெருங்காப்பியம், சிறு காப்பியம் எனப் பகுத்தல் மற்றொரு வகை. தமிழ்நாட்டு மக்களால் வழிபடப் பெறும் கடவுள்களை மையப்படுத்தி எழுந்த இலக்கியங்களைச் சமய இலக்கியங்கள் என்றல் வழக்கு. மேற்குறித்த சமய இலக்கியங்களில் ஒருவகை சிவனைக் குறித்து எழுந்த சைவ இலக்கியங்கள். இரண்டாவது திருமாலைப் பாடுபொருளாகக் கொண்ட வைணவ இலக்கியங்கள். இவற்றுள் சிவனை மையப்படுத்தி எழுந்த சைவ இலக்கியங்களே இக்கட்டுரையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

**சைவ-இலக்கியங்கள் என்ற குறியீடு**

திருமுருகாற்றுப்படை காலம் தொடங்கித் தமிழ் மக்கள் வழிபடு கடவுள்களிடையே உறவுமுறை கற்பிக்கும் பழக்கம் ஏற்பட்டது. எனவே, அவ்வகையில் தாய்த்தெய்வ வழிபாடாகிய சக்தி வழிபாடு, முருக வழிபாடு, கி.பி. 5ஆம் நூற்றாண்டுக்குப் பின் தமிழகத்தில் தோற்றம் கொண்டு வளர்ந்த கணபதி வழிபாடு, சிவன்-சக்தி-முருகன் அம்சமாகக் கருதப்பட்ட சிறுதெய்வ வழிபாடு என்பன எல்லாம் ஒருங்கிணைந்து சிவவழிபாட்டின் அங்கங்களாயின. எனவே, சைவ இலக்கியங்கள் என்ற குறியீட்டில் மேற்குறித்த அனைத்து வழிபாட்டு இலக்கியங்களும் ஒருங்கிணைத்துக் கொள்ளப்பட்டன. வைணவம் மட்டும் தனித்து ஆராயப்பட்டது.

## 16 ஆயிரம் சைவத் தமிழ் நூல்கள்

உலக மொழிகளோடு ஒப்பிடுகையில், எண்ணிக்கை, காலப்பழமை, யாப்பியல், இசை வடிவங்கள் கொண்ட தமிழ் இலக்கியப் பரப்பே பரந்ததும், விரிந்ததும் ஆகும். தமிழில் கடைச்சங்க காலம் முதற்கொண்டு, 20ஆம் நூற்றாண்டின் இறுதி வரை தோற்றம் கொண்ட பல்வேறு வகையான இலக்கியப் பரப்பில், அறுபது விழுக்காட்டு இலக்கியங்கள் சைவ சமயம் குறித்து எழுந்தன என்பது நன்கு நினைவு கூறப்பட வேண்டியதாகும். சைவ சமயக் களஞ்சியம் ஒன்றைத் தயாரிக்கும் எனது கடந்த ஐந்தாண்டுக் கால முயற்சியில், சைவ சமய இலக்கியங்களின் தொகை பதினாறு ஆயிரத்தை நெருங்குவது வியப்பாக நின்றது. இவற்றில், எண்பது விழுக்காட்டு நூல்கள் அச்சிடப்பட்டுள்ளன. இவற்றுள் இடம் பெற்ற பாடல்களின் தொகை பல இலட்சங்களைத் தாண்டும்.

## தொல்காப்பியம் முதல் சிலம்பு வரை

கால வரிசைப்படி, சைவ சமயம் தந்த தமிழ் இலக்கியங்களை இச்சிறிய பதிவில் அடையாளப்படுத்த மட்டுமே இயலும். விரிவான ஆய்வுகளுக்கு வாய்ப்பு இல்லை. 2750 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழந்தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில், வெற்றி தருபவளாகக் கொற்றவை குறிக்கப்படுகிறாள். 'கொடி நிலை கந்தழி' என்று தொடங்கும் நூற்பாவில், முருகன் பற்றிய குறிப்புள்ளதாக ஒரு சிலர் கருதுகின்றனர். தனிப்பாடல்களாக எடுத்துக் கொண்டால், எட்டுத் தொகையுள் ஒன்றாகிய பரிபாடலில், இசை வடிவாக முருகன், காடுகிழாள் (காளி) குறித்தெழுந்த சைவ-தனி-இசைப்பாடல்களைக் காண முடிகிறது. சைவம் தந்த தனி நூலாக, முதல் கொடையாகக் கிடைத்துள்ள நீண்ட வரிகளால் அமைந்தது நக்கீரனாரின் திருமுருகாற்றுப்படை. சிறிய இடைவெளிக்குப் பின், கி.பி. 3ஆம் நூற்றாண்டினதாகக் கொள்ளத்தக்க இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்தில், சிவ-சக்தியாகிய உமையைப் போற்றிப் பாடும் தனிக் காதையாக வேட்டுவ வரியும், முருகனைப் புகழ்ந்து பாடும் 'குன்றவக்குரவை'யும் அமைந்தன.

## முதல் சிற்றிலக்கிய வடிவங்கள்

கி.பி. 7ஆம் நூற்றாண்டுக்கு முன்னதாகச் சங்க இலக்கிய அகப்பாட்டு நெறியில், சிவனைப் பாடுபொருளாகக் கொண்டு கல்லாடம் என்ற அரிய நூல் தோன்றியது. 'கல்லாடம் கற்றவனிடம் சொல்லாடாதே' என்பது பழமொழி. முதல் கணபதி வாழ்த்து இந்நூலில் இடம் பெற்றது.

தொடர்ந்து காரைக்கால் அம்மையாரின் மூத்த திருப்பதிகங்கள் இரண்டும், அற்புதத் திருவந்தாதியும், திரு இரட்டை மணிமாலையும் தோற்றம் கொண்டன. பதிகம் (10 பாடல்களைக் கொண்டது). அந்தாதி - (ஒரு பாடலின் நிறைவை அடுத்த பாடலின் தொடக்கமாகக் கொண்டு 100 பாடல்களில் மாறிமாறி அடுக்கி 20 பாடல்களில் நிறைவிப்பது) என்ற புத்திலக்கிய வடிவங்கள், அம்மையார் தமிழுக்குத் தந்த இலக்கியக் கொடைகளாகும்.

## தமிழ் ஆகமம் - திருமந்திரம்

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற தொடருக்கு அடுத்துத் தமிழ் இனப்பெருமை பேசும், 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற சமய - சமரசத்தை முன்வைத்த திருமூலரின் திருமந்திரம், சைவம் தந்த தமிழ் இலக்கியக் கொடைகளுள் சிறப்பாகக் குறிக்கத் தக்கது, 'என்னை நன்றாக இறைவன் படைத்தனன், தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே' எனக் கட்டியம் கூறித் தொடங்கும் திருமூலர், சைவத்தைத் தோத்திர நெறியிலிருந்து சாத்திர நெறிக்கு எடுத்துச் சென்றார். கி.பி. 14ஆம் நூற்றாண்டுக் காலப் பகுதியில், அறிவாராய்ச்சிக்கு உட்படுத்தக் கூடிய அறிவியல் பூர்வமான, '*சைவ சித்தாந்தம்*' என்ற பெருநெறி தோன்ற வித்திட்டவர் திருமூலர். தென்னாட்டு அறிஞர்களால் வடமொழியில் படைக்கப்பட்ட ஆகமங்களை, மொழிபெயர்ப்புச் செய்யாமல், தமிழ் ஆகமமாகத் திருமந்திரம் படைக்கப்பட்டது. அறம், யோகம், மருத்துவம், தத்துவம் எனத் தமிழில் எழுந்த ஒரு சைவக் கலைக்களஞ்சியமாகவே திருமந்திரம் நிற்கிறது. உணர்வுகளை ஒதுக்கி வைத்து விட்டு, இந்நூலை அறிவாராய்ச்சிக்கு உட்படுத்தினால் கிடைக்கும் புதையல்கள் அன்னைத் தமிழுக்கு அளப்பரிய செல்வங்களை வழங்கும்.

## 500 ஆண்டுப் பொற்காலம்

கி.பி. 650 காலப்பகுதி தொடங்கி, 550 ஆண்டுக் காலம் தமிழ் மொழியைச் சைவ சமயமே ஆட்சி செய்தது. கி.பி. 7ஆம் நூற்றாண்டு முதல் 12ஆம் நூற்றாண்டு வரை அளப்பரிய சிறப்புடைய சைவப் பனுவல்களும், சிற்றிலக்கியங்களும், பெருங்காப்பியங்களும் தோன்றின. பிற்காலச் சோழர்களின் எழுச்சியும், நால்வர் பெருமக்களின் வருகையும், சைவம் வழித் தமிழ்மொழிக்கு விலைமதிப்பற்ற ஆபரணங்களை அணிவிக்கக் காரணமாயின. பாலி மொழியை முன்வைத்துத் தமிழை அழிக்க முயன்று பௌத்தர்களின் முயற்சியையும், வடமொழியை முன்வைத்துத் தமிழர் உயர்கலைகளைச் சீரழிக்க முயன்ற சமணர்

முயற்சிகளையும் எதிர்த்துப் பெரும் சமயப் போராட்டம் நிகழ்த்திய சைவர்கள், வெற்றிவாகை சூடி, தமிழ் அன்னைக்கு அரியணை தந்தனர். 'நாளும் இன்னிசையால் தமிழ் வளர்க்கும் ஞானசம்பந்தன்', 'நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன் நாவினுக்கு அரையன்' என்ற சுந்தரர் பதிவுகள் அன்னார் இருவரும் சைவத்தின் பெயரால் தமிழ்வளர்த்த திறம் உரைத்தன.

## சைவத் திருமுறைகள்

மூவர் தேவாரம், சங்க காலத்தில் நிலவிப்பின் அழிவுற்ற தமிழ் இசை வடிவங்களாகிய 103 பண்களில் 22 பண்களை மீட்டெடுத்தது. புத்திலக்கிய வடிவங்களை ஞானசம்பந்தர் படைத்தளித்தார். தாண்டகம் நாவரசர் கொடையாக அமைந்தது. கருவறையில் நிகழ்த்தப்படும் அருச்சனை என்பது 'தமிழ் இசையால் பாடுவதே' என்பதைச் சுந்தரர் வரலாற்றில் வைத்துச் சேக்கிழார் புரட்சி செய்தார். உலகச் சமய இலக்கியங்களுள் நெஞ்சத்தை உருக வைக்கும் அனுபவ வெளிப்பாடாகத் திருவாசகத்தை மாணிக்கவாசகர் தமிழுக்குக் கொடையாக வழங்கினார். ஒன்பதாம் திருமுறை இசைப் பாமாலையாய் வந்தது. 11ஆம் திருமுறையில் புத்திலக்கிய வடிவங்களில் 40 சிற்றிலக்கியங்கள் இணைந்தன. வரலாற்றுப் பெட்டகமாக கடவுளினும் பெரியன் மனிதன் என்பதை நிலைநாட்டிச் சேக்கிழார் பெரியபுராணம் என்ற காப்பியம் உபகரித்தார்.

## சைவ சித்தாந்தம்

சைவம் தமிழ் மொழிக்குத் தந்த விலைமதிப்பற்ற கொடைகளுள் ஒன்று சைவ சித்தாந்தம். விவேகானந்தருக்கு அது, ஜே.எம். நல்லசாமி பிள்ளையால் மொழியெர்த்துத் தரப்பட்ட போது, அவரை அது வியக்க வைத்தது. மூவர் தேவாரம், திருமந்திரம் தந்த ஒளியில் மெய்கண்டார் படைத்த சிவஞான போதமும், அதற்கு சிவஞான யோகிகள் வரைந்த பேருரையும் அளவற்ற தமிழர்களின் நுண்மாண் நுழைபுலனுக்குக் கட்டியம் கூறி நின்றன. இந்நூலுக்கு அருணந்தி சிவாசாரியார் எழுதிய செய்யுள் வடிவிலான உரை நூலே, சிவஞான சித்தியார் என்பது. தமிழின் பெருமை பேசும் ஆறு நூல்களில் இதுவும் ஒன்றாகக் குறிக்கப்பட்டது. மெய்கண்ட சாத்திரங்களும், பண்டார சாத்திரங்களும் தமிழ் மக்கள் கற்றுணர்ந்திருந்த வடமொழி மற்றும் தருக்க அறிவுக்குச் சான்று கூறுவன.

## சைவம் தந்த அறக்கொடைகள்

வள்ளுவத்தையும், பதினெண் கீழ்க்கணக்கில் உள்ள ஏனைய நூல்களையும் வழிமொழிந்து, சைவநெறி நின்ற ஔவையார், குமரகுருபரர், சிவப்பிரகாசர், உலகநாதர் போன்றோர் அரிய எளிய அறநூல்களைச் சைவத்தின் பெயரால் வடித்தமைத்தனர். கச்சியப்பரின் கந்தபுராணம், பரஞ்சோதிமுனிவரின் திருவிளையாடல்புராணம், சிவஞானசுவாமிகளின் காஞ்சிப்புராணம் என்பன தமிழன்னைக்குச் சூட்டப்பெற்ற விலைமதிப்பற்ற ஆபரணங்கள். சிற்றிலக்கியம், தனிப்பாடல் வரிசையில் சித்தர்கள் ஆற்றிய பங்கும் மகத்தானது. ஒட்டக்கூத்தர், புகழேந்தி, பட்டினத்தார், தாயுமானவர், சிவப்பிரகாசர், குமரகுருபரர், சைவத்திருமடத்துத் தலைவர்கள், அருளாளர்கள் வழங்கிய நூல் தொகுதிகள் கணக்கில் அடங்காதன.

## பல்வகை இலக்கியச் செல்வங்கள்

சிவநெறி வழாது நின்று முருகனைப் பாடுபொருளாளக் கொண்டு, சந்தத் தமிழ் தந்த அருணகிரியாரின் திருப்புகழ் ஓர் தமிழ் அற்புதம். முருகனை மையப் பொருளாக்கி வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள், சிதம்பரசுவாமிகள், பாம்பன் சுவாமிகள் நெஞ்சுருக்கும் கவிமழை பொழிந்தனர். ஈழத்து அறிஞர்களின் சைவப்பணிகள் தனியே ஆராயத்தக்கன. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை பிற்காலக் கம்பராகவே திகழ்ந்தார். சீர்காழி மூவராகிய முத்துத்தாண்டவர், மாரிமுத்தாப்பிள்ளை, அருணாசலக் கவிராயர் என்பார் தமிழில் சிவனை மையப்படுத்தி இனிய பதங்களையும், கீர்த்தனைகளையும் வழங்கித் தமிழ் இசைக்கு ஆக்கம் சேர்த்தனர். கோபால கிருஷ்ணபாரதி, சுத்தானந்த பாரதி முதலியோரின் சைவப் பங்களிப்பும் குறிக்கத்தக்கன.

## விருப்பு - வெறுப்பற்ற ஆய்வு

இன்னும் சைவத் தமிழ் இலக்கியங்கள் படைத்த நூறு நூறு கவிஞர்களும், ஆயிரக்கணக்கான நூல்களும் தமிழன்னை செம்மொழி சிம்மாசனம் ஏறத்துணை நின்றன. அவற்றை எல்லாம் விரிப்பின் பெருகும். சைவம் வளர்த்த தமிழை ஒதுக்கிவிட்டுத் தமிழ்மொழியின் சீர்மையை நிலை நாட்ட முயல்வது நிரம்பாது. விருப்பு வெறுப்புகளை ஒதுக்கி வைத்துவிட்டுத் தமிழ் அறிஞர்களும், ஆர்வலர்களும், பல்துறை அறிஞர்களும் சைவ இலக்கியங்களை ஆய்ந்தால் அவை தரும் பெருமிதம் கடல் அளவுக்கும் மேல் என்பது புலனாகும். காலமாற்றங்களால் யாவும்

சரியாக மதிப்பிடப்படவே செய்யும் என்று நாம் நம்பலாம்.

*தேவர் குறளும் திருநாள் மறை முடிபும்*
*மூவர் தமிழும் முனிமொழியும் - கோவைத்*
*திருவாசகமும் திருமூலர் சொல்லும்*
*ஒருவாசகம் என்று உணர்.*

## சைவத்தின் சமூகப் பெருமிதப் பதிவுகள்

சைவத் தமிழ் இலக்கியங்களில் காணப்படும் கீழே தரப்பட்டுள்ள அரிய தொடர்கள். இத்தகு நூல்களின் சமயங்கடந்த சமூக நாட்டத்தைப் பறைசாற்ற வல்லன.

*'இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை'*
*'நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்'*
*'யாவர்க்கும் ஆம் உண்ணும் போது ஒரு கைப்பிடி'*
*'எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல்*
*வேறு ஒன்று அறியேன் பராபரமே'*
*'என் கடன் பணி செய்து கிடப்பதே'*
*'வான் முகில் வழாது பெய்க; மலிவளம் சுரக்க'*
*'சாத்திரம் பல பேசும் சழக்கர்காள்*
*கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்'*
*'பறைச்சி ஆவது ஏதுடா? பனத்தி ஆவது ஏதடா?*
*இறைச்சி தோல் எலும்பிலே இலக்கமிட்டு இருக்குதோ?'*
*'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்'*
*'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்'*

இத்தகு தொடர்களும், இவை போல்வன பலவும், சமயம் சார்ந்த பண்பாட்டில் செழித்த அரிய தமிழ்க் கொடைகள்.

# கலைஞரின் கவிதைகளில் புதுமைக் கூறுகள்

*பு. வழியரசன்*
திருநெல்வேலி

## முன்னுரை

தமிழிலக்கிய வரலாற்றில் தனக்கென்று ஓர் இடத்தைப் பெற்றிருப்பவர் முத்தமிழறிஞர், டாக்டர் கலைஞர் அவர்கள். கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் கவிதை, கட்டுரை, புதினம், உரைநடை என இலக்கியத்தின் அத்தனை வகைகளிலும் சிறந்து விளங்குபவர் ஆவார். ஏறக்குறைய 70 ஆண்டுகளாக அவர் எழுதி வருகின்றார். இன்றளவும் கூட அவர் எழுதிக் கொண்டே இருப்பது உலக அளவில் மிகப்பெரிய சாதனை என்றே கூறலாம். அவர் எழுதியுள்ள கவிதைகளில் உள்ள புதுமைக் கூறுகளைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## கலைஞரும் கவிதையும்

கலைஞர் கவிபுனைவதில் வல்லவர். அவரது கவிதைகளை நாம் உற்றுநோக்கினோம் எனில் இந்த உண்மையை நாம் எளிதில் உணரலாம். இன்று கவிதைகளில் புகழ்பெற்று விளங்கும் பல்வேறு கவிஞர்களுக்கெல்லாம் முன்னோடியாக, ஆசானாக விளங்கி வருகிறார் என்பதே இதற்குச் சான்றாகும். டாக்டர் கலைஞர் இன்றளவும் கூட 'முரசொலியில்' கவிதை எழுதத் தவறுவதே இல்லை. அரசியல் நிகழ்வானாலும், தலைவர்களுக்கு அஞ்சலி போன்ற நிகழ்வானாலும் கலைஞர் கவிதையையே மடலாகப் பயன்படுத்துகிறார். இவ்வாறு, 'கலைஞரும் கவிதையும்' தமிழிலக்கிய வரலாற்றில் பிரிக்க முடியாதவை என்பதை நாம் எளிதில் உணர்ந்து கொள்ள முடியும்.

## கலைஞரின் கவிதைகளில் புதுமைக் கூறுகள்

கலைஞர் மற்ற கவிஞர்களிடமிருந்து தமது கவிதைகளில் முற்றிலும் மாறுபட்டுக் காணப்படுகிறார். அவரது கவிதைகளில் அவர் பல்வேறு புதுமைகளைப் புகுத்துவதன் மூலம் இது சாத்தியமாகின்றது. உதாரணமாகப் பின்வரும் கவிதையைச் சுட்டிக்காட்டலாம். இக்கவிதை கலைஞர் அவர்களால் 1938ஆம் ஆண்டிலேயே எழுதப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

*"வாருங்கள் எல்லோரும் இந்திப்*
*போருக்குச் சென்றிடுவோம். வந்திருக்கும்*
*இந்திப் பேயை விரட்டித் திரும்பிடுவோம்.*

*ஓடிவந்த இந்திப் பெண்ணே கேள்! நீ*
*தேடிவந்த கோழையுள்ள நாடிதல்லவே!*

*வீரத் தமிழ் கொஞ்சும் நாட்டில் – நாங்கள்*
*சாரமில்லாச் சொற்கள் ஏற்கமாட்டோம் ஏட்டிலே!"*

'அணிவகுப்புப் பாடல்' என்ற தலைப்பிலான மேற்கண்ட கவிதையில், 'இந்தி எதிர்ப்பை 'போர்' என்றும், 'இந்தி மொழியை', 'பேய்' என்றும் புதுமைப்படுத்துகின்றார். மேலும், 'தமிழ்நாட்டை', 'வீரத்தமிழ் கொஞ்சும் நாடு' என்று புதுமையாக வர்ணித்துள்ளார் டாக்டர் கலைஞர்.

**கலைஞர் கவிதைகளில் புரட்சிக் கூறுகள்**

கலைஞர் தனது அரசு நிர்வாகத்தில் புரட்சிகள் செய்து வருவதைப் போன்று, தன்னுடைய எழுத்துக்களில், குறிப்பாகக் கவிதைகளில் புரட்சிகளை உட்செலுத்திக் காட்டக்கூடிய திறமை மிகுந்தவர். அதற்குச் சிறந்த உதாரணமாகப் பின்வரும் கவிதையைக் கூறலாம். இக்கவிதை 1945இல் வெளிவந்த 'கவிதையல்ல' என்ற தொகுப்பில் இடம் பெற்றுள்ளது.

*'இனத்திலே கோளாறு புகுத்தி வைத்தோர்*
*இடிமுழக்கம் கேட்டதுபோல் - திணறிப்போனார்*
*பின்னி வைத்த மதங்கடவுள், மடத்தன்மை யெல்லாம்*
*மின்னலது வேகத்தில் ஓடியது காண்!*
*பாராட்டிப் போற்றி வந்த பழமைலோகம்*
*ஈரோட்டுப் பூகம்பத்தால் இடியுது பார்!*
*ஈ.வெ.ரா. என்ற வார்த்தை இந்நாட்டு ஆரியத்தின்*
*அடிப்பீடம் ஆட்டுகின்ற சூறாவளியாம்".*

இக்கவிதையில் தனது பகுத்தறிவு ஆசான் பெரியாரை, பூகம்பம், சூறாவளி, இடிமுழக்கம் என்ற புரட்சிகரமான வார்த்தைகளால் குறிப்பிட்டு, அவரைப் பெருமைப்படுத்துவதோடு மட்டுமல்லாமல்,

பகுத்தறிவை, இக்கவிதையின் மூலம் பரப்ப முனைந்துள்ளார் கலைஞர் என்பதையும் அறுதியிட்டுக் கூறலாம்.

### மேடைக் கவிதைகளில் புதுமைக் கூறுகள்

கலைஞர் கவிதை எழுதுவதோடு மட்டுமல்லாமல், மேடைக் கவிதை அதாவது கவியரங்கங்களிலும் கவிதை பாடுவதில் வல்லவர். சூழலுக்கேற்ப ஆச்சர்யமூட்டுவதிலும், நகைச்சுவை கூறுவதிலும் கலைஞருக்கு நிகர் கலைஞரே எனில் அது மிகையாகாது.

1992ஆம் ஆண்டு நடைபெற்ற புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் விழாவில் தலைமையேற்று கலைஞர் பாடிய கவிதையை இங்கு காண்போம்.

*'கொடுமை கண்டு குமுறி எழுவதே புரட்சி ;*
*கொடுமை செய்து கொட்ட மடிப்பதா புரட்சி?*
*மடமைகளைச் சுட்டெரிப்பதே புரட்சி ;*
*.........................................*
*பெரியார், அண்ணா வழி நடப்பே புரட்சி - அந்தப்*
*பெயர் இரண்டையும் விலைகொடுத்து கெடுப்பதா புரட்சி?*

*பொதுவுடமைப் பூங்கா அமைப்பதே புரட்சி;*
*தனியுடமைக்குத் தாம்பூலம் வழங்குவதா புரட்சி?''*

இவ்வாறு புரட்சிகளைப் பற்றி கூறி நீள்கிறது அக்கவிதை.

### முடிவுரை

கலைஞரின் தொடக்கக் கால கவிதை முதல் இன்று வரையுள்ள அவரது சில கவிதைகளில் உள்ள புதுமைக் கூறுகளை இக்கட்டுரை தகுந்த எடுத்துக்காட்டுகளுடன் ஆராய்கின்றது. எனவே, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள், இலக்கிய உலகில், கவிதையில், ஒரு காலம் போற்றும் கவிஞர் என்பது மறுக்க முடியாத உண்மை என்பதை இக்கட்டுரை எடுத்துக் காட்டுகிறது.

# செற்று

*புலவர் ஆறுவிரல் ஐம்பொறி*
வீரசோழபுரம்

திருவள்ளுவர் பயன்படுத்திய அரிய சொற்களுள் 'செற்று' என்ற சொல்லும் ஒன்றாகும். இச்சொல்லில் 'செறு' என்பது பகுதியாம். 'செறு' என்ற பகுதி இரட்டித்து 'செற்று' என்றானது. 'செறுதல்' என்ற சொல்லுக்கு அடக்குதல், அடைத்தல், தடுத்தல், வருத்துதல், அழித்தல், தூர்த்தல், பகைத்தல், வெறுத்தல், சினத்தல், நீங்குதல் முதலிய பல பொருள்கள் உண்டு.

இச்சொல்லைத் திருவள்ளுவர், இது போன்ற பல பொருள்களில், குறட்பாக்களில் பயன்படுத்தியுள்ளார். அவற்றுள் சில குறட்பாக்களைக் காண்போம்.

1. இச்சொல் 'அடக்குதல்' என்ற பொருளில் வரும் குறட்பாவைக் காண்போம்.

   *நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை*
   *மேற்சென்று செய்யப் படும்.* குறள் 335

   *நாவை அடக்கி விக்கல் மேலெழுவதற்கு முன்னே நல்ல அறச் செயல்களைச் செய்ய வேண்டும்.*

இது இக்குறட்பாவின் பொருள்.

2. இச்சொல் 'அழித்தல்' என்ற பொருளில் வரும் குறட்பாவைக் காண்போம்.

   *அழுக்காறு எனஒரு பாவி திருச்செற்று*
   *தீயுழி உய்த்து விடும்.* குறள் 168

   *பொறாமை என்னும் பாவி ஒருவனுடைய செல்வத்தை அழித்து அவனைத் தீய வழியில் செலுத்தி விடும். இது இக்குறட்பாவின் பொருள்.*

3. இச்சொல் 'வருத்துதல்' என்ற பொருளில் வரும் குறட்பாவைக் காண்போம்.

*அன்பொறீஇத் தற்செற்று அறநோக்காது ஈட்டிய*
*ஒண்பொருள் கொள்வார் பிறர்.* குறள். 1009

*அன்பு செலுத்தாமல் தன்னையும் வருத்தி அறத்தைக் கைவிட்டு சேர்த்து வைத்த பொருளை நுகர்பவர் மற்றவரே.*

இது இக்குறட்பாவின் பொருள்.

4. இச்சொல் 'வெறுத்தல்' என்ற பொருளில் வரும் குறட்பாவைக் காண்போம்.

*செற்றார் எனக்கை விடல்உண்டோ நெஞ்சேயாம்*
*உற்றால் உறாஅ தவர்.* குறள். 1245

*யாம் விரும்பி நாடினாலும் எம்மை நாடாத அவர் எம்மை வெறுத்துவிட்டார் என்று எண்ணி கைவிட முடியுமோ? இது*

இக்குறட்பாவின் பொருள்.

5. இச்சொல் 'நீங்குதல்' என்ற பொருளில் வரும் குறட்பாவைக் காண்போம்.

*செற்றவர் பின்செறல் வேண்டி அளித்தரோ*
*எற்றென்னை உற்ற துயர்.* குறள். 1256

*நீங்கிய காதலரின்பின் செல்ல விரும்பிய நிலையில் இருப்பதால் என்னை அடைந்த காம நோய் எத்தன்மையானது.*

இது இக்குறட்பாவின் பொருள்.

6. 'பகைத்தல்' என்ற பொருளில் இச்சொல் வரும் குறட்பாவைக் காண்போம்.

*செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்*
*எஃகதனிற் கூரியது இல்.* குறள். 759

*ஒருவன் பொருளை ஈட்ட வேண்டும். அவனுடைய பகைவரின் செருக்கை கெடுக்க வல்ல வாள் அதைவிடக் கூர்மையானது வேறு இல்லை.*

இது இக்குறட்பாவின் பொருள்.

7. இச்சொல் 'சினத்தல்' என்ற பொருளில் வரும் குறட்பாவைக் காண்போம்.

*உறின்உயிர் அஞ்சா மறவர் இறைவன்*
*செறினும்சீர் குன்றல் இலர்.* குறள். 778

*உயிர்க்கு அஞ்சாமல் போர் செய்யத் துணியும் வீரர் அரசன் சினந்தாலும் தம்முடைய சிறப்பு குன்றாதவர்.*

இது இக்குறட்பாவின் பொருள்.

ஒரு சொல்லின் பல பொருள்களையும் குறட்பாக்களில் அமைப்பது திருவள்ளுவரின் வழக்கம். பேரறிவு உடையவர் மட்டுமே இவ்வழக்கத்தைக் கடைப்பிடிக்க முடியும். எனவே திருவள்ளுவர் பேரறிவாளரே என்பதில் சிறிதும் ஐயமில்லை.

# அற்கு

திருவள்ளுவர் பயன்படுத்திய அரிய சொற்களுள் 'அற்கு' என்ற சொல்லும் ஒன்றாகும். அல்கு என்பதே அற்கு எனத் திரிந்தது. அல்கு, அற்கு ஆகிய இரண்டு சொற்களுக்கும் 'நிலைத்து நிற்றல்' என்பது பொருள். அற்கு என்ற சொல்லின் இறுதியில் ஆகாரம் சேர்ந்து புணரும்போது (அற்கு+ஆ=அற்கா) அற்கா என்ற சொல் பிறக்கிறது. இச்சொல் ஈறு கெட்ட எதிர்மறைப் பெயர் எச்சமாகும். இது 'நிலை பெறா' என்ற எதிர்மறைப் பொருளைத் தருகிறது.

திருவள்ளுவர் பயன்படுத்திய அரிய சொற்களுள் 'அற்குப' என்ற சொல்லும் ஒன்றாகும். 'அற்குப' என்ற சொல் 'நிலை பெறுபவை' என்ற

பன்மைப் பொருளைத் தருகிறது. அற்கா, அற்குப என்ற இரண்டு சொற்களுக்கும் 'அற்கு' என்பதே பகுதியாகும்.

அற்கா என்ற சீரும் அற்குப என்ற சீரும் ஒரே ஒரு திருக்குறளில் மட்டும் உள்ளன. அக்குறட்பாவைக் காண்போம்.

*<u>அற்கா</u> இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்*
*<u>அற்குப</u> ஆங்கே செயல்.* குறள். 333

இக்குறட்பா நிலையாமை என்ற 34ஆம் அதிகாரத்தில் உள்ளது. இக்குறட்பா செல்வம் நிலையாமையைக் கூறுகின்றது.

'செல்வம் நிலைக்காத இயல்பையுடையது. அச்செல்வத்தைப் பெற்றிருக்கும் போது நிலையான அறங்களைச் செய்ய வேண்டும் என்பது இக்குறட்பாவின் பொருளாகும்.

இக்குறட்பாவில் முதலடியில் முதற்சீரான 'அற்கா' என்ற சீர் ஈறு கெட்ட எதிர்மறைப் பெயர் எச்சம். எனவே இது நிலைக்காத என்ற எதிர்மறைப் பொருளைத் தருகின்றது.

இரண்டாம் அடியில் முதற்சீரான 'அற்குப' என்ற சீரில் உள்ள பகரம் பன்மையைக் குறிக்கின்றது. எனவே இது 'நிலைபெறுபவை' என்ற பன்மைப் பொருளைத் தருகின்றது. நிலை பெறுபவை அறங்களே. இதனால் 'அற்குப' என்ற சீர் அறங்களைக் குறிக்கின்றது.

'ஆங்கே' என்ற சீர் அப்பொழுதே (செல்வத்தைப் பெற்றிருக்கும் பொழுதே) என்ற பொருளைத் தருகின்றது.

அற்கா இயல்புடைய செல்வத்தைச் சேர்ப்பதினும், அற்கும் இயல்புடைய அறிவைச் சேர்ப்பதே நல்லது. திருக்குறளைக் கற்பதும் கற்பிப்பதும் கற்ற வழி நிற்பதும் அறிவைச் சேர்ப்பவர் செயலாகும்.

# புறநானூற்றில் கல்வியியல் சிந்தனைகள்

*இரா. கலைச்செல்வி*
புதுக்கோட்டை

புறநானூற்றில் இன்றைய கல்விச் சிந்தனைகள் யாவும் ஒருங்கே காணப்படுகின்றன. இன்று நம் தொடக்கக் கல்வியின் கூற்றான 'அனைவருக்கும் கல்வி' என்பதைச் சங்க காலத்திலேயே கருத்தாகக் கொண்டிருந்ததை அறிய இயலுகிறது. அறிவுடையவர்களே எல்லாம் உடையவர்கள். அறிவு இல்லாதவர்கள் வேறு எதை உடையவர்களாக இருந்தாலும் ஏதும் இல்லாதவர்களே' என எண்ணினர். கற்றவர்கள் ஒருவருக்கொருவர் எந்த வேற்றுமையும் கருதாமல் போற்றப்பட்டதை,

*உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்*
*பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே !*
*பிறப்பு ஓர் அன்ன உடன் வயிற்றுள்ளும்*
*சிறப்பின் பாலால் தாயும் மனம் திரியும்*
*ஒருகுடிப் பிறந்த பல்லோருள்ளும்*
*மூத்தோன் வருக என்னாது அவருள்*
*அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்*
*வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்*
*கீழ்ப்பால் ஒருவன் கற்பின்*
*மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே''* (புறம். 183)

என்ற இச்செய்யுள் நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

அரசர்களும் எத்தகைய வேறுபாடுங் கருதாமல் கற்றவர்களைத் தமக்கு ஆசிரியராகக் கருதி, அவர்கள் வழிநின்று அவர்கள் காட்டும் நெறியில் தவறாது நடந்து வந்த உண்மை இதிலிருந்து விளங்குகின்றது. அக்கால மக்கள் இவ்வளவு அருமையாகக் கல்வியைப் போற்றி வந்ததால்தான், அவர்கள் வாழ்க்கை அறிவொளி மிகுந்து, இந்நாட்டின்

வழி தோன்றல்களுக்கும், மற்ற நாடுகளுக்கும் எடுத்துக்காட்டாக இன்றும் துலங்குகின்றது.

கீழ்க்குடியிற் பிறந்தவர்களானாலும், அவர்கள் கற்றறிந்தவராயின், அவர்களை மேலான குடியினும் உயர்ந்த இடத்தில் வைத்து மதித்தனர். இத்துணைச் சிறப்பு வாய்ந்த கல்வியைக் கற்பிக்கும் ஆசிரியருக்கு உரிய வகையில் உதவிகள் செய்தும், வாழ்க்கைக்குத் தேவையான பொருளை அளித்தும், வழிபடும் நிலையிலிருந்து தவறுதலின்றி கல்வியைக் கற்க வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறியுள்ளனர்.

சங்ககாலச் சமுதாயத்தில் ஆடவர், மகளிர் வேறுபாடு இல்லாது எல்லாரும் கல்வி கற்கலாம் என்றிருந்த நிலையே இன்றைய 'அனைவருக்கும்' கல்வி எனற் வாசகத்திற்கு முன்னோடியாகத் திகழ்கிறது.

பண்டைத் தமிழ் மக்கள் ஒருவருக்கொருவர் வேறுபாடின்றி, ஒத்த அன்பு உடையவராயிருந்தனர். ''எல்லோரும் இந்நாட்டு மக்கள், எல்லா ஊர்களும் ஒர் ஊர் போன்றனவே ! என்னும் ஒற்றுமை எண்ணம் அவர்களிடம் மேலோங்கியிருந்ததை,

*'யாதும் ஊரே; யாவரும் கேளிர்*
*தீதும் நன்றும் பிறர்தர வாரா*
*நோதலும் தணிதலும் அவற்றோரன்ன*
*சாதலும் புதுவது அன்றே; வாழ்தல்*
*இனிது என மகிழ்ந்தன்றும் இலமே; முனிவின்*
*இன்னாது என்றலும் இலமே; மின்னொடு*
*வானம் தன்துளி தலைஇ ஆனாது*
*கல்பொருது இரங்கும் மல்லற் பேர் யாற்று*
*நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்*
*முறைவழிப் படூஉம் என்பது திறவோர்*
*காட்சியின் தெளிந்தனம் ஆகலின் மாட்சியின்*
*பெரியோரை வியத்தலும் இலமே;*
*சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே'.* (புறம். 192)

என்ற பாடல் தெளிவாகக் காட்டுகிறது.

கல்வியின் மிக உயரிய நோக்கம் சமூகத்துடன் பொருத்தப்பாடு அடைந்து, இணக்கமாக வாழ்வதுதான். அதனை இப்பாடலினும் சிறப்பித்துக் கூற முடியுமோ! என்பதற்கேற்ப அமைந்துள்ளது.

தமிழ் மக்களெல்லோரும் ஒருவருக்கொருவர் உறவினராகவேயிருந்தனர். அதனால், அவர்களுக்கு எல்லோருடைய உதவிகளும் வேண்டிய பொழுது கிடைத்தது. நமக்கு ஏற்படும் நன்மையும் தீமையும் பிறர் கொடுப்பதால் வருவன அல்ல; யாவும் ஊழ்வினைப் பயனால் வருவது என்பதைச் சான்றோர் காட்சியால் தெளிவு பெறலாம், நம்மைப் போல் பிறந்த மக்களில் சிலரைத் தாழ்ந்தவரென்றும், சிலரை உயர்ந்தவரென்றும், பிறப்பில் வேற்றுமை பாராட்டுவது இப்போது நடைமுறையில் உள்ளது. ஆனால், அக்காலத்தில், பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்; என்பதை வாழ்வின் உயிர்நாடியாகவும், அவரவர் செய்கின்ற அருஞ்செயல்களுக்கு ஏற்றபடி வெவ்வேறு வகையாகக் கருதப்படுவர் என்னும் பெருந்தன்மையான சிறந்த கொள்கையுடன் விளங்கியதையும் அறிய முடிகிறது.

கல்வி, அறிவை வளர்த்து, உள்ளத்தைப் பண்படுத்துகிறது. மாணாக்கர்களை சமுதாய மேம்பாட்டிற்கு, மனித நேயத்துடன் வாழ பயிற்றுவிப்பது கல்வியின் விழுமமாகும். இவற்றிற்கெல்லாம் அடிப்படையாக அமைய வேண்டுவது மனத்தில் மாசு இல்லாத தன்மையே ஆகும் என்பதை,

*''நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்*
*அல்லது செய்தல் ஓம்புமின்; அதுதான்*
*எல்லாரும் உவப்பது; அன்றியும்*
*நல்லாற்றுப் படூஉம் நெறியுமார் அதுவே!''* (புறம். 195)

உலகம் உவக்க இனிய வழியாக இச்செய்யுள் காட்டுகிறது.

நாம் நல்ல அறங்களைச் செய்வதற்கு இயலாமற் போனாலும், அறங்கள் அல்லாதனவற்றைச் செய்வதைத் தவிர்க்க வேண்டுமென்று கூறுவதுடன், அதுவே அனைவராலும் விரும்பப்படுவது என்றும், எப்பொழுதும் நம்மை நல்ல வழியில் செலுத்துவதும், நம்மை மன நிறைவு

அடையச் செய்வதும் நல்லறமே என்பதை கூறி அம்முறையிலேயே நம் முன்னோர்கள் வாழ்ந்திருந்ததை இப்பாடல் உணர்த்துகிறது.

இன்று மாணவர்களுக்குக் கல்வியைக் கற்பித்தலில் அரசு, ஆசிரியர், பெற்றோர், மாணவர், சமுதாயம் என பலருக்கும் பொறுப்பிருப்பினும், முக்கியப் பங்கு பெற்றோரைச் சார்ந்தது. ஆனால், பண்டைத் தமிழர் சமுதாயத்தில் அப்பொறுப்பு தந்தைக்கு மட்டுமே உரியதாயிருந்ததை,

*'ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே!*

*சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே!''* (புறம். 312)

என்ற பாடல் அடிகள் உணர்த்துகிறன.

கற்க வேண்டிய கல்வியை முறைப்படி கற்றவனே கல்வியில் வல்லவனாக, தலைவனாகத் திகழ முடியும் என்பதை,

*'கல்வி யென்னும் வல்லாண்'* (புறம். 346)

எனப் புறநானூறு கூறுகிறது.

மேலும்,

*'ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி*

*மாங்குடி மருதன் தலைவனாக*

*உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்*

*புலவர் பாடாது வரைக என் நிலவரை''* (புறம். 72)

என்ற பாடல் அடிகள், கற்றறிந்தோர் ஒன்றாகக் கூடி கல்வி குறித்த செய்திகளை விவாதித்துள்ளனர் என்பதை நமக்கு நவில்கின்றது.

சங்ககால மக்கள் இலக்கியக் கல்வியுடன், அறிவியலோடு கூடிய வானநூல் குறித்த அறிவையும் செம்மையாகப் பெற்றுச் சிறப்பாக வாழ்ந்திருந்ததை,

*'செஞ்ஞாயிற்றுச் செலவும்,*

*அஞ்ஞாயிற்றுப் பரிப்பும்,*

*பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்,*

*வளிதிரிதரு திசையும்,*

*வறிது நிலைஇய காயமும் என்றிவை,*

*சென்றளந்து அறிந்தார்போல் உளரே! அனைத்தும்*

*அறிவு அறிவாகச் செறிவினை யாகிக்''* (புறம். 30)

என்ற புறநானூற்றுப் பாடல் உள்ளங்கை நெல்லிக்கனி போலத் தெற்றென விளக்குகிறது.

சூரியன் செல்கின்ற நீள்வட்டப் பாதையையும், சூரிய மண்டலம் சார்ந்த செய்திகளையும், அங்கு நிலவுகின்ற காற்றின் இயக்கத்தையும், திசையையும், ஆதாரமின்றி விளங்குகின்ற ஆகாயம் பற்றிய செய்திகளையும் தாம் அவ்விடம் சென்று அளக்காது பூமியிலிருந்து அறியும் அறிவுடைய மேலோர்கள் இருந்ததை அறிய முடிகிறது.

கல்வியினால் அறிவை விளக்குதலும், ஒத்த மனப்பான்மையினால் எவரிடத்திலும் வேறுபாடின்றி நாகரிகராய் உலவுதலும் நம் முன்னோர்களின் சிறப்புக்கு நல்ல அடையாளங்களாயிருக்கின்றன. அக்கருத்துக்களை இப்போதும் கடைப்பிடித்து நாம் ஒழுகினால் இக்காலத்திலும் வாழ்க்கை மாட்சிமைப்படுவதற்கு வழியுண்டு.

# சங்க இளையோரும் மனித வளமும்

ச. விஜயகுமார்
அண்ணாமலைநகர்

சங்க கால மாந்தர், கல்விக்கும் புலமைக்கும் பெரும் மதிப்புத் தந்தனர். கல்வியிற் சிறந்த பெரியோரை அரவணைத்தே ஆட்சி புரிந்தனர். நலங்கிள்ளியின் தம்பி மாவளத்தான் என்பான், தாமப்பல் கண்ணனார் என்னும் புலவரோடு வட்டு ஆடினான். விளையாடும் காய்கள் காணாமல் போனபோது, சினத்தில் அவ்வரசன் புலவர்மீது காய்களை விட்டெறிந்தான். அதற்குச் சினந்த அவர் மாவளத்தான் சோழர் மரபினன் அல்லன் என உரைத்தார். இக்கூற்றுக்கு நாணமுற்று நின்ற அரசனை ஆறுதல்படுத்தும் பொருட்டுப் புலவர் தன்னைப் பொறுத்தருளுமாறு வேண்டினார். இளையோனாகிய அரசன், பெரும்புலவர்முன் தன் ஆற்றலைக் காட்டாது அவர் சொல்லுக்கு நாணி நின்ற காட்சி, சங்க இலக்கியத்தில் பதிவாகியுள்ளது.

*ஆர் புனை தெரியல் நின் முன்னோர் எல்லாம்*
*பார்ப்பார் நோவன செய்யலர்; மற்று இது*
*நீர்த்தோ நினக்கு ! என வெறுப்பக் கூறி,*
*நின் யான் பிழைத்தது நோவாய் என்னினும்,*
*நீ பிழைத்தாய் போல் நனி நாணினையே;*
*தம்மைப் பிழைத்தோர்ப் பொறுக்கும் செம்மல்*
*இக்குடிப் பிறந்தோர்க்கு எண்மை காணும் என*
*காண்தகு மொய்ம்ப ! காட்டினை; ஆகலின்,*
*யானே பிழைத்தனென்; சிறக்க நின் ஆயுள் -*
*மிக்க வரும் இன் நீர்க் காவிரி*
*எக்கர் இட்ட மணலினும் பலவே !* (புறம். 43:13-23)

நயத்தக்க நாகரிகம் மிகுந்த இச்சங்க இலக்கியக் காட்சியைத் திறனாய்வாளர்கள் பலர் பண்பாட்டுத் தளத்தில் மதிப்பிட்டுள்ளனர். பகைவரின் சொல் பொறுக்காத அரசன், புலவரின் சொல்லுக்குக்

கட்டுப்பட்டு அமைதியாக இருந்தமையை அவன் கல்வித் திறத்திற்குச் சான்றாகக் கொள்வர். ''பகைவர் சொல் பொறுக்காது வஞ்சினங் கூறும் வாள்வேந்தன் புலவர் என்றதனால் பிழைத்தோர் பொறுக்கும் செம்மலாயினன்'' (சு.வெ. பாலசுப்பிரமணியன், சங்க இலக்கியத்தில் வாகைத்திணை, ப. 82) எனப் புகழ்ந்துரைப்பர்.

## மகன் – சொல்லாய்வு

'மகன்' என்னும் சொல் பொதுவாக ஆண்மக்களைக் குறிப்பதே மரபாகும். இச்சொல்லுக்கு ஆடவருள் சிறந்தவன் என்னும் பொருளையும் வழங்கியுள்ளனர். இதனால் 'மகன்' என்னும் தகுதியுடைய ஆண்மகன், சிறந்தவனாக இருப்பதே அவன் பிறப்புக்குப் பெருமை என்பதைச் சொல்லாய்வு வழிப் பெறமுடிகிறது.

*ஐவகை வகுத்த கூந்தல் ஆய் நுதல்*
*மை ஈர் ஓதி மடவீர் ! நும் வாய்ப்*
*பொய்யும் உளவோ? என்றனன் பையெனப்*
*பரி முடுகு தவிர்த்த தேரன், எதிர் மறுத்து,*
*நின்மகள் உண்கண் பல் மாண் நோக்கிச்*
*சென்றோன்மன்ற, அக்குன்று கிழவோனே*
*பகல் மாய் அந்திப் படுசுடர் அமையத்து,*
*அவன் மறை தேஎம் நோக்கி, 'மற்று இவன்*
*மகனே, தோழி !' என்றனள்.*
*அதன் அளவு உண்டு கோள், மதி வல்லோர்க்கே.*

(அகம். 48:17-26)

மேற்காணும் பாடலுக்கு உரையெழுதுவோர், கல்வியறிவுடையோரே தலைமக்களின் காதலை உணரமுடியும் என்னும் கருத்தையும் தருகின்றனர். 'அதன் அளவு உண்டு கோள் மதிவல்லார்க்கே' 'மற்று இவன் மகனே தோழி' என்னும் தலைவியின் கூற்றால் தலைவி, தலைவன்பால் கொண்ட காதல் உணர்வினைக் குறிப்பாகக் கற்றறிந்தார் அறிந்து கொள்வார்களாக' (இரா. ஜெயபால், அகநானூறு - மூலமும் உரையும், ப. 144) என்பது உரைக்குறிப்பாகும்.

**பகைமையும் பெருமையும்**

இளையோருக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்த சங்கச் சான்றோர் பலர் அத்தகைய இளையோருக்கு அறிவுரை கூறும் நோக்கில் அமையும் சில நிகழ்ச்சிகளைச் சங்கப் புலவர்கள் குறித்துள்ளனர்.

முதியவர்கள் தமக்குள் மாறுபாடு கொண்டு, நீதி வேண்டி அறமன்றம் சென்ற நிகழ்வும் சங்க இலக்கியத்தில் இடம்பெறுகிறது. அறமன்றம் ஏறிய அளவில், தம் உள்ளத்தில் இருந்த பகைமை உணர்ச்சியை அடியோடு ஒழித்துப் பகைவருடன் நட்புறவு பாராட்டியமையையும் சங்க இலக்கியம் தெளிவு படுத்துகிறது. எதிர்காலத் தலைமுறையினர் தமக்குள் மாறுபடாது ஒற்றுமையுணர்வுடன் வாழ்தல் வேண்டும் என்னும் அறச்சிந்தனையின் அடிப்படையில் இப்பாடல் வடிவமைக்கப்பட்டுள்ளது.

*கரை சூழ்ந்த அகன்கிடக்கை,*
*மாமாவின் வயின்வயின் நெல்,*
*தாழ் தாழைத் தண் தண்டலை,*
*கூடு கெழீஇய, குடிவயினான்,*
*செஞ்சோற்ற பலி மாந்திய*
*கருங்காக்கை கவவு முனையின்,*
*மனைநொச்சி, நிழல் ஆங்கண்,*
*ஈற்றுயாமைதன் பார்ப்பு ஓம்பவும்;*
*இளையோர் வண்டல் அயரவும், முதியோர்*
*அவைபுகு பொழுதில் தம்பகை முரண்சொலவும்*

(பொருநர். 179-188)

சங்க இலக்கியம், இயல்பான வாழ்க்கை நெறியைச் சமூக அக்கறையுடன் தெளிவுபடுத்துகிறது. இயற்கையான நிகழ்வை மட்டும் தனித்துக் காட்டும் சங்கப் பாடல்களே இல்லை என்பதும் அறியத்தக்கது. மனிதனின் உள்ளத்தில் எழும் இயல்பான உணர்ச்சிகளை இயற்கைப் பின்னணியில் பாடலாக இயற்றுவதைப் பழம் புலவர்கள் பின்பற்றியுள்ளனர் என்பதற்குப் பின்வரும் சான்று பொருத்தமாக அமையும்.

"சங்கப் புலவர் இயற்கைப் பொருள்களை வாழ்வியல் நோக்கோடு பொருத்திப் பாடினர். தனித்த இயற்கை வருணனை செய்யும் பாடல் ஒன்றுகூடச் சங்க இலக்கியங்களில் இல்லை. மனித உணர்வை இயற்கையோடு மிடைந்து பாடினர் சங்கப் புலவர்" (மு. வரதராசன், பழந்தமிழிலக்கியத்தில் இயற்கை, ப. 14)

## சான்றோர் தீர்ப்பு

துலாக்கோல், சமமாக நின்று தன்னைச் சார்ந்த பொருளின் தன்மையைக் காட்டும். அதுபோல அவையத்திலுள்ள சான்றோர் பெருமக்களும் முன் பகை, மகிழ்ச்சி ஆகியவற்றால் பிறழாமல் நடுநிலையுடன் தன்னைக் காத்துக் கொள்ளும் வரன்முறை அறிந்திருப்பர். பகை, நட்பு இவற்றால் பிறழாது தீர்ப்பு உரைக்கும் அமைதியுடையவராக விளங்குவர். தம்மைப் பின்பற்றும் இளைய தலைமுறையினர் அறநெறி தவறாது வாழ்வதற்கு அறம் கூறும் இந்நல்லோரே காரணமாவர். அறநூல் சுட்டும் வழியில் தாம் ஒழுகுவதோடு, எதிர்கால மக்களையும் அந்நெறி நிற்க அறிவுறுத்துவர் என்பதைச் சங்க நூல் புலப்படுத்துகிறது.

*அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கி,*
*செற்றமும் உவகையும் செய்யாது காத்து,*
*ஞெமன் கோல் அன்ன செம்மைத்து ஆகி,*
*சிறந்த கொள்கை அறம் கூறு அவையமும்*

*நறுஞ்சாந்து நீவிய கேழ் கிளர் அகலத்து,*
*ஆவுதி மண்ணி, அவிர் துகில் முடித்து,*
*மா விசும்பு வழங்கும் பெரியோர் போல்*

*நன்றும் தீதும் கண்டு ஆய்ந்து அடக்கி,*
*அன்பும் அறனும் ஒழியாது காத்து,*
*பழி ஒரீஇ உயர்ந்து, பாய் புகழ் நிறைந்த*
*செம்மை சான்ற காவிதி மாக்களும்*
*அறநெறி பிழையாது, ஆற்றின் ஒழுகி* (மதுரை 489-500)

இளையோருக்குத் தலைமைப் பண்பை ஊட்ட முனைந்த முதியோரின் இந்நற்செயல், சங்க இலக்கியத்தின் மாண்பிற்குச் சான்றாகின்றது. கல்வியும், வீரமும் காத்த சான்றோரின் பதிவுகள் சங்க நூல்களில் இடம்பெற்றமையைக் கீழ்வருமாறு போற்றிப் புகழ்வர்.

''சங்கப் பாடல்கள் வீரம், மானம், கல்வி, விருந்தோம்பல், அறவுணர்வு, அன்பு, அருள், பதவித்துறவு, காமத்துறவு, மெய்யுணர்வு ஆகிய பல்வேறு பண்புகளில் மேலோராய் விளங்கியவர்களைக் காட்டுகின்றன'' (கு.வெ. பாலசுப்பிரமணியன், சங்க இலக்கியத்தில் வாகைத்திணை. ப. 81)

## இளையோரைக் காக்கும் பெரியோர்

மூத்தோர் என்றுமே இளையோரை வருத்தார் என்பதே உலகியல் ஆகும். மூத்தோரைப் போன்றே விளங்கும் கடல், இளையோரின் மனையைச் சிதைப்பது போலப் பேரறிவு உடையவர், சிறியோரை வருத்தக் கூடாது என்னும் மனிதவளச் சிந்தனை சங்க இலக்கியத்தில் இடம் பெறுகிறது.

''தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், சங்க காலத்திலேயே மக்கள் சிறந்த பண்பாட்டுப் பக்குவங் கொண்டு, நாகரிகத்துக்கு நல்ல எடுத்துக்காட்டாக விளங்கியுள்ளனர். அந்தக் காலக்கட்டத்தில், உலகின் பல பகுதிகளில் மக்கள் காட்டுமிராண்டிகளாக வாழ்ந்துள்ளனர் என்பது வரலாற்றால் அறியப்படும் செய்தியாகும்'' (செ. வைத்தியலிங்கன், தமிழ்ப் பண்பாட்டு வரலாறு, ப. 243) என்னும் சான்று அறியத்தக்கது.

ஒரு சங்கத் தலைவன், தலைவியை மணந்து கொள்வதில் நாட்டம் இன்றிக் களவொழுக்கத்திலேயே விருப்பம் கொண்டிருக்கிறான். நாள்தோறும் பகல் பொழுதில் தலைவியைச் சந்தித்து மகிழ்கின்றான். ஒருநாள், தோழி தலைவனைத் தனியே எதிர்ப்பட்டு நின்று தலைவியை அவள் பெற்றோர் இற்செறித்தனர் என்பதைக் குறிப்பால் உணர்த்தி அவளை மணந்துகொள்ளுமாறு வேண்டுகிறாள்.

அந்த நிலையில் மூத்தோரின் சினத்திற்கு இளையோர் ஆளாகக் கூடாது என்னும் உயர்சிந்தனையில் 'கடல்போன்ற பெருமையுடைய பெரியோர் வருத்தினால், இளையோரின் மனையும் சிதைந்துவிடும்'

என்னும் கருத்தைத் தோழி வெளிப்படுத்துகிறாள்.

*மூத்தோர் அன்ன வெண் தலைப் புணரி*
*இளையோர் ஆடும் வரிமனை சிதைக்கும்*
*தளை அவிழ் தாழைக் கானல் அம் பெருந் துறை,*
*சில் செவித்து ஆகிய புணர்ச்சி அலர் எழ,*
*இல்வயிற் செறித்தமை அறியாய்; பல நாள்*
*வரு முலை வருத்தா, அம் பகட்டு மார்பின்*
*தெருமரல் உள்ள மொடு வருந்தும், நின்வயின்,*
*'நீங்குக' என்று, யான் எங்ஙனம் மொழிகோ?*
*அருந் திறற் கடவுட் செல்லூர்க் குணாஅது*
*பெருங் கடல் முழக்கிற்று ஆகி, யாணர்,*
*இரும்பு இடம் படுத்த வடுவுடை முகத்தர்,*
*கருங் கட் கோசர் நியமம் ஆயினும்,*
*'உறும்' எனக் கொள்குநர் அல்லர்*

*நறு நுதல் அரிவை பாசிழை விலையே.* (அகம். 90 : 1-14)

## இளையோரும் வள்ளன்மையும்

பழந்தமிழ்ப் புலவர்கள் தம் படைப்புகளில் ஈகைத் திறத்தைப் பெரிதும் பாராட்டியுள்ளனர். இரக்கவுணர்வு கொண்ட வள்ளல்மார்களே மக்களால் பெரிதும் புகழ்ந்துரைக்கப்பட்டனர். இரவலரின் வறுமைத் துயரை அகற்றவும், குறைக்கவும் பண்டை மக்களிடையே ஈகைக் கோட்பாடு பரப்பப்பட்டது. பிறர் துன்பத்தைத் தமக்குற்ற துயர்போலக் கருதிச் செயல்பட்ட மாமனிதர்களை வள்ளல்கள் என வழங்கிய மரபும் எழுந்தது.

"இல்லாதாரை வாட்டும் இல்லாமையையும், அதனால் நேரும் வறுமைத் துன்பத்தைத் தவிர்க்கவும், தணிக்கவும் பண்டைய மக்களிடையே பரப்பப்பட்ட, வற்புறுத்தப்பட்ட கோட்பாடே ஈகைக் கோட்பாடு ஆகும். புறநானூற்றுத் தொகுப்பில் அடங்கியுள்ள பாடல்களில் கணிசமான பாடல்கள் இவ் ஈகைக் கோட்பாட்டையே போற்றி எடுத்துரைக்கின்றன. மற்றவர்க்கு அருளும் மனம் உடையோரை

வள்ளல்கள் என்று உயர்த்திப் பேசுதலும், கடை ஏழு வள்ளல்கள் எனச் சிறப்பித்துச் சொல்லலும் இந்த அடிப்படையில் எழுந்தனவே ஆகும்'' (க.ப. அறவாணன், தமிழ்ச் சமுதாய வரலாறு, பக். 48-49) என்னும் கருத்து உணரத்தக்கது.

கடையெழு வள்ளல்களாக விளங்கிய பெருமக்களை இளைய சமுதாயத்துக்கு அடையாளங்காட்டி அவர்களின் ஈகைத்திறத்தை மேம்படுத்தும் நிலையைச் சங்க இலக்கியங்கள் சுட்டுகின்றன. குறிப்பாகச் சிறுபாணாற்றுப்படை வள்ளல்மார்களைப் பட்டியலிட்டு அவர்களின் அருங்குணங்களை ஆராய்ந்து வருங்காலச் சந்ததியினர் பயன்பெறும் வழிவகையைக் காட்டுகிறது. இதற்குச் சான்றாகப் பின்வரும் சிறுபாணாற்றுப்படை வரிகள் விளங்குகின்றன.

*கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய*
*அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன்,*
*பெருங்கடல் நாடன் பேகன்* (85-87)

*சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய,*
*பிறங்கு வெள்அருவி வீழும் சாரல்*
*பறம்பின் கோமான் பாரி* (89-91)

*ஈர நல்மொழி இரவலர்க்கு ஈந்த,*
*அழல் திகழ்ந்து இமைக்கும் அஞ்சுவரு நெடுவேல்,*
*கழல்தொடித் தடக்கைக் காரி* (93-95)

*ஆல்அமர் செல்வற்கு அமர்ந்தனன் கொடுத்த,*
*சாவம் தாங்கிய சாந்துபுலர் திணிதோள்,*
*ஆர்வ நன்மொழி ஆய்* (97-99)

*அமிழ்துவிளை தீம்கனி ஔவைக்கு ஈந்த,*
*உரவுச்சினம் கனலும் ஒளிதிகழ்நெடுவேல்,*
*அரவக் கடல்தானை அதிகன்* (101-103)

*முட்டாது கொடுத்த, முனைவிளங்கு தடக்கை,*
*துளிமழை பொழியும் வளிதுஞ்சு நெடுங்கோட்டு*
*நளிமலை நாடன் நள்ளி* (105-107)

*குறும்பொறை, நல்நாடு கோடியர்க்கு ஈந்த,*
*காரிக் குதிரைக் காரியொடு மலைந்த*
*ஓரிக் குதிரை ஓரி* (109-111)

என்பன சிறுபாணாற்றுப்படை தரும் வாழ்க்கைக் கல்விக்கான வரலாற்றுச் சான்றுகள் ஆகும்.

## கோசர் வாழ்க்கையும் இளையோருக்கான படிப்பினையும்

தலைவி, தன் சுற்றத்தாரைப் பிரிந்து தலைவனுடன் உடன்போக்கில் செல்கிறாள். தோழி, தலைவியின் கற்புநெறிப்பட்ட செயலைத் தன் தாயிடம் கூறி அறத்தொடு நிற்கிறாள். அந்தத் தாய் தலைவியின் நிலையை நற்றாய்க்கு உரைக்கிறாள்.

பழைய ஆலமரத்தின் அடியில் மக்கள் கூடும் பொதுமன்றத்தின் கீழே, தாம் சொல்லிய சொல் தவறாமல், நான்கு ஊர்களைச் சார்ந்த கோசர் என்னும் குடியினர் வந்து அமர்கின்றனர். அவர்களின் நடுவுநிலையுடைய, பிழை செய்யாத வாய்மொழி போல, தலைவன் தலைவியின் மனையில் தங்கியிருந்தமையால் இருவருக்குமிடையேயான நட்பு அழுத்தமாயிற்று எனக் கவிதை மொழியில் செவிலித்தாய் உரைக்கிறாள்.

*பறைபட, பணிலம் ஆர்ப்ப, இறை கொள்பு*
*தொல் மூதாலத்துப் பொதியில் தோன்றி*
*நால் ஊர்க் கோசர் நல் மொழி போல,*
*வாய் ஆகின்றே-தோழி ஆய் கழல்*
*சேயிலை வெள்வேல் விடலையொடு*
*தொகுவளை முன்கை மடந்தை நட்பே* (குறு. 15:1-6)

கோசர் போன்ற மெய்ம்மையும், நடுநிலையும், மெய்ப்பொருள் காணும் திட்பமும் இளைய சமுதாயத்தினருக்குத் தேவை என்னும் கல்விநெறியை மேற்கண்ட சங்கப் பாடல் புலப்படுத்துகிறது. இத்தகைய

படிப்பினைகளைத் தருவதில் சங்க இலக்கியங்கள் தலைசிறந்தவை என்பதற்குச் சிறந்த சான்றுகள் உள்ளன.

"பண்பாட்டு வரலாற்றையோ பண்பாட்டு விளக்க நூலையோ எழுதுவது சாத்தியமானதுதானா, சரியானதுதானா என்னும் கேள்வி எழுவது இயல்பானது. தன்னுடைய பண்பாட்டு வரலாற்றை முறைப்படி பதிவு செய்வதை ஒரு மரபாகக் கொண்டிராத ஒரு சமூகத்தில், அதன் இன்றைய தேவையை முன்னிட்டு ஒரு தேசிய இனத்தின் கடந்த காலப் பாரம்பரியப் பெருமையை இன்றைய மக்கள் உணர்ந்துகொள்ளும் பொருட்டு - பண்டைய இலக்கியப் பனுவல்களை ஆதாரங்களாகக் கொண்டு பண்பாட்டு ஆய்வுநூல் எழுதப்படுவது தவிர்க்கமுடியாதது. இது தமிழகத்தில் நேர்ந்திருக்கிறது.

யதார்த்தத்தை - யதார்த்த உலகத்தை தன்னால் இயன்ற அளவில் பிரதிபலித்த இலக்கிய மரபினைச் சங்க இலக்கியங்களில் காணமுடியும். தமக்கு முன்னால் விரிந்து பரந்து கிடந்த இயற்கையை, நிலத்தை, மனிதர்களை, அவர்களுடைய வாழ்க்கையைத் தாம் உற்று நோக்கியதன் அடிப்படையில் படைப்பாளிகள், அக்காலத்திய படைப்பு நெறிக்கு இயைந்து உருவாக்கியவைதான் சங்க இலக்கியங்கள். ஒரு கதை சொல்லியைப் போல, நாம் உற்று நோக்கியவற்றை விவரிக்கும் போக்கில் அமைந்த சில வகை இலக்கியப் பனுவல்களில், மிகுதியாக மூடி மறைக்காத ஒருவகை யதார்த்தம் செயல்படுவதை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. மிகையான அணி அலங்காரங்களால் பொத்திப் போத்தப் படாத இந்த யதார்த்தம்தான், சங்க இலக்கியப் பனுவல்களை, பண்டைத் தமிழ்ப் பண்பாட்டைப் புரிந்து கொள்ள உதவும் முதனிலைத் தரவுகளாக ஆக்கியிருக்கிறது" (சா. கிருட்டின மூர்த்தி, (பதிப்), தமிழியல் ஆய்வுகள், முனைவர் இராம. சுந்தரம் மணிவிழா ஆய்வு நூல், ப. 61)

### கோசரின் ஒற்றுமை

கோசர்கள், தமக்கெனத் தனிச் சிந்தனையே இராமல், ஒன்றுகூடிப் பேசி, நன்மை தீமைகளை ஆராய்ந்து முடிவு தருவதில் வல்லவர்கள். அறிவாற்றலும், மனத்தூய்மையும் அவர்களின் நடுநிலைமைக்கு அணிசெய்கின்றன. தமக்குள் ஒத்த கருத்துடைய உயர்ந்தோராக இளைய சமுதாயம் வாழவும் வளரவும் வழி செய்வன கோசர் பற்றிய சங்கப்

பாடல்கள்.

*மகிழ்நன் மார்பே வெய்யையால் நீ;*
*அழியல் வாழி - தோழி ! - நன்னன்*
*நறுமா கொன்று நாட்டில் போக்கிய*
*ஒன்றுமொழிக் கோசர் போல*
*வன்கட் சூழ்ச்சியும் வேண்டுமால் சிறிதே* (குறு. 73 : 1-5)

நன்னனின் காவல் மரமான மாமரத்தை வெட்டி அவனைப் போரில் கொன்று அறத்தை நிலைநாட்டிய வாய்மையும் வீரமும் நிறைந்த கோசர்போலச் செயல்பட்டுத் தலைவனைத் தலைவி அடையவேண்டும் என இப்பாடலில் தோழி அறிவுறுத்துகின்றாள்.

''ஈன்றாள் பசி காண்பானாயினும் சான்றோர் பழிக்கும் செயலைச் செய்வது குற்றம் என்பதனையும், உள்ளத்தால் உள்ளலும் தீது என்பதையும், அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் ஆகியன மிகுத்து ஆதிக்கம் செலுத்தும் தனிமனிதனிடம் அறம் இருப்பதில்லை என்பதையும் நம் இலக்கியங்கள் வலியுறுத்துகின்றன. இவ்விலக்கியங்களில் காணப்படும் செய்திகள் சமுதாயத்தில் ஒழுங்கு இருக்க வேண்டும் என்று நினைத்திருக்கிறார்கள் என்பதைக் காட்டுகின்றன. அதை நடைமுறைப்படுத்த நீதி, நிர்வாகம் ஆகிய இரண்டையும் வைத்து அதற்கு ஒரு நடைமுறையை வகுத்து அதுவே ஒழுக்கம் என்று கூறியும் வந்துள்ளனர். அதுவே பிற்காலத்தில் சட்டமாக வடிவெடுத்திருக்கிறது'' (சிற்பி பாலசுப்பிரமணியன், (பதிப்), ஆய்வுக்கோவை, தொகுதி இரண்டு, 2001, ப. 587)

மேற்கண்ட சான்றால் கோசர் போன்ற அறநெறியாளர்கள் மக்கள் சமுதாயத்தில் நீதியை நிலைநாட்டுவதற்காகப் பெரிதும் பாடுபட்டு வந்துள்ளனர் எனப் புலனாகிறது. வாய்மைக்குச் சான்றாகக் கோசரைப் பல்வேறு இலக்கியங்கள் அடையாம் சுட்டி இளையோரை வழிநடத்தியுள்ளன என்பதும் கருதத்தக்கது.

# இன்று போய் நாளை வா

தமிழ்ச்செம்மல்
கதிர் மகாதேவன்
மதுரை

மேற்படி தலைப்பு கம்பராமாயணத் தொடர் என்பதை யாவரும் அறிவர்.

*சங்கரன் கொடுத்த வாளை,*

*இராவணன் பயன்படுத்த மறந்து விட்டான்;*

*வாளை கீழே போட்டு விட்டு நின்றான்.*

*இராமன் இராவணனுக்கு அறிவுரை கூறி,*

"இன்றுபோய் நாளை வா !" என்று கூறி அரக்கனைக் கொல்லாமல் விடுத்தான்.

இதனைக் கம்பர்,

*"ஆள் ஐயா ! அமைந்தன மருதம் அறைந்த*
*பூளை ஆயின கண்டனை; "இன்று போய் போர்க்கு*
*நாளை வா ! என நல்கினன்......* - முதற்போர் பரிபடலம் 255

இதனைப் பரிமேலழகர்,

*"பேராண்மை யென்ப தறுகணொன் றுற்றகா*
*லூராண்மை மற்ற எஃகு !* ■ படை, செருக்கு

என்ற குறளுக்கு வருமாறு காட்டாக மொழிவர்.

*"ஊராண்மை உபகாரியந்தன்மை; அஃதாவது*
*இலங்கையர் வேந்தன் போரிடைத் தன் றானை*
*முழுதும் படத் தமியனா பகப்பட்டானது நிலைமை*

*நோக்கி, அயோத்தியரிறை மேற்செல்லாது*

*"இன்று போய் நாளை நின் றானை யோடு வா"*

*என விட்டாற் போல்வது; இவை யிரண்டு பாட்டுந் தழிஞ்சி*

- புறப்பொருள் வெண்பாமாலை

செம்மொழி இலக்கியமாம் சங்க இலக்கியத்தில் இதற்கு எடுத்துக்காட்டு உளது.

புறநானூறு பழந்தமிழரின் சிறந்த பெருமிதப் பண்புகளை மொழிவது. புழந்தமிழில் 'வீரம்' என்ற சொல் இல்லை; ஆனால் அதற்கு இணையாகப் 'பெருமிதம்' என்ற சொல் காணப்படுகிறது.

சங்க இலக்கியத்தில் புறநானூற்றில் 'பேராண்மை' என்ற சொல்லுக்கு உண்மையான விளக்கம் காணப்படுகிறது. என்றும் கல்வியில் சிறந்து விளங்கியவருக்கு நன்மதிப்பு எல்லா நாட்டிலும் உண்டு. இதனாலன்றோ வள்ளுவப் பெருந்தகை,

*"யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்*

*சாந்துணையும் கல்லாத வாறு"*

என்று கூறுகிறார். பெருமிதப் பண்பை விளக்கும் தொல்காப்பியர், கல்வியை முதலில் வைக்கிறார். இனி சங்க இலக்கியத்தில் காணப்படும் எடுத்துக்காட்டுப் பாடலைக் காண்போம்.

சோழநாட்டரசன் சேர நாட்டின் மீது படையெடுத்துச் சென்றான். சோழநாட்டு ஏணிச்சேரி முடமோசியார் சேர நாட்டிற்கு வந்து சேர்ந்தார். கல்வியில் சிறந்தவராகிய முடமோசியாருக்குச் சேர நாட்டில் சிறந்த மதிப்பு கிடைத்தது. சேரன் அந்துவஞ்சேரல் இரும்பொறை, சோழ நாட்டுப் புலவராம் முடமோசியாரை அழைத்துக் கொண்டு உப்பரிகைக்குச் (மேல்மாடிக்கு) சென்றான். அங்கிருந்து சோழநாட்டுப் பகை வீரர்களைக் கண்டான். அவ்வமயம் புலித்தோல் கவசம் அணிந்த ஒருவன் ஏறியிருந்த யானை ஒன்று மதம் பிடித்துக் கட்டுக் கடங்காமல் சேர நாட்டுப்படையுள் நுழைய ஓடி வந்தது; "இவன் யார்?" என்று அந்தவஞ்சேரல், முடமோசியாரைக் கேட்டான்.

*விழுநீர் வேலி நாடுகிழ வோனே"*

*"இவன் யார் என்குவை ஆயின், இவனே*

*புலிநிறக் கவசம் பூம்பொறி சிதைய*

*எய்கணை கிழிந்த பகட்டெழில் மார்பின்*

*மறலி அன்ன களிற்றுமிசை யோனே.*

சோழ நாட்டரசன் ஏறியிருந்த களிறு (யானை) மதம் பிடித்து, உன் சேனையை நோக்கி ஓடி வருகிறது. இவனைக் கொல்லாதே ! விட்டு விடு ! என்ற பொருளில் புலவர் முடமோசியார் கூறினார்.

ஆனால், அந்தப் பாட்டில் சேர நாட்டரசன் சோழநாட்டரசனைக் கொல்லாமல் விட்டானா? இல்லையா? என்று தெரியவில்லை !

சங்க இலக்கியம் முழுதும் படித்தவரே அறிவர். பதிற்றுப் பத்து சேர மன்னர்களைப் பற்றியது. முதல் பத்தும், இறுதிப் பத்தும் கிடைக்கவில்லை. ஒன்பதாம் பத்தின் பதிகம் ஓர் உண்மையைக் கூறுகிறது. அது வருமாறு :

*மடியா உள்ளமொரு*
*மாற்றொர் பிணித்த*
*நெடுநுண் கேள்வி*
*அந்துனற்கு ஒரு தந்தை*
*ஈன்ற மகள் பொறையின்*
*பெருந்தேவி ஈன்ற மகன் !*

என்று கூறுவதன் மூலம் அந்தவஞ்சேரல், மாற்றோன் உள்ளத்தைப் பிணித்தவன் என அறிகிறோம். இதனால், பகைவனுக்குக் கேடு ஒன்று நேர்ந்த போது அருளாளும் அரசர்கள் வாழ்ந்தனர் என்று அறிகிறோம்.

மாமன்னன் அலெக்சாண்டர் உலகத்தை எல்லாம் ஒரு குடைக்கீழ்க் கொண்டு வந்து தான் ஆள வேண்டும் என்று எண்ணினான். பஞ்சாப் நாட்டின் ஒரு பகுதியை ஆண்ட சிற்றரசன் 'புருடோத்தமன்' அலெக்சாண்டரை எதிர்த்தான். அவன் நடத்திய யானைப் படையைக் கண்டு அலெக்சாண்டரின் படைகள் அஞ்சி ஓடின. போர் அனுபவமிக்க அலெக்சாண்டர் பீரங்கிகள் கொண்டு எதிர் தாக்கினான். வெடிச் சத்தத்தைக் கேட்ட யானைப்படை பின் நோக்கிச் சிதறி ஓடின. புருடோத்தமனைச் சிறை பிடித்தான். அவனை 'மன்னனாகவே' நடத்த வேண்டும் என்று புருடோத்தமன் கேட்டுக் கொண்ட படியே புருடோத்தமனைக் கொல்லாமல் மன்னனாகவே நடத்தினான்.

வீரர்களை மதித்து நடத்திய போக்கு அக்காலத்தில் காணப்படுகிறது என்பதை அறியலாம்.

# மொழியும் மொழியற்ற மொழியும்

*முனைவர் வி. ரேணுகாதேவி*
மதுரை

மனிதன் தான் படித்ததை, பார்த்ததை, கேட்டதை, உணர்ந்ததை பிறருக்கு உடனடியாக தெரிவிக்க வேண்டும் என்னும் உந்துசக்தியை உடையவனாக இருக்கின்றான். அந்த உந்து சக்தியின் வெளிப்பாடே கருத்துப்பரிமாற்றம் எனப்படுகிறது. இக்கருத்துப் பரிமாற்றத்திற்கானக் கருவியே மொழியாகும்.

ஆதிமனிதன் தன் எண்ணங்களையும், கருத்துக்களையும், பிறருக்குத் தெரிவிக்க குரல் ஒலிகளையும், அங்க அசைவுகளையும் பயன்படுத்தினான். அவன் எழுப்பிய ஒலிகளும், அசைவுகளுமே பின்னாளில் மொழிக் குறியீடுகளாக ஆயின. நாகரிகத்தின் விளைவாக மொழியைக் கற்றுக்கொண்ட மனிதன் தன் அறிவு சார்ந்த எண்ணங்களையும், கருத்துக்களையும் வளர்ந்து வரும் தம் தலைமுறையினர்க்குத் தர நினைத்தான். அதனால் மொழியைக் கல்வெட்டுக்களிலும், ஓவியங்களிலும் ஓலைச்சுவடிகளிலும் பதிப்பித்தான். மொழி வளர்ந்தது.

பண்டைக் காலத்தில் மணவீடுகளில் முழவும், மரண வீடுகளில் சங்கும், கோயில்களில் மணியோசையும் கூட்டத்தைக் கூட்ட அழைப்பொலிகளாகப் பயன்பட்டன. இன்றும் பால்காரன் தம் வருகையை உணர்த்த மணியோசையை எழுப்பிக் கொண்டே வருகிறான்.

மனிதன் தம் கருத்துக்களை 93 விழுக்காடுகள் மொழிசாராக் குறியீடுகள் வழியும் 7 விழுக்காடுகள் மொழிக் குறியீடுகள் வழியும் தெரிவிக்கின்றான். மொழியற்ற மொழி என்பது உடல் உறுப்புக்களான முகம், கண், உடலமைப்பு, கால், கை போன்றவற்றாலும் வண்ணங்கள், வரைபடங்கள், கொடிகள் போன்றவற்றாலும் செய்தியனைத் தெரிவிப்பதாகும்.

உலகம் தோன்றி பல கோடி ஆண்டுகள் ஆகின்றன என்றும், மனித இனம் உலகில் தோன்றி பல இலட்சம் ஆண்டுகள் ஆகின்றன என்றும் அறிவியலார் கூறுகின்றனர். ஆனால் மொழிகள் தோன்றி சில ஆயிரம் ஆண்டுகள் ஆகின்றன. உலகத்திலேயே மிகப் பழமையான கிரேக்கம், லத்தின், சமஸ்கிருதம், தமிழ் போன்றவை கூட 5000 அல்லது மிஞ்சிப் போனால் 10,000 ஆண்டுகளுக்குள் தோன்றியிருக்கக்கூடும் என மொழியியல் அறிஞர்கள் கூறுகின்றனர். அப்படியென்றால் ஆதிமனிதன் பயன்படுத்திய மொழி யாது? மொழிகள் தோன்றுவதற்கு முன்னால் மனிதன் தன் உணர்வுகளை, தேவைகளை வெளிப்படுத்த சைகைகளைப் பயன்படுத்தினான். அதுவே மொழியற்ற மொழி என்றும் மொழிசாராக் கருத்துப் பரிமாற்றம் என்றும் உடல் மொழி என்றும் அறியப்படுகின்றது.

நண்பர் ஒருவர் வீட்டிற்கு வருகிறார். அவரை வரவேற்று காபி அருந்த கொடுக்கின்றோம். 'காபி பிரமாதங்க' என அவர் தமது முகத்தைச் சுழித்துக் கொண்டு கூறுகிறார். அப்படியென்றால் 'காபி' அவருக்குப் பிடிக்கவில்லை என்றுதானே பொருள். சொற்கள் நம்மை ஏமாற்றும் முகபாவம் என்னும் மொழியற்ற மொழி உண்மையை நமக்கு உணர்த்திவிடும்.

தொடர்வண்டியிலோ, பேருந்திலோ பயணம் செய்கின்றோம். அருகில் அமர்ந்திருப்பவர் இரண்டு தும்மல் போடுகிறார். கைகுட்டையை எடுத்து மூக்கைத் துடைக்கிறார். நாம் நம்மையும் அறியாமல் சிறிது நகர்ந்து அமர்ந்து கொள்கிறோம். அதுவும் பன்றிக்காய்ச்சல் பயமுறுத்தலினால் இன்னும் கொஞ்சம் வேகமாகவே நகர்ந்து கொள்கிறோம்.

வகுப்பறையில் ஆசிரியர் பாடம் நடத்திக்கொண்டு இருக்கிறார். நேரம் நண்பகல் ஒரு மணியைக் கடந்து ஓடிக்கொண்டிருக்கின்றது. எதிரில் அமர்ந்திருக்கும் மாணவர்கள் கைக்கடிகாரத்தைப் பார்க்கின்றனர். ஆசிரியர் தொடர்ந்து கொண்டிருக்கிறார். மாணவர்கள் எழுதுகோலையும் நோட்டையும் மூடி வைக்கின்றனர். சோர்ந்து போய் தளர்வாய் உடலை முன்னோக்கி சாய்க்கின்றனர். இக்குறியீடுகளின் பொருண்மையை

உணர்ந்து கொள்ளும் ஆசிரியர் 'மீதியை நாளைக்குப் பார்ப்போம்' என்கிறார்.

நண்பர் ஒருவர் துக்கத்தில் ஆழ்ந்திருக்கிறார். ஆறுதல் சொல்ல அவர் வீட்டிற்குச் செல்லும் நாம் நண்பரின் கையை அழுந்த பிடித்துக் கொள்கிறோம். அந்த தொடுதல் உங்களுக்கு உதவ ஆறுதல் கூற நாங்கள் இருக்கின்றோம் என்னும் செய்தியை நண்பருக்குச் சொல்லாமல் சொல்கின்றது.

இம்மூன்று நிகழ்வுகளிலும் பொருண்மையை உணர்த்தப் பயன்பட்டவை மொழிசாராக் குறியீடுகளே ஆகும். முதலாவது நிகழ்வு அருகில் அமர்ந்திருப்பவர் சளித் தொல்லையால் அவதிப்படுகின்றார் என்ற செய்தியை வெளிப்படுத்துகின்றது. இத்தகவலைப் பெற்ற நாம் நம்மை காத்துக் கொள்ள சிறிது நகர்ந்து அமர்ந்து கொள்கிறோம். எனவே மொழியற்ற மொழி ஆய்வில். இஃது தகவல் நடத்தை (Information Behaviour) என அழைக்கப்படுகின்றது.

இரண்டாவது நிகழ்விலே நேரம் கடந்துவிட்டதை மாணவர்கள் பல்வேறு குறியீடுகளின் வழியாக உணர்த்த முற்படுகின்றனர். அக்குறியீடுகளின் பொருண்மையை உணர்ந்த ஆசிரியர் பாடத்தை முடித்து எதிர்வினையாற்றுகிறார். எனவே இஃது வினையாற்று நடத்தை (Interactive Behaviour) என அழைக்கப்படுகின்றது.

மூன்றாவது நிகழ்விலே உன்னுடைய துக்கத்தை துயரத்தைப் பகிர்ந்து கொள்ள நான் இருக்கின்றேன் என்னும் தகவல் நண்பருக்கு உணர்த்தப்படுகின்றது. எனவே இந்நிகழ்வு தகவல்/செய்தி தெரிவிக்கும் நடத்தை (Communicative Behaviour) என அழைக்கப்படுகின்றது. இந்நிகழ்வுகளில் கருத்தை வெளிப்படுத்தப் பயன்பட்ட மொழி சொற்கள் அல்ல சில சைகைகளே.

ஒருவரைப் பார்த்தவுடன் அவருடன் பேச வேண்டும் பழகவேண்டும் எனத் தோன்றுகிறது. வேறு ஒருவரைப் பார்த்தவுடன் காரணம் தெரியாத ஒரு வெறுப்பு ஏற்படுகின்றது. அவர் பேச

நினைத்தாலும் நாம் விலகிச் செல்கிறோம். இவ்வகையான நேர்வினைக்கும் எதிர்வினைக்கும் காரணமாக இருப்பவை அவர்கள் வெளிப்படுத்திய மொழியற்ற மொழிக் குறியீடுகளே ஆகும். அவை அவர்களுடைய சிகை அலங்காரமாக இருக்கலாம் அல்லது அவர்கள் அணிந்திருக்கும் உடையாக இருக்கலாம் அல்லது அவர்களிடமிருந்து வெளிப்படும் வாசனையாகக் கூட இருக்கலாம். காரணமற்ற விருப்பையும், வெறுப்பையும் உண்டாக்கியது அவர்கள் பேசிய சொற்கள் அல்ல அவர்கள் வெளிப்படுத்திய மொழியற்ற மொழியே.

நீங்கள் ஒரு உறவினர் வீட்டிற்குச் செல்கிறீர்கள். அவர்கள் உங்களிடம், 'இருந்து உணவருந்திவிட்டுச் செல்லுங்களேன்' என்று கூறுகின்றார். இவ்வாக்கியத்தில் அமைந்துள்ள சொற்களின் அமைப்பு, அவற்றின் பொருண்மை ஆகியவற்றின் அடிப்படையில் பார்த்தோமானால் இவ்வாக்கியத்தின் ஒரே பொருள் அல்லது நோக்கம் உங்களைச் சாப்பிட அழைப்பது தான் எனினும், அவ்வாக்கியம் சொல்லப்படும் சூழலும், வெளிப்படுத்தும் உணர்வுகளும் வெவ்வேறு பொருண்மைகளைத் தரும். உணவருந்திவிட்டுச் செல்லுமாறு அவர் வேண்டுகோள் விடுக்கலாம், அது அன்பின் அழைப்பாகவும் இருக்கலாம், ஒரு ஒப்புக்கு அப்படிச் சொல்லி இருக்கலாம் அல்லது அலட்சியமாகக் கூட கூறியிருக்கலாம். உற்றுக் கவனித்தால் இவ்வாக்கியம் உச்சரிக்கப்படும் விதத்தில் அன்பு, பாசம், நட்பு, கருணை, வெறுப்பு அல்லது அலட்சியம் இழைந்தோடுவதைக் கவனிக்கலாம். சொற்கள் உணர்த்துவது மிகக் குறைவுதான். ஆனால் சொற்களுக்கு அப்பாற்பட்ட உணர்ச்சிகள் உணர்த்துபவை ஏராளம். வேறு வகையில் கூற வேண்டுமானால் மொழியால் உணர்த்தப்பட்ட கருத்துக்களை விட மொழியற்ற மொழியால் உணர்த்தப்படும் கருத்துக்களே அதிகம்.

'இருந்து உணவருந்திவிட்டுச் செல்லுங்களேன்' என நம் நண்பர் அல்லது உறவினர் கூறும்போது சொற்களை இன்முகத்தோடு கூறலாம். புன்சிரிப்போடு கூறலாம் அல்லது அச்சமும் கவலையும் கலந்த முகபாவத்தோடு எங்கே இவர் சாப்பிட அமர்ந்து விடுவாரோ என்கிற

பயத்தோடு கூறலாம். 'இருந்து உணவருந்திவிட்டுச் செல்லுங்களேன்' என்கிற வாக்கியத்திற்கு இலக்கண அடிப்படையில் ஒரே ஒரு பொருள்தான் உண்டு. ஆனால் நடைமுறை வாழ்க்கையில் இவ்வாக்கியம் வெளிப்படுத்தப்படும் சூழல், உணர்வு, பாவம் ஆகியவற்றால் உணர்த்தப்படும் பொருண்மை ஏராளம். அதற்கு அடிப்படைக் காரணங்களாக அமைபவை மொழியற்ற மொழி எனப்படும் மொழி சாராக் குறியங்களே!

முதலில் தோன்றியவை மொழிசாராக் குறியீடுகளே ! அதாவது மொழியற்ற மொழியே எனினும் மொழி பற்றிய ஆய்வுகள் நடந்த அளவு மொழியற்ற மொழி பற்றிய ஆய்வுகள் நடைபெறவில்லை. இதற்குக் காரணம் மொழிசாராக் குறியீடுகளினால் ஆன கருத்துப் பரிமாற்றத்துக்கு இரண்டாம் நிலை அந்தஸ்து கொடுக்கப்படுவதே ஆகும்.

ஆரம்ப காலத்தில் மொழிசாராக் குறியீடுகளைப் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டவர்கள், அக்குறியீடுகளின் அமைப்பு பேச்சு மொழியின் அமைப்பை ஒட்டி அமைந்திருப்பதாக எண்ணினர். மொழிசாராக் குறியீடுகள் பற்றிய ஆய்வின் முன்னோடியாகத் திகழ்ந்த ரே பேர்டுவிசில் (Ray Birdwhistell) என்னும் மொழியியல் அறிஞர், மொழியற்ற மொழியிலும் சில அடிப்படை அலகுகள் உண்டு என்று கண்டறிந்தார். அந்தக் கோட்பாட்டினை கைனோசிக்ஸ் (Kinesics) என்று அழைத்தனர். மொழி ஆய்வில் அடிப்படை அலகுகளான ஒலி, ஒலியன், உருபன் என்பவற்றுக்கு இணையாக மொழியற்ற மொழி ஆய்வில் அடிப்படை அலகுகளாக கைனே (Kine), கைனமெஸ் (Kinemes), கைனோமார்ப் (Kinemorph) என்பனவற்றைக் கருதினார். இவ்வலகுகள் மொழியற்ற மொழியின் அடிப்படை அசைவுகளை விவரிக்க பயன்படுபவையாக அமைந்தன. எனினும் இக்கோட்பாடு மொழியற்ற மொழி உணர்த்தும் கருத்துக்களை முழுவதுமாக விவரிக்கும் நிலையில் இல்லை. எனவே இக்கோட்பாடு தோல்வி என்றே கருதப்பட்டது.

அடுத்ததாக மொழியற்ற மொழியில் பயன்படுத்தப்பட்ட இடத்தையும், காலத்தையும் அடிப்படையாகக் கொண்டு எட்வர்டு டி.ஹால் (Edward T. Hall) என்பவர் பிராக்ஸிமிக்ஸ் (Proximics) என்னும் கோட்பாட்டை உருவாக்கினார். இக்கோட்பாடும் மொழியின் அடிப்படை அலகுகளான ஒலியன், உருபன், தொடர் ஆகியவற்றிற்கு இணையாக ஐசோலெட்ஸ் (Isolets), இணைகள் (Sets), பேட்டர்ன்ஸ் (Patterns) என்னும் அலகுகளால் ஒப்புமைப்படுத்தப்பட்டன. இவையும் மொழியின் கடுஞ்சிக்கல்களை தீர்க்கப் பயன்படவில்லை என்ற காரணத்தால் பிராக்ஸிமிக்ஸ் கோட்பாடும் தோல்வியுற்ற கோட்பாடு எனக் கருதப்பட்டது.

இக்கோட்பாடுகளைத் தொடர்ந்து மொழிசாராக் கருத்துப்பரிமாற்றக் குறியங்கள் எவ்வாறு வெளிப்படுத்துகின்றன என்பதை அடிப்படையாகக் கொண்டு மொழிசாராக் கருத்துப்பரிமாற்ற குறியீடுகள் நான்கு வகைக் குறியங்களாகப் பகுக்கப்பட்டன. அவை

1. செய்தல் குறியங்கள் (Performance Codes)
2. கலைப்பொருட் குறியங்கள் (Artifactual Codes)
3. வரைபடங்கள் குறியங்கள் (Mediatory Codes)
4. இடம் காலக் குறியங்கள் (Spatio-temporal Codes)

என்பனவாகும்.

முகம், கை, கண், குரல், கால் ஆகிய உறுப்புகளின் அசைவுகளால் வெளிப்படுத்தப்படும் பொருண்மைகள் செய்தல் குறியங்கள் பாற்படும்.

*கண்ணொடு கண்ணினை நோக்குஒக்கின் வாய்ச்சொற்கள்*
*என்ன பயனும் இல*

கண்ணே சொல்ல வேண்டிய செய்தியை சொல்லிவிட்டதால் சொற்களுக்கு அங்கே பயன் இல்லாமல் போய்விட்டது.

அணிந்திருக்கும் ஆடைகளும், ஆபரணங்களும், வீட்டிலுள்ள பொருட்களும், செய்திகளை வெளிப்படுத்துவனவாக அமைகின்றன. இவை கலைப்பொருட் குறியங்கள் பாற்படும். சமுதாயத்தில் ஒரு மனிதனின் நிலையை வெளிப்படுத்துபவையாக இக்கலைப்பொருட் குறியங்கள் அமைகின்றன.

தொலைக்காட்சியில் செய்தி வாசிப்பின்போது பங்குச் சந்தை நிலவரத்தைப் பற்றி அறிவிக்கும்போது ஒரு வரைபடத்தைக் காண்பிக்கின்றனர். அவ்வரைபடம் ஒவ்வொரு மணித்துளியிலும் பங்குச்சந்தையின் நிலவரம் என்ன என்பதை பொதுமக்களுக்குத் துல்லியமாக உணர்த்துகின்றது. இத்தகைய வரைபடங்கள், புகைப்படங்கள் வழியாக உணர்த்தப்படும் செய்திகள் வரைபடக் குறியங்கள் பாற்படும்.

இன்றைய சூழலில் தொலைபேசிவழி செய்தி பரிமாற்றம் என்பது சர்வ சாதாரணமாகிவிட்டபோதிலும், நடுநிசியில் ஒரு தொலைபேசி அழைப்பு என்பது மனதில் ஒரு திடுக்கிடலை ஏற்படுத்துகின்றது. தொலைபேசி அழைப்பு வந்த நேரம் செய்தியின் அவசரத் தன்மையை உணர்த்துகின்றது. அதேபோல இரு நபர்களுக்கு இடைப்பட்ட இடைவெளி கூட சில செய்திகளை உணர்த்துபவையாக இருக்கின்றன. இத்தகைய குறியீடுகள் இடம் காலக் குறியங்கள் எனப்படும்.

கருத்துக் கருவூலமான திருக்குறளும் மொழியற்ற மொழியைப் பற்றிய கோட்பாடுகளைச் சுட்டத் தவறவில்லை. இன்பத்துப்பாலை அதுவும் குறிப்பறிதல் என்னும் அதிகாரத்தில் உள்ள பெரும்பான்மையான குறட்பாக்கள் மொழியற்ற மொழியைப் பற்றியே பேசுகின்றன.

*அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்*
*கருத்தது காட்டும் முகம்* (குறள் - 706)

என்னும் குறள்வழி உள்ளத்து உணர்வுகளை முகம் காட்டிவிடும் என்கிறார் வள்ளுவர்.

சங்க இலக்கியங்களும் மொழியற்ற மொழியினைப் பயன்படுத்தி செய்திகளை வெளிப்படுத்தியுள்ளன. தலைவன் தான் விரும்பிய தலைவியை அடைய முடியாத நிலையில், பனைமடலில் குதிரை செய்து அக்குதிரையின் மேல் தலைவியின் படத்தை வரைந்து வீதியில் வலம் வருவான். இதைக் கண்ட மக்கள் அச்சித்திரத்தின் வழி அவன் உள்ளம் கவர் தலைவி யார் என அறிந்து, தலைவன் மடலேறுதல் காரணத்தை தலைவியின் பெற்றோரிடம் கூறி இருவரையும் சேர்த்து வைக்க முயற்சி செய்வர் என்பதை,

*அறிகதில் அம்ம இல்ஊரே மறுகில்*
*நல்லோன் கணவன் இவன் எனப்*
*பல்போர் கூறியாம் நாணுகம் சிறிதே*
*மாஎன மடலும் ஊர்ப்பூ எனக்*
*குவிமுகிழ் எருக்கங் கண்ணியும் சூடுப*

என்னும் குறுந்தொகைப் பாடல் வழி அறியலாம். சங்க காலத்தில் காதலில் தோல்வியுற்ற ஆண்மகனை அவன் ஏறிய மடல் உணர்த்தியது. இந்த காலத்தில் தோல்வியுற்றவன் அவனுடைய சீர்செய்யப்படாத தாடி உணர்த்துகின்றது.

ஒருவர் தம் கருத்துக்களை உணர்த்த மொழிக் குறியீடுகளான சொற்களே அதிகம் பயன்படுத்தப்படுகின்றன என்னும் கோட்பாடு உண்மையல்ல, மொழியற்ற மொழியின் வழியாக உணர்த்தப்படும் கருத்துக்களே அன்றாட வாழ்வில் அதிகம். ஒரு கருத்துக்கு வலிமை சேர்ப்பதும், மறுப்பதும், எதிர்ப்பதும் மொழிசாராக் குறியீடுகளே என்பது மேல் சுட்டப்பட்ட கருத்துக்களின் வழி பெறப்படுகின்றது.

# தமிழோடு வாழ்வு

தெள்ளு தமிழேயுனை அறிந்தேன் தாயாய் நீ
அள்ளியணைத்திட வளர்ந்தேன் - உன்னை
அன்றாடம்புகழ் பாடநினைத்தேன் - என்

பிள்ளை தமிழால்கவி கொடுத்தே னுந்தன்
சொல்லால் 'பா' மாலைத்தொடுத்தேன் - இந்த
செல்வங்கிடைக்க கைகுவித்தேன்!

தமிழ் நெஞ்சத்தால்உன் தாள்பணிந்தே னென்றும்
தஞ்சம் அடைந்தேன் - நீ
தந்தக் கவியிலுரைத்தேன் - கனி

அமிழ்தாய் நாவூற கரைத்தே னுனையே
அற்புதக்கவியாய் வடித்தேன் - நல்ல
சொற்பதங்கொண்டு பதித்தேன்!

தென்றல் தோய்ந்துவந்த தமிழ்நுகர்ந்தே னந்த
தெம்மாங்கிசையோடு கரைந்தேன் - நல்ல
தென்பாண்டித்தமிழை சுவைத்தேன் - இனிது

இன்தமிழ் மொழியென மகிழ்ந்தே னொருசில
இருதலைக் கொல்லிகளை கலைந்தேன் - மொழி
இருதயவுணர்வென மொழிந்தேன்!

விளைந்த சுரக்காயில் விதைவேறா! புரிந்தேனடி
வாழைக்கும் தமிழுரம்வைத்தேன் - நான்
வணங்குமொழி வளரவுழைத்தேன் - இந்த

கலைமகள் கடல்தாண்டியும் செழிப்பதாய் நிறைந்தேன்
உள்ளத்தாற் பூச்சொரிந்தேன் - என்
உயிர்தமிழால்தலை நிமிர்ந்தேன்!

*- கவிஞர் வீ. மருதையன்*

# செந்தமிழ் நாடு

*ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை*

"செந்தமிழ் நாடு வைகையாற்றின் வடக்கும், மருதயாற்றின் தெற்கும், கருவூரின் கிழக்கும், மருவூரின் மேற்குமாம்" என்பர் சேனாவரையர். இவ் வரையறை முச்சங்க காலத்திற்கும் ஒத்ததா அன்றா என்பதே ஈண்டு நாம் ஆராயப்புகுந்தது.

முச்சங்கத்துள், முதற்சங்கம் தென்மதுரையிலும், இடைச்சங்கம் கபாடபுரத்தும், கடைச்சங்கம் உத்தரமதுரையிலும் இருந்தனவென்பது இறையனாரகப் பொருளுரை, சிலப்பதிகாரவுரை முதலியனவற்றுற் பெறப்படுகின்றது. அவற்றுள், தென்மதுரையும் கபாடபுரமுங் கடல்கொண்டழிந்தன. எஞ்சியுள்ளது உத்தரமதுரையே.

தொல்காப்பியம் முதற்சங்கத்திறுதிக் காலத்திலே செய்யப்பட்ட தென்பதும், அஃது இடைச்சங்கம் கடைச்சங்கமிரண்டுக்கும் நூலாயிற்றென்பதும், இறையனாரகப் பொருட் பாயிரவுரையாலும், சிலப்பதிகாரத்து வேனிற்காதை யுரையாலும் விளங்குகின்றன.

முதற்சங்கத்திறுதிக் காலத்தே செய்யப்பட்ட தொல்காப்பியத்திலே, செந்தமிழ் நாடெனக் கூறப்பட்டது, வைகையாற்றின் வடக்கின் கண்ணேயுள்ள நாடாயின், முதற்சங்கமிருந்த தென்மதுரை கொடுந்தமிழ் நாட்டிலுள்ளதாதல் வேண்டும். செந்தமிழ் மாந்தராகிய சான்றோர் கொடுந்தமிழ் நாட்டிற் சங்கமிருந்தாரென்பது அவர்தம் பெருநெறிக்கேற்புடைத்தாகாதன்றோ? அதுவுமன்றிச் செந்தமிழ்ச் சங்கத்தைத் தன்னகத்தே கொண்டு தன்மாட்டு வாழும் மக்களைச் செந்தமிழ் வழங்குஞ் சான்றோராக்கிய நாடு கொடுந்தமிழ் நாடெனப் போகாதன்றோ? ஆதலிற் சங்கமிருந்து தமிழாராய்ந்த நாடே செந்தமிழ் நாடெனப்பட்டதாம்.

தென்மதுரையும் கபாடபுரமுங் கடல்கொள்ளப்பட்ட நகரங்களாதலின், அவை இப்போதுள்ள குமரிக்கும் ராமேச்சுரத்திற்கும் தென்பாலிற்கிடந்தன வாதல் வேண்டும். அற்றாயின்,

*"அவற்றுள் இயற்சொற்றாமே*
*செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணி"*

என்னுஞ் சூத்திரவுரையிற் கூறப்பட்ட செந்தமிழ் நிலத்தெல்லை வழுவாம். என்னை? தொல்காப்பியனார் நூல் செய்த காலத்திலே செந்தமிழ் நிலமென அவராற் சுட்டப்பட்டது கடல்கொண்ட தென்மதுரையாமன்றோ. அவர் காலத்தேதானே அஃதழிந்தொழிய்க் கபாடபுரம் இடைச்சங்கத்திற்கு இடமாயிற்று. ஆதலும் அக்கபாடபுரத்தையுடைய நாடே செந்தமிழ் நாடாயிற்று. அதனைச் சூழ்ந்து கிடந்த நிலம் பன்னிரண்டுமே :

*"செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்"*

என்னுஞ் சூத்திரத்தாற் கருதப்பட்டனவாதல் வேண்டும். அற்றேல், இச் சூத்திரம் தென்மதுரை அழிந்த பின்னர்க் கபாடபுரத்துக்கேற்பத் தொல்காப்பியனாராலே இயற்றப்பட்டதாதல் வேண்டும். அற்றன்றேல், பன்னிரு நில மென்பது, செந்தமிழ் நாடுயாது அதனைச் சூழ்ந்து இராசி சக்கரம் போற் பன்னிருதிசைக்கண்ணுமுள்ள நாடுகளையே பொதுமையிற் குறித்ததாதல் வேண்டும்.

கபாடபுர நாட்டைச் சூழ்ந்த நாடுகளே தொல்காப்பியனாராற் குறிக்கப்பட்டனவாயின், சேனாவரையர் கூறிய பன்னிரு நிலங்களும் பொருந்தாவாம். "செந்தமிழ் சேர்ந்த பன்னிருநிலத்தும்" என்பது பொதுமையிற் கூறப்பட்டதாயின், சேனாவரையர் கூறிய பன்னிருநிலங்களும் கடைச்சங்கமிருந்த உத்தரமதுரை நாட்டைச் சூழ்ந்தனவாமாதலின் அவர் உரை பொருத்தமுடையதேயாம்.

சேனாவரையர் கூறிய செந்தமிழ் நிலத்தெல்லையும், அந்நிலத்தைச் சூழ்ந்து தென்கீழ்பான் முதல் வடகீழ்பாலிறுதியாகவுள்ளன என அவர் கொண்ட பன்னிரு நிலமும் வருமாறு :

<table>
<tr><td>சீதநாடு</td><td>பூமிநாடு</td><td>மலைநாடு</td><td>அருவா நாடு</td></tr>
<tr><td>கற்கநாடு</td><td colspan="2" rowspan="2">மருதயாறு<br>செந்தமிழ் நிலம்<br>வைகையாறு</td><td>அருவாவடதலை<br>(வடகீழ் பால்)</td></tr>
<tr><td>பன்றிநாடு</td><td>பொங்கர் நாடு<br>(தென்கீழ்பால்)</td></tr>
<tr><td>குட நாடு</td><td>குட்ட நாடு</td><td>தென்பாண்டி<br>நாடு</td><td>ஒளி நாடு</td></tr>
</table>

நச்சினார்க்கினியரும் இப்பன்னிரண்டையுமே செந்தமிழ் நிலத்தைச் சூழ்ந்த நாடுகளாகக் கூறி அவற்றைச் சூழ்ந்த பன்னிரண்டையுமுடன் கூறினார். அவையாவன : சிங்களம், பழந்தீவு, கொல்லம், கூபம், கொங்கணம், துளுவம், குடகம், கருநாடகம், கூடம், வடுகு, தெலுங்கு, கலிங்கம் என்பனவாம்.

பழந்தீவு, குமரிக்கும் சிங்களத்திற்கும் இடையே சமுத்திர மத்தியிற் கிடந்து காலாந்தரத்திற் கடல்கொண்டழிந்தது. அஃதொழிந்த மற்றைய நாடுகளெல்லாம் பெரும்பாலும் தத்தம் பெயராலேயே வழங்குவனவாய் இன்றுமுள்ளன.

இதுகாறுங் கூறியவாற்றல், சேனாவரையர் உரைத்த பன்னிரு நிலமுங் கடைச்சங்கமிருந்த உத்தரமதுரைநாட்டைச் சூழ்ந்தனவென்பதும், தொல்காப்பியர் கூறிய செந்தமிழ் நிலமென்பது தமிழ் நாட்டிடைச் செந்தமிழ் வழங்கும் நிலம் யாது அது செந்தமிழ் நிலமாமெனப் பொதுமை குறித்ததென்பதும், அது காலந்தோறும் வேறாகிவருகின்ற தென்பதும், ஒருதலையாகத் துணியப்படும்.

# தமிழ்ச்சங்கம்

வா. குலாம் காதிறுநாவலன்

தென்கடல் கிடந்த சீர்சான் பண்பொடு விளங்குமிப் பரதகண்டத்துத் தக்கணம் வழங்குந் தண்டமிழ் மொழிக்குத் தொன்றுதொட்டுண்டாயிருந்த சங்கங்கள் மூன்று. அவை நீண்ட காலமிடையீடுபட்டு ஒன்றன்பின்னொன்றாய் நிகழ்ந்தன வாகலின் தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் எனப் பெயர்பெற்றன. அகத்தியமுனிவர் வடதிசை விடுத்துத் தென்றிசைப்புக்குப் பொதியம் வதிந்தபின், சுப்பிரமணியரிடம் தாங்கற்ற தமிழ்க்கு இலக்கணஞ் செய்வான் றொடங்கித் தம்பெயரானே அகத்தியம் எனவொரு நூலியற்றினர். அது பன்னீராயிரஞ் சூத்திரங்களை யுடைத்தெனவும், சிறுமை பெருமைகளைக் குறிக்கும் இருபெயர்ப்பிரிவிற்றெனவும், சிறுமை பெருமைகளைக் குறிக்கும் இருபெயர்ப் பிரிவிற்றெனவுங் கூறுவர். அவ்வகத்தியத்துள் இயலிசை நாடக மென்னும் மூவகைத் தமிழும் விரவியுள்ளனவாம்.

அங்ஙனமனர் தாஞ் செய்த அகத்தியமென்னுமிலக்கணநூலைத் தம் பாற் பயிலும் தொல்காப்பியன், அதங்கோட்டாசான், துராலிங்கன், செம்பூட்சேய், வையாபிகன், வாய்ப்பியன், பனம்பாரான், கழாரம்பன், அவினயன், காக்கைபாடினியன், நற்றத்தன், வாமனன் என்னும் பன்னிரு மாணாக்கர்க்குக் கற்பித்தனர். அகு கற்றவிப்பன்னிருவருன் முதல்வராய தொல்காப்பியரென்பார். அவ்வகத்தியத்துக் கிடந்த தமிழ் மூன்றனுள் இயற்றமிழை வேறுபிரித்துத் தமி பெயரானே தொல்காப்பியம் எனவொரு நூல் செய்தருளினார். அதுவே இயற்றமிழிலக்கணங் கூறு நூல்களுன் முதன்மையுஞ் சிறப்பும் வாய்ந்தது. ஏனைய மாணாக்கரும் தத்தம் பெயரானே வேறு வேறு நூல்கள் செய்தனர். அப்பன்னிருவருமொருங்கிருந்து புறப்பொருட் பன்னிருபடலம் எனவுமொரு நூல் செய்துள்ளார். இவைகளே தமிழ்க்கு ஆதி நூல்கள்.

அக்காலத்திருந்த காய்சினவ ழுதியென்னும் பாண்டியனானே தக்கண மதுரைக்கண் ஆதியிலொரு தமிழ்ச் சங்கம் நிறுவப்பட்டது. சங்கமென்று வழங்கு மூன்றற்கும் அதுவே முந்தியதாகலின், அதனைத் தலைச்சங்கம் என்பர். அச்சங்கத்திருந்து தமிழ் ஆராய்ந்தார் ஆசிரியர் அகத்தியராதிப் பலர். தொல்காப்பியமும் ஏனைப்பதினொருவர் நூல்களும் அச்சங்கத்தின் கண் அரங்கேறின. அச்சங்கமிருந்து தமிழாராய்ந்தார் பலரானே பல நூல்களுஞ் செய்யப்பட்டன.

அத்தலைச்சங்கம் காய்சினவழுதி முதற் கடுங்கோன் வழுதி காலம் வரையும் இருந்தொழிந்தது. அதன் பின்னர் அக்காலத்திருந்து வெண்டேர்ச் செழியனென்னும் பாண்டியனானே கபாடபுரத்தின்கண் ஒரு தமிழ்ச் சங்கம் நிறுவப்பட்டது. இதுவும் மூன்றற்கு மிடைக்கண்ணதாகலின், இதனை இடைச் சங்கமென்பர். இச்சங்கத்திருந்து தமிழாராய்ந்தார் ஆசிரியரகத்தியனாரும், அவர் மாணாக்கர் தொல்காப்பியரும், ஏனைப் பல்லாசிரியரும். இச்சங்கத்திற்கு ஒரு நூல் அகத்தியமும் தொல்காப்பியமும் தலைச்சங்கத்தரங்கேறியன. இச்சங்கத்தின்கண்ணும் பல நூல்கள் அரங்கேறின. இச்சங்கத்துப் புலவர்களும் பல நூல்கள் செய்து வைத்தனர்.

இவ்விடைச் சங்கமிருந்த கபாடபுரம் கடற்கோட்பட்ட பின் அக்காலத்திருந்த முடத்திருமாறனென்னும் பாண்டியனானே வடமதுரைக்கண் ஒரு சங்கம் நிறுவப்பட்டது. இச்சங்கமிருந்து தமிழாராய்ந்தார் திருமோதாவி யார், கபிலர், பரணர், நக்கீரர், கல்லாடராதிப் பல்லாசிரியர். இச்சங்கத்திற்கு நூல் தொல்காப்பிய மாதிப் பிற. இச்சங்கத்தின்கண் அரங்கேறிய நூல்கள் பல. அவற்றுள் திருவள்ளுவர் குறளே பிந்தியதாம். இச்சங்கத்து நல்லிசைப்புலவர் பலர் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கென்று சிறந்த இலக்கியங்களைச் செய்தருளினர். இச்சங்கத்தார் ஆண்டாண்டுச் சிதறி மறைந்து கிடந்த நூல்களை யொருங்கு சேர்த்துத் தமிழைப் பெரிதும் பரிபாலித்தனர். இச்சங்கம் உக்கிரப்பெருவழுதி காலம் வரையுமிருந்து, குறளரங்கேறுங்காற் கர்வங்குன்றி யொழிந்ததாம். இச்சங்கமொழிந்து இதுகாறும் ஈராயிரம் யாண்டாயின. இவ்வீராயிரம் யாண்டினும் பிறிதோர் சங்ககுண்டுபடாமையான் இதுவே கடைச்சங்கமாயிற்று.

இக்கடைச்சங்கமொழிந்தபின் தமிழ்ப் பரிபாலனத்திற்கு வேறு சங்கமொன்றிலதாயினும், சமணவித்துவான்கள் எழுந்து தமிழை வளர்ப்பாராயினர். அவர்கள் அரும்போரிலக்கிய இலக்கண நூல்களைச் செய்து வைத்தனர். தமிழ் கற்பான் புகும் மாணாக்கருக்கு வாய்ப்புடையனவாய திவாகரம் நிகண்டு முதலிய இலக்கிய நூல்களையும், நன்னூல், நாற் கவிராசநம்பியகப்பொருள், காரிகை, யாப்பருங்கலம் என்பன முதலிய இலக்கண நூல்களையும் செய்தார் சமணரே. சிந்தாமணி முதலிய பெருங் காப்பியங்களும், நீதிநூல்களும் அச்சமணர்களானே செய்யப்பட்டன. கடு நடையவாய இலக்கிய இலக்கண நூல்கள் பலவற்றிற்கு உரையெழுதினாரும் சமணரே.

சமணர் காலம் சென்றபின், சேர சோழ பாண்டி நாடுகளின் ஆங்காங்குப் பெரும்புலவர் பலர் எழுந்தருளியுள்ளனர். காலந்தோறும் இலக்கிய இலக்கண நூல்களும் புராண காவியங்களும், பிரபந்தங்களும் பல அப்புலவர்களானே செய்யப்பட்டன. வடக்கே தொண்டைமண்டலத்தினும் தெற்கே ஈழமண்டலத்தினும், செந்தமிழ் சிறப்புறப் பல கவிவல்லார் அவதரித்து விளங்கினர். அவர்களும் பல அரும்பெருநூல்களைச் செய்து தமிழை வளர்த்தனர். அதன்பின் ஆண்டாண்டு ஆதினமடங்களுண்டாய்த் தமிழ்ப் பரிபாலனம் பண்ணின. சில பல இலக்கிய இலக்கண நூல்களும் அவ்வாதீன மடத்தாராற் செய்யப்பட்டன.

தலையிடைகடை யென்னுஞ் சங்கங்கண் மூன்றன் காலத்துட் கடைச் சங்கமல்லாக் காலத்தனவாய எண்ணிறந்த நூல்கள் கடற்கோட்பட்டும் தீக்கோட்பட்டு மில்லாதொழிந்தன. கடைச்சங்க காலந்தொட்டுண்டாய சில பல நூல்களே தமிழுக்குப் பேராதரவாய் ஆங்காங்கு மறைந்து கிடந்தன. அகத்தியம்போலத் தொல்காப்பியமு மிறந்துபடாமல் தலைச்சங்ககாலந்தொட் டிதுகாறும் நிலைத்திருந்தது தமிழ்மாது செய்த தவப்பலனேயாம். அத்தொல்காப்பியமும் அதன்வழியவாய பிறவிலக்கணங்களும் இலக்கியங்களும் இறவாது காக்கப்பட்டிருந்தும், அவை எளிதிற் கிடைப்பன வல்லவாய்க் கற்பார்க்கரியவாய் ஆங்காங்கருகியிருந்தன. அங்ஙனமிருந்த வந்நூல்கள் எவர்க்குங் கிடைத்தற் கெளியவாக யாழ்ப்பாணத்து ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுக நாவலர், ஸ்ரீலஸ்ரீ சி.வை.தாமோதரம்பிள்ளை என்னும் புலவர்

பெருமான்கள் தோன்றி அவற்றைப் பாடுபட்டுத் தேடிப் பொறுக்கியச்சேற்றி யாண்டும் பரத்தினர். சங்கமீரிஇய இலக்கியங்களுள் அவ்விருவர் கையினு மகப்படா தொழிந்த சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, பத்துப்பாட்டு, புறநானூறு முதலிய நூல்களைத் தற்காலம் கும்பகோணத்துத் துரைத்தன வித்தியாசாலைத் தமிழ்ப் பண்டிதராயிருந்து விளங்கும் பிரம்மஸ்ரீ உ.வே.சாமிநாதையரவர்கள் மிக்க பிரயாசையுடன் தேடியெடுத்துப் பழுதின்றி யச்சேற்றித் தமிழுலகிற்குத் தந்தருளினார்கள். இன்னுமிக்காரியத்திலேயே முயன்று நிற்கின்றார்கள். இத்தகைய வுத்தம வித்துவரத்தினங்கள் இவ்வரும்பெருங் கருமத்தைச் செய்யாதொழியின் பண்டைய இலக்கிய விலக்கணங்களை இக்காலத்தார் காண்பதரிதாய்விடும். அரசான பாஷையாகிய ஆங்கிலமே யாண்டும் வழங்கப் போந்த இக்காலத்து இப்புண்ணிய புருஷர்கள் செய்த பேருதவியானே எண்ணிறந்த நூல்கள் யாண்டும் நின்று நிலவத் தமிழ் தலைநிமிர்ந்த நிற்கின்றது.

இக்காலத்துத் தமிழ் இங்ஙனம் வளம்பெற்றுக் கற்பிக்கத்தகுமாதிரியரும் கற்றற்குரிய நூல்களும் யாண்டும் பல்கியிருந்தும், கற்பார் மிக அருகியுள்ளார். எம் இஸ்லாம் மார்க்கத்தாரிற் பலர் தமிழ்ப் புலவராயிருத்தற்கு மிக விரும்புறுகின்றனர். உற்றென்? கற்றுவல்லாரைச் சேர்ந்து கற்றன்றோ புலவராதல் வேண்டும்? கற்பிக்கத் தகுவோர் நல்லாசிரியன்பாற் சென்று திவாகரம் நிகண்டு முதலியவற்றைக் கற்று, நைடதம், இராமாயணம், கந்தபுராணம், திருவிளையாடல் முதலிய காவியங்களிற் பயின்று ஒருவாறிலக்கிய மைந்தபின் நன்னூல், நம்பியகப்பொருள், காரிகை, தண்டியலங்கார மென்னு மிலக்கண நூல்களைக் கற்றுப் புலமை பெறவேண்டும். இவ்வளவில் எழுத்துச் சொற்பொருள் யாப்பணி யென்னு மிலக்கணப் பாகுபாடுகளினிது புலப்படும். பின்னுங் கற்றல் வேண்டுமாயின், தொல்காப்பியம், இலக்கண விளக்கம், இலக்கணக் கொத்து, வீரசோழியம், பிரயோகவிவேகம், நேமி நாதம், யாப்பருங்கலம், சூத்திரவிருத்தி யென்னு மிலக்கண நூல்களினும், பஞ்சகாவியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க் கணக்கு என்னுமிலக்கிய நூல்களினும் புலமைத்தன்மை மிக்க இன்றியமையாத வேறு பல நூல்களினும் பழகிப் புலமை நிரம்பல் வேண்டும். எம் இஸ்லாமானவர்களுள் பண்டிருந்த புலவர் பலரும் இவ்வரன்முறையே கற்றுக் கவிவல்லராயிருந்து விளங்கினர். இங்ஙனங்

கல்லாது கற்றார் போன்று செருக்குற்று நடித்து, எழுத்து விதியை யினைத்தென்றுணரா முன்னரே இலக்கண வித்துவானென்று இறுமாந்து பெரிய பிரபந்தங்களையுஞ் சார்த்து கவியாகப் பாடி யச்சேற்றி, கற்றாரைத் தூற்றினோமாயின், நாமும் கற்றாருள் வைக்கப்படுவோமெனத் தூற்றுதலைத் தலைக்கொண்டு, தகாத பட்டங்களையுந் தாமாகச் சூட்டிக் கொண்டு திரி வாராயிற் புலவராவரா ! இப்படிப்பட்டார் பலரை எம் இஸ்லாமாணவர்களுள் எம்மூர்ப்பகுதிகளிற் பரக்கக்காணலாம். இன்னோர்க்கு "இல்லா வொருவன் றகைமைறலைப்பெய்து, சொல்லாடச் சோர்ப்படும்" என்று அறிவு கொளுத்துவார் இலர். கல்லாதார் கற்றாரென்று பட்டஞ் சூட்டிக்கொள்ளுதல் குற்றமாமெனத்துரைத்தனச் சட்டமுமொன்றின்று. இம்மகான்களானே தற் காலம் தமிழருமை கெடற்பாலதாயிற்று. கற்றாரும் கல்லாதாரும் ஒப்ப மதிக்கப்படுவாராயினர். கற்றேமென்பாரைப் பரிக்கை பண்ணி அரங்கேற்றுச் சிறப்புப் பெயர் கொடுத்தற்குப் பண்டுபோ லொரு தமிழ்ச் சங்கம் இல்லா திருந்ததொன்றே அன்னார் இங்ஙனமாதற்குக் காரணமாம்.

இவ்வாறாய இக்காலத்து முன்னைய சங்கமிருந்த மதுரை மாநகரத்தின் கண் நாலாவதாக ஒரு சங்கம் நிறுவப்பட்டது கல்விமான்கள் யார்க்கும் பெருமகிழ் தந்தது. இச்சங்கம் "மதுரைத் தமிழ்ச் சங்கம்" எனப்படும். இச்சங்கமிரீஇயினோர் பண்டைக் காலந் தண்டமிழ் வளர்த்த பாண்டியரனைவரு மோருருக்கொண்டுதித்தாங்கு முகவையம்பதியில் அவதரித்த அரசவள்ளலும், பாலவனத்தத்தராதல மன்னருமாகிய ஸ்ரீமாந். பாண்டித்துரையவர்கள். இச்சங்கமிருந்து தமிழாராய்வார் சங்கமிரீஇய பாண்டித்துரைத் தேவர்களும், தமிழாசிரியர் இராகவையங்காரும், வேறு பல நல்லிசைப் புலவர்களுமாம். இச்சங்கப் புலவர் இக்காலத்திற்கேற்ப நான்கு வகைப்படுவர் : தமிழ் மாத்திரையே கற்றுவல்லாரும், தமிழும் ஆங்கிலமு மொருசேரக்கற்று வல்லாரும், தமிழும் சம்ஸ்கிருதமும் ஒருசேரக்கற்றுவல்லாரும், சமஸ்கிருதமு மாங்கிலமு மொருசேரக்கற்றுவல்லாருமென. இச்சங்கத்திற்கு நூல் தொல்காப்பியமாதி யிலக்கணங்களும் சிந்தாமணி யாதி இலக்கியங்களுமாய்த் தற்காலத்து வழங்கு மத்தனை நூல்களுமாம். இனியிச்சங்கத்துப் புலவர் களானே பல நூல்களுமுரைகளுஞ் செய்யப்படும். ஆங்காங்குள்ள புலவர் பலர் இனிச் செய்யும் நூல்களும்

இச்சங்கத்தின் கண்ணே வந்தரங்கேறும். இனிப் புலவராவார் இச்சங்கத்திற் பரிக்கை கொடுத்துச் சிறப்புப் பெயர் பெறுவர். நூல் செய்வாரும் உரைசெய்வாரும் புலவர்கட்கு இச்சங்கம் பரிசிலும் பட்டமுமளிக்கும். இச்சங்கம் தமிழ் கற்பார்க்கின்றியமையாவுதவிகளைச் செய்யும். பண்டைய நூல்களாயுள்ளவைத் தேடியாராய்ந்து இச்சங்கம் வெளிப்படுத்தும். இச்சங்கத்தைச் சார்ந்து வித்தியாசாலையும் புத்தகசாலையும் உள. கற்பார்க்கவசியம் வேண்டற்பாலதா மிச்செந் தமிழென்னும் பத்திரமும் இச்சங்கத்தின்கணுளது. இன்னுஞ் சொல்லாதன வாமெல்லார்க்கருமங்களையு மிச்சங்கஞ் செய்து தமிழைப் பரிபாலிக்கும்.

*''புகழுந்த தருமநெறி நின்றோர்பொய் காம*
*மிகழுஞ் சினஞ்செற்ற மில்லோர் - நிகழ்க லைக*
*ளெல்லா முணர்ந்தோ ரிருந்த விடமன்றோ*
*நல்லா யாவைக்கு நலம்''* என்ற நல்லவையும்

*''நலனடக்கஞ் செம்மை நடுவுநிலை ஞானங்*
*குலனென் றிவையுடையோர் கோதில் - புலனில்லோர்*
*சென்று மொழிந்தனவுங் கேட்போர் செறிந்தவிட*
*மன்றோ நிறைந்தன வவை.''* என்ற நிறையவையும்

இச்சங்கமேயாம். இச்சங்கத்தை முன்னையசங்கங்கண் மூன்றனோடொருங் கெண்ணி நாலாவது சங்கமெனலே தகும். இக்காலத்து இச்சங்கமுண்டானது தமிழுலகு செய்த புண்ணியப்பேறேயன்றிப் பிறிதன்று. ஆகலின், இச்சங்க மிரீஇய ஸ்ரீமாந் தேவரவர்களும், இச்சங்கமிருந்து தமிழராயும்புலவர் பெருமான்களும் நீண்டவாயுளினராயிருப்பார்களாக. இச்சங்கம் பல நூறாண்டளவாய் நின்று நிலவுவதாக. இச்சங்கத்தைப் போற்றுவாரெவரும் புகழ் பெறுவாராக.

# ஆராய்ச்சி

## திருவள்ளுவர் சிறப்பு

*குறுமுனிவன் கோத்தெடுத்த கொற்சேரி யூசி*
*யுறுவிலைக்கு விற்றதனோ டொக்குந் - தெறுகலியைச்*
*செற்றவேன் மாற திருவள்ளுவனார் வாய்ச்*
*சொற்றகுமுப்பால் வாழ்த்துச் சொல்.*

இஃது "பொய்யாமொழிப் புலவர் பாடியது" என்று துன்படக்கிக் கோட்டைத் திருவள்ளுவமாலைப் பிரதியிற் கண்டது.

*முப்பாலு முண்டோ முலைப்பா லினிநுகரோ*
*மப்பாலுக் கப்பாலு மாயினோ - மெய்ப்பொருளு*
*முள்ள படியுணர்ந்தோ மோதிக் குறைதீர்ந்தோம்*
*வள்ளுவனார் வைப்பெமக்கு வாய்த்து.*

இஃது திருச்சுழியில் சோமசுந்தரக் கவிராயரது திருக்குறள் பரிமேலழகியாருரைப் பிரதியிற் கண்டது.

*வாழிமரை யானினங்கள் வாழிமன்ற யாகமங்கள்*
*வாழிமனு நீதிமன்னர் மன்பதைகள் - வாழியரோ*
*தெள்ளுகுறட் செந்தேன் செவிகுளிரப் பெய்தமுகில்*
*வள்ளுவர் பாத மலர்.*

இஃது பெருமண்டூர்ச் சைனர் கோயிலுள்ள திருக்குறளேட்டிற் கண்டது.

*எப்பாலு மேத்துவா மின்பம் பொருளறமா*
*முப்பாலு மாயிரத்து முந்நூற்று - முப்பதா*
*வோரடி முக்கா லுரைத்ததிரு வள்ளுவனோ*
*ரீரடி முக்காலுமே.*

*அவனே புலவனவனே கவிஞ*
*னவனே தமிழை யறிவோன் - சிவனறிய*
*வள்ளுவ தேவன் வசனத்தை மெய்யாக*
*வள்ளுவ தேவ னுளன்.*

இவை கம்பர் வம்சத்தினர் என்று தம்மை வழங்கும் மதுரைத் தெய்வசிகாமணிப்பிள்ளையவர்கள் வீட்டுத் திருக்குறளேட்டிற் கண்டவை.

*பத்திராசிரியர்*

# திருக்குறட் பரிமேலழகர் உரைப்பாயிர விளக்கம்

*இந்திரன் முதலாய......................கூறுகின்றார்.*

இறையவர் - உயர்ச்சியுடையவர். இறை-உயர்ச்சி; "ஏந்துகொடியிறைப் புரிசை" (புறம் 17) என்பழிக் காண்க. பதம் - இடம். அந்தமிலின்பத்தழிவில் வீடு என்றது இப்பதங்களின் அந்தமுள்ளின்பமுடைமையும் அழிவுண்மையும் இணர்த்தி நின்றது. அந்தமின்மை - முடிவின்மை அழிவின்மை - என்றுமுளதாந்தன்மை. வீடு - விடு என்பதனடியாய்ப்பிறந்த பெயர். இஃது வடமொழியுள் மோக்ஷம் என்பதனை மொழிபெயர்த்துரைத்ததாம். இன்பமென்றது ஒருகாலத்து ஒருபொருளான் ஐம்புலனும் நுகர்தற் சிறப்புடைத்தாயதனை. இவ்வாறு காமத்துப்பான் முகவுரையிற் காண்க. இதனை வடநூலார் காமம் என்ப. காமம் இன்பமாதல் "கற்பகங் கந்துக்கடனொத்தா, னிணைவே லுண்க ணந்தையு மின்பக்கொடியொத்தாள்" (சிந்தாமணி நாமகள் 336) என்புழிக் கற்பகத்துப் படர்தருங் காமவல்லியினை இன்பக்கொடியெனக் கூறியவாற்றான் உணர்க. அறம் பொருளின்பமென்றது ஈண்டவற்றதிலக்கணங்களே. அற்றன்றாயின் வீடெய்துதற்குரியார்க்கு எடுக்கப்பட்டது வீடு என்றியைந்து பொருளின்றாதல் காண்க. "வீடு இலக்கண வகையாற் கூறப்படாமையின்" என்றதனாலும் இதுவே கருத்தாதல் தெள்ளிது. என்பது வடநூல் வழக்காதலால் "சிந்தையுமொழியுஞ் செல்லாநிலைமைத்து" என்றார். "எதனை மனத்தொடு வாக்குக்குள் எய்தாது மீண்டன" என ஆனந்தவல்லியுள் வேதங்கூறிற்று. துறவறம் வீட்டிற்குக் காரணமாதலை அவ்வியன் முகவுரையானும் வீடு பயக்குமுணர்வாகிய ஞானத்துள் துறவுரைத்து வைத்தமையானும் தேறுக "க்ஞாநமுக்தி" என்பது வடநூல் வழக்கு. "ஞானத்தால் வீடெனவே நாட்டு" என்பது மாமூலம். நூல்களாற் கூறப்படுவன ஏனை மூன்றும் ஆகும். என்பது நச்சினார்க்கினியர்க்கும் உடன்பாடு. என்னை? "இனிய் பொருளென்றது என்னையெனின் : சொற்றொடர் கருவியாக உணரப்படும் அறம்பொருளின்பமும் அவற்றது நிலையும் நிலையாமையுமாகிய அறுவகைப் பொருளுமாம். அவை பொருளதிகாரத்துட் கூறுதும். வீடு பேற்றிற்கு நிமித்தங்கூறுதலன்றி வீட்டின் தன்மை இலக்கணத்தாற் கூறாரென்க. அஃது அந்நிலை மருங்கி னறமுத லாகிய மும்முதற் பொருட்கு முரிய வென்ப' என்பதனான்

உணர்க. இக்கருத்தானே வள்ளுவனாரும் முப்பாலர்கக் கூறி மெய்யுணர்தலான் வீடு பேற்றிற்கு நிமித்தங் கூறினார் (தொல்-பாயிரவுரை) என்றாராகலின்.

''யாது மனு உரைத்தது அது மருந்து'' (சாந்தோக்கியோபநிடதம்) எனப் பண்டைமறையாற் புகழ்தற்சிறப்பினதாதலின், மனுமை முதலாகக் கருதினார். வடநூலாருள் அறத்தைக் குணமென்னும்நையாயிகமதத்தை விடுத்துத் தொழிலென்னும் பாட்ட மதம் பல்லோர்க்கும் உடன்பாடாதலின் அதனையே தழுவி'' அறமாகுது.............. செய்தலும் ஒழிதலும்'' என்றார். இதுவே தேவர்க்கும் உடனபாடாதலை வகையா னறவினை யோவாதே ...... செல்லும் வாயெல்லாஞ் செயல்'' எனவும், ''அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல் - பிறவினை யெல்லாந் தரும்'' எனவும் வரும். குறள்களில் அறத்தை வினையென்றோதுதலானே தெளிக. அறஞ்செயல் என்றாலும் அமைவதாக, 'அறவினைசெயல்' என்றதே நம்மதம் புலப்படுத்துமன்றோ.

வழங்கலால் வழக்காயிற்று. வழங்கல் - சொல்லல். தண்டம் - ஒறுத்தல். நுனித்து நோக்கிற் கழுவாயும் ஒறுத்தலாவது கருதி அதனை வேறு கூறினாரில்லை. ஒழுக்கம் வழக்குகளை ஆசாரம் வியவகாரம் என்ப வடநூலார்.

அந்தணர் அழகிய தட்பமுடைமையாற் போந்தபெயர்; அந்தத்தை அணுவுவார் எனக்கொண்டு வேதாந்தத்தையே நோக்குவாரென்பர் நச்சினார்க்கினியர். (முருகாற்றுப்படையுரை) வருணம் என்பது ஜாதி, நிலை என்பது ஆசிரமம். வழுவுதலாவது விதித்தன ஒழிதலும் விலக்கியன செய்தலுமாம்.

கடன் கோடல், புதைபொருள் உடையானல்லான் விற்றல், கூடிமேம்படல், நல்கியதை நல்காமை, கூலிகொடாமை, கட்டுப்பாடு கடத்தல், விற்றுக்கொண்டு ஒப்பாமை, ஆண்டானடிமைவழக்கு, எல்லைவழக்கு, கடிதெறிதல், கடுஞ்சொல், களவு, வன்செய்கை, பிறம்மனை வவ்வுதல், மாதராடவர் முறை, தாயபாகம், சூது என்னும் இப்பதினெண்பதங்களையும் மனுநூலால் (8, 9 அத்தியாயங்கள்) தெளிக.

ஒப்ப நாடி என்றது நீதிநூற்குத்தக ஆராய்ந்து என்றவாறு, அதற்குத் தக என்றது அவ்வழுவுக்குத்தக என்றவாறு. இவ்வாறு ''நீமெய் கண்ட தீமை காணி - னொப்பநாடி யத்த வொறுத்தி'' என்னும் புறப்பாட் டுரையான் (10) உணர்க.

ஒழுக்கம் மக்களுயிர்க்கு உறுதிபயத்தற் சிறப்பினது என்பது ''ஒழுக்கம் விழுப்பந்தரலா னொழுக்க - முயிரினு மோம்பப்படும்'' எனவும், ''தெரிந்த தோம்பித் தேரினு மஃதேதுணை'' எனவும் வருவனவற்றிற் காண்க. தெய்வப் புலமை இன்னதென்பது ''திருக்குறள் வரலாற்றில்'' ஆசிரியர் பெயருட் கூறினாம். பின் வழுக்குந் தண்டமும் சிறப்பில என்றமையாற் ஈண்டுச் சிறப்புடை ஒழுக்கம் என்றார். சிறப்பாவது மக்களுயிர்க்குறுதி பயத்தலுடைமை.

பிரமசரியம், காருகத்தம், வானப்பிரத்தம், சந்நியாசம் என்னும் நால்வகை நிலையானும், அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் நான்கு வருணத்தானும் அறம் வேறுபடுதலை எல்லா அறநூல்களினும் காணலாம். சிறுபான்மையாகிய சிறப்பியல்புகளாவன : உண்டி, உடை, உறையுள், நூல், கோல், கலம், தீத்தொழில், பிறப்பிறப்புக்களான் வரும் வாலாமை என்னும் இவற்றைப்பற்றி வித்தனவும் பிறவுமாம்.

துணையொடு புரிவது கூறித் துணையின்றித் தனிநிலைக் கட் புரிவது கூறுதன் முறை என்னுங்கருத்தால், ''துணையாகிய கற்புடை மனைவியோடுஞ் செய்யப்படுகின்றதாகலின் என ஏதுப்பட வுரைத்தார். மேல் இலக்கணவகையாற் கூறப்படுவன அறம்பொருளின்பமென்னும் மூன்றுமே எனக் கருதியமையான், இவர் இவற்றதிலக்கணமே கூறினாராகக் கொண்டு இந்நூல் இலக்கணமாவான் செல்லுமன்றே; ஈண்டு அதனைப் பரிகரித்தற்பொருட்டு எடுத்துக்கொண்ட இலக்கியமென்றார். பேராசிரியரும், அறம்பொருளின்ப மென்பவற்றிற்கு இலக்கணங்கூறிய பாட்டுக்கள் பயின்றுவந்த இலக்கியமாகக் கொண்டு இதனைத் தயா பனுவலுள் அடக்கினார். இவ்வாறு அவர் ''வனப்பிய றானே வகுக்குங் காலை'' (தொல்பொருள், செய் 236) என்பதனுரையில் ''தாய பனுவலோடென்றது அறம்பொருளின்பமென்று மூன்றற்கும் இலக்கணஞ்சொல்லுப ; வேறிடையிடை அவையன்றியுந் தாய்ச்செல்தென்றவாறு. அஃதாவது பதினண்கீழ்க்கணக்கெனவும் ''பொருள் கருவி காலம் வினையினோ டைந்து. மிருடீர வெண்ணிச்செயல்'' என்பது இலக்கணங்கூறியதாகலிற் பனுவலோ டென்றான். 'மலர் காணின் மையாத்தி நெஞ்சே யிவன்கண் - பலர் காணும் பூவொக்கு மென்று' என இது இலக்கியமாதலாற் றாயபனுவலெனப்பட்டது. இவை தனித்துவரினும் அவ்வனப்பெனப்படும்'' எனவும் கூறியவாற்றான் உய்த்து உணர்ந்துகொள்க.

*பத்திராசிரியர்*

# கலைச்சொல்லாக்கம்

*முனைவர் த. பெரியாண்டவன்,* எம்.ஏ., பி.எச்.டி.,
மேனாள் இயக்குநர், தமிழ் வளர்ச்சித்துறை

**24-06-10 அன்று கோவை உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் மாங்குடி மருதனார் அரங்கத்தில் வாசித்தளிக்கப்பட்டது.**

உடல் மொழியால் - சைகைகளால் கருத்துகளை வெளிப்படுத்திய மனிதன் ஒலியெழுப்பிப் பேசத்தலைப்பட்ட காலத்தில், இசை மொழியும் பேச்சு மொழியும் கற்ற அளவில், வாழ்க்கை மிக எளிதாக இருந்தது. பின்னர், வேளாண்மை, வாணிகம் என வாழ்வியல் துறைகள் வளர்ந்து, எழுத்து மொழி, இலக்கியம், கலைகள் எனத் தோன்றிச் சொற்கள் பல்கின. கடந்த இரு நூற்றாண்டுகளில் அறிவியல் கண்டுபிடிப்புகள், தொழிற்புரட்சி, அரசியல் புரட்சிகள், போர்கள், விடுதலைகள், மக்களாட்சி, கணினியுக மாற்றங்கள், தகவல் தொழில் நுட்பம் என நாளுக்கு நாள், மணிக்கு மணி, புதியன தோன்றி மனிதனை முற்றுகை செய்கையில் அந்தத் தொழில் நுட்பச் செய்திகளைச் செறிவுபடுத்தி உலகளாவிய அளவில் ஒருசீர்மைத்தாக உணர்த்தவும் உணர்ந்து கொள்ளப்படவும் கருவி ஒன்று தேவைப்படுகிறது. ஏற்கனவே, மொழிகள் என்னும் கருவி உள்ளது. உலகளாவிய மொழியாக ஆங்கிலமும் உள்ளது. ஆனால், உலகமொழி என ஒன்று இல்லை. அக்கருவியாக வல்லது யாது என, ஈண்டுக் காண்போம்.

## நோக்கமும் பொருளும்

தமிழ் இயல்பான மொழி, தமிழில் சொல்லாக்கம் குறித்து ஆயும் முன் தமிழ்மொழி குறித்துப் பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டுள்ளதை நினைவில் கொண்டு மேற்செல்லுதல் வழி நனி சிறக்கும்.

"தமிழ்மொழி, காலத்தால் மிக மிகத் தொன்மையானது. இலக்கண இலக்கிய விதிகளையும் வரைமுறைகளையும் செவ்வனே பெற்றுள்ளது. தூயது - தூய்மையானது, துல்லியமாக எண்ணங்களை வெளிப்படுத்திவிடும் சொல்வளம் மிகவும் படைத்தது. உணர்வுகளை

நுட்பமாகவும் நுண்ணியமாகவும், நேர்மையாகவும், நேர்த்தியாகவும் ஊட்டிடும் நயம் மெத்தவும் மிக்கது. எண்ணங்களை, ஏற்பாடுகளை - கொள்கை கோட்பாடுகளை வழுவாமல், பிறழாமல் குறித்துணர்த்திக் கூறிடும் சொல்லாட்சியும் உடைத்தானது.

**மொழியின் தோற்றமே கூத்து இசை இயல் என்ற வரிசையில் மலர்ந்து, இன்று இயல் முதன்மை பெற்றிருக்கக் கூடும் என்கிறார் முத்தமிழறிஞர் கலைஞர் :**

'நாகரிகம் தோன்றாத அந்தக் காலத்தில் சைகைகள் ஜாடைகள் மூலமாக கைகளை அசைத்து அபிநயம் காட்டுவது மூலமாக, கண்களை உருட்டித் தன்னுடைய உணர்வுகளை வெளிப்படுத்துவதன் மூலமாக உணர்வுகளைப் பரிமாறிக் கொண்டனர். எண்ணங்களைப் பரிமாறிக் கொள்ள பாவங்கள் அபிநயங்கள் தாம் பயன்பட்டன... அப்படி அபிநயங்கள் செய்வதுதான் கூத்து, எனவே முத்தமிழில் முதலில் தோன்றியது கூத்துதான்..... அதற்குப் பிறகு ஓசைகள் எழுப்புவதன் மூலமாக 'ஏ' என்றும் 'ஓ' என்றும் 'வா' என்றும் ஓசைகளை இழுத்து இழுத்து ஒலித்த காரணத்தால் அது இசையாக உருப்பெற்றது. அதற்குப் பிறகு மூன்றாவது கட்டம் தான் நாம் படிக்கிற உங்கள் முன் பேசிக் கொண்டிருக்கிற சொற்கள் அடங்கிய இயல். ஆனால், இந்த இயல் மிக்க திறமையுடையது. முதலிலே முகிழ்த்த கூத்தையும் இரண்டாவதாக, வந்த இசையையும் பின்னுக்குத் தள்ளிவிட்டு இது முதலிலே வந்து அமர்ந்து கொண்டது.

இன்றைக்கு மொழியறிவும் இனவுணர்வும் ஊட்டப்பட்ட நிலையில் பலர் தமிழ்ப் பெருமையில் தோய்ந்து மகிழ்கிறோம். ஆனால், வரலாறு, பெரும்பான்மை மக்கள் ஒடுக்கி வைக்கப்பட்டிருந்ததையே தன் பக்கங்களில் மறைத்து வைத்திருக்கிறது. அந்த அவல நிலையைப் பேராசிரியர் க. அன்பழகனாரின் பார்வையோடு ஒன்றிப் பார்ப்போம். 'தமிழ்நாட்டு மக்கள் நீண்ட பல நூற்றாண்டுகளாக வைதிக ஆதிக்கத்திற்கு ஆட்பட்டு, வடமொழியைத் தேவ பாஷை, அருச்சனை மொழி, சடங்குக்கான மந்திரமொழி என்று ஏற்றுத் தாழ்ந்து நின்றதுடன், தம்முடைய தாய்மொழியும் நீசமொழி, தாமும் சூத்திரர் என்று எண்ணிப் பழக்கப்பட்டவரானதால், அவரிடம் ஊறிப்போன தாழ்வு மனப்பான்மையே தமது மொழி பற்றிப் பெருமை கொள்ளவும் தன்னம்பிக்கை கொள்ளவும் தடையாகிறது.

இப்படிப் பெருமையுற்றுத் தாழ்ந்த தமிழ் மக்களின் மொழியில் கலைச் சொற்கள் தோன்றி நிலைக்க முடியுமா? கலைச் சொற்கள் என்றால் தான் என்ன? மற்ற நாடுகளில் நிலைமை எப்படி? இதுவரை தமிழில் என்ன நடந்திருக்கிறது? சரியான திசை வழியில் செல்கிறோமா? என்னென்ன தடைகள் சிக்கல்கள் எதிர்நிற்கின்றன? இனி என்ன செய்ய வேண்டும்? என்பன போன்ற வினாக்களுக்கு விடைதேடும் வகையில் தமிழில் கலைச் சொற்கள் தோன்றி வளர்ந்த நிலைகளை விரிந்தும் நுணுகியும் காண்பதே இவ்வாய்வின் நோக்கமும் பொருளுமாக அமைகின்றன.

**வரையறை**

கலைச் சொற்களை எவ்வாறு அமைக்க வேண்டும் எவ்வகையில் திட்ப நுட்பப் படுத்த வேண்டும் என்று ஆய்வுக் களத்தைச் செப்பனிடுவதன் முன் கலைச் சொல் என்றால் என்ன என்று வரையறை செய்து கொள்வது முதன்மையாகும். 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்று தொல்காப்பியர் கற்பித்துள்ளார். ஆயின், எல்லாப் பொருளும் கலைப்பொருள் அல்ல. நாம் வழக்கில் பேசுவன இலக்கியத்தில் படைக்கப்படுவன எல்லாம் பொருள் குறிக்கின்றன எனினும் அவை உணர்வுகளை வெளியிடல் - அழகியலை நுகர்தல் - வாழ்வியலை எதிர்கொள்ளுதல் முதலிய தளங்களில் நிகழ்கின்றன. அவை நீக்குப் போக்குடையன. நெகிழும் தன்மை கொண்டன. சில கற்ற அனைத்து மக்களாலும் விளங்கிக் கொள்ளும் பாங்குடையன.

ஆயின், 'அறிவியல் கருத்துக்களை, தத்துவங்களைத் துல்லியமாக மாறுபாடின்றி அனைவரும் ஒரே பொருளாய்ப் புரிந்து கொள்ளுகின்ற வகையில் வெளிப்படுத்தப் பயன்படும் சொற்கள் இலக்கியச் சொற்களிலிருந்து வேறுபடுகின்றன, அறிவியல் கருத்துகளை வெளிப்படுத்தப் பயன்படுத்தப்படும் சொற்கள் உரிய பொருளோடு வரையறுக்கப்படுகின்றன. அப்படி, வரையறுக்கப்பட்ட சொற்களைத்தான் கலைச்சொற்கள் என்கின்றோம்' என்று முனைவர் பொன்னவைக்கோ குறிப்பிடுவது இந்த நேர்வில் கருதத்தக்கது.

தனித்தன்மை உடைய சிறப்புத் தொழில் நுட்பங்களைக் குறிப்பிடும் தொழில்நுட்பச் சொற்கள் அவ்வத்துறைகளுக்கு உரிய சிறப்புச் சொற்களாக உள்ளன. அச்சொற்கள் அனைத்து மக்களுக்குமான பயன்பாட்டிற்கு உரியன அல்ல. அத்துறைகளைச் சார்ந்தவர்கள் மட்டும் பிறழ்வின்று அவ்வச் சிறப்புப் பொருள்களை, கருத்தமைவுகளை

விளங்கிக் கொள்ளுதற்குரியன. அவை அத்துறைகளுக்கே உரிய கலைச் சொற்களாகும். 'கட்டடப் பொறியாளரோ கட்டடக் கலைப் பொறியாளரோ மின்னியல் துறைச் சொற்கள் அல்லது வேதியியல் சொற்களைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது. தொழில் நுட்பச் சொற்களுள் பலவும் குறுகிய தொழில் நுட்பத் தளத்தில் மட்டுமே ஆட்சியுடையவை' Technicus என்பது இலத்தின் சொல். இச்சொல்லிற்குக் கலை என்று பொருள். இச்சொல்லிலிருந்து பிறந்தது Technic என்னும் ஆங்கிலச் சொல். Technical Term என்னும் ஆங்கிலத் தொடரையே நாம் கலைச் சொல் என்கிறோம்.

''பொருண்மை வரையறையுடைய ஒரு சொல் அல்லது சொற்றொடரே கலைச்சொல் என்பது. இதற்குத் துறைச்சொல் என்று மற்றொரு பெயரும் உண்டு. கலைச்சொல் பொது வழக்குச் சொல்லைப் போலவே தொடரில் இயங்கும் பெயராகவோ வினையாகவோ இருக்கும். குறியீடாகவும் இருக்கும். எப்படியிருந்தாலும் அதனுடைய கருத்து செம்மையாக வரையறுக்கப்படும் போது தான் அது கலைச்சொல் என்ற முழுமையைப் பெறுகிறது. என்று பேரா. இராதா செல்லப்பன் தரும் விளக்கம் கலைச்சொல்லின் வரையறையை விளங்கிக் கொள்ள உதவுகிறது.

'ஒரு கலைக்கு உரிய சொல் கலைச்சொல்லாகும். இவ்வாறு கூறியதால் ஒரு கலையில் அமையும் எல்லாச் சொற்களும் கலைச்சொற்கள் என்பது பொருள் அன்று. கலைப் பொருள் மட்டும் கொண்டிருக்கும் சொல் கலைச் சொல்லாகும். மக்கள் வழக்கில் ஆஸ்டிரியா நாட்டில் 1898-இல் பிறந்த யூஜின் ஊஸ்டர் மின்பொறியியல் பட்டம் பெற்றவர்; ஊஸ்டர் கம்பெனியில் மேலாண்மைப் பொறுப்பு ஏற்றிருந்தவர்; கலைச் சொல் ஆய்விலும் ஈடுபாடு கொண்டவர். அவர் 1931-இல் தொழில் நுட்பக் கலைச் சொற்களைப் பன்னாட்டளவில் தரப்படுத்துதல் (International Standardisation of Technical Terms) என்ற நூலை எழுதினார். கலைச் சொல்லாக்க வழிமுறைகள் வகுத்தல் கலைச் சொல் தரப்படுத்தல் என்ற இரண்டு துறைகளிலும் கட்டுரைகளும் நூல்களும் எழுதினார்.

ஊஸ்டரின் உழைப்பின் பலனாகப் பன்னாட்டுக் கலைச்சொற்கள் என்ற தலைப்பில் வெளிவந்த ஆய்வு நூல் கலைச் சொல்லாக்க வழிமுறைகளைக் கூறுகிறது. கலைச்சொல்லாக்கம், கலைச் சொற்களைத்

தெளிவு படுத்துதல், ஆவணப்படுத்துதல், ஒலிபெயர்ப்புக் குறியீடுகள் அமைத்தல், அகர வரிசை விதிகள் முதலியன பற்றி அவர் எழுதினார். எனவே, அவர் கலைச் சொல்லியலின் தந்தை எனப்பட்டார்.

கலைச்சொல் என்ற கருவியை உருவாக்குவதன் மூலமாக மட்டுமே தொழில்முறைச் செய்தித் தொடர்புகளை மேம்படுத்த முடியும் என உணர்ந்த ஊஸ்டர், கீழ்க்காணும் செயல்முறைகளை இன்றியமையாதவையாகக் கருதினார்.

1. பன்னாட்டளவில் தரப்படுத்தப்பட்ட கலைச்சொல் கொள்கைகளை விரிவுபடுத்த வேண்டும்.

2. கலைச்சொல் பணிக்காகவும், கலைச்சொல் ஆவணப்பாட்டின் ஒருங்கமைப்பிற்காகவும் பன்னாட்டு மையம் ஒன்றை நிறுவ வேண்டும்.

3. கலைச் சொல்லியல் பொதுக் கோட்பாட்டைப் பல்கலைக் கழகங்களில் கல்வி, ஆய்வு நிலைகளில் உருவாக்க வேண்டும்.

உருசியாவில் இலெனின் கலைச் சொல்லாக்கத்திற்குப் பாடுபட்டார். சோவியத் என்ற சொல்லையே இலெனின் தான் படைத்தார். உருசிய மொழியில் தேவையான சொல் இருக்கும் போது, வேண்டுமென்றே பிற மொழிச் சொற்களைக் கையாளுவதைக் கண்டித்தார். உருசிய மொழிச் சொற்களஞ்சியம் உருவாக்கப்பட வேண்டும் என்பதற்காகப் பலரை ஊக்குவித்துத் தாமே அதில் முழு அக்கறை காட்டி ஒரு நல்ல சொற்களஞ்சியம் வெளிவரக் காரணமாக இருந்தார் இலெனின்.

ஸ்வீடனில் ஸ்வீடிஷ் மொழியின் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக்காக ஸ்வீடிஷ் கழகம் செயல்படுகிறது. திறமை வாய்ந்த எழுத்தாளர் ஒருவருக்கு நோபல் பரிசை அளிக்கும் இக்கழகம், தன் பதிப்புத் துறை மூலம் சொற்றொகுதிகளையும் சொற்பிறப்பியல் அகராதிகளையும் வெளியிடுகிறது. ஸ்வீடிஷ் தொழில் நுட்ப மையம் என்னும் அமைப்பு கலைச் சொல்லியலை நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறது. மொழியியல் ஆலோசனைகளையும் வழங்குகிறது. பன்மொழிச் சொற்றொகுதிகளை இவ்வமைப்பு வெளியிட்டு வருகிறது.

செக்கோஸ்லோவாக்கியாவில் செக் மொழி ஸ்லோவாக் மொழி என இரு மொழிகள் உள்ளன. செக் இலக்கிய மொழியாக மேன்மையடையத் தொடங்கியதிலிருந்து புதிய பல சொற்கள் ஆக்கப்பட்டு, அதன் சொற்களஞ்சியம் பெருகிற்று. கிறித்துவ இலக்கியங்கள், மதவியல், தத்துவ இயல் சார்ந்த சொற்களே செக் மொழியில் முதன் முதலில் உருவான கலைச் சொற்கள் ஆகும். செக் மாநிலமாக உயர்வு பெற்றதிலிருந்து ஆட்சிச் சொற்கள் உருவாக்கப் பெற்றன. நீதித்துறைச் சொற்கள் விரிவாக்கப்பட்டு மேம்படுத்தப்பட்டன.

பிரான்சுக் குடியரசுத் தலைவர் பல்வேறு அமைச்சகங்களிலும் கலைச் சொல்லாக்கக் குழுக்களை நிறுவப் பிரதமரைப் பணித்ததைத் தொடர்ந்து 1972இல் கலைச் சொல்லாக்கக் குழுக்கள் அமைக்கப்பட்டன. ஒரு களத்தில் விடுபட்ட சொற்களைக் கண்டறிவதையும், புதிய கருத்துக்களுக்குத் தேவையான சொற்கள் அளிப்பதையும், கடன் சொற்களுக்கு மாற்று சொற்கள் தருவதையும் பணிகளாகக் கொண்டு இக்குழுக்கள் செயல்பட்டன. இக்குழுக்களால் வெளியிடப்பட்ட சொற்களையும் தொடர்களையும் அரசு ஆவணங்களிலும் வெளியீடுகளிலும் கடிதத் தொடர்புகளிலும், பாடநூல்களிலும் பயன்படுத்த வேண்டும் சட்டமியற்றி நிலை பெறச் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

தென்னாப்பிரிக்கா ஒரு பன்மொழி நாடு. ஆங்கில ஆட்சியின் பலனாக ஆங்கிலேயர் கண்டுபிடிப்புகளை ஏற்று ஆங்கிலக் கலைச் சொற்களை வழங்கி வந்த நிலைக்கு எதிர்ப்புகள் வலுத்த பின்னர், நாட்டு மொழியில் கலைச் சொற்களை நிறுவ முயற்சிகள் எடுக்கப்பட்டன. இம்முறையை ஆப்பிரிக்கான் மொழி இயன்றவரை பின்பற்றியது. அடுத்து தென்னாப்பிரிக்காவில் ஒரு சில மொழிகளும் இதனைப் பின்பற்றியது.

ஈப்ரு மொழியிலும் கலைச் சொல்லாக்கம் சிறந்த வளர்ச்சி பெற்றுள்ளது. உலகெங்கும் கலைச் சொல்லாக்க முயற்சிகள் தொடர்ந்து இயக்கம் பெற்று வளர்ந்து வருகின்றன.

**தமிழில் கலைச் சொல்லாக்க வரலாறு**

தமிழ் மொழியின் சிறப்பு அதன் சொல்வளமாகும். மொழியியல் தந்தை எனப் போற்றப்படுபவரான டாக்டர் எமனோ, 'உலகத்து மொழிகளிலேயே மிக அதிகமான வேர்ச்சொற்களையுடைய மொழியாகத்

தமிழ் அமைந்துள்ளது' என்று பாராட்டியுள்ளார். எழுத்து, சொல், பொருள் என்று பாகுபாடுகள் செய்தது மட்டுமன்றி, நாம் இன்று உருவாக்கிக் கொண்டுள்ள சொல்லாக்கம் என்ற கூட்டுச் சொல்லைக் கூட நம் மூத்த இலக்கண ஆசிரியர் தொல்காப்பியர் தம் இயலுக்குக் 'கிளவியாக்கம்' எனப் பெயரிட்டதன் வழி முன்பே செய்து காட்டியிருக்கிறார். 'நொய்யும் நுறுங்கும் களைந்து அரிசி அமைத்தாரை, அரிசியாக்கினார் என்பவாகலின் வழுக்களைந்து சொற்களை ஆக்கிக் கொண்டமையான் இவ்வோத்து கிளவியாக்கமாயிற்று' என்னும் சேனாவரையர், சொல் என்பது சொல் பற்றியது அன்று பொருள் பற்றியது என்பதனைச் சொற்கள் பொருள்கள் மேல் ஆமாறு உணர்த்தியமையால் கிளவியாக்கமாயிற்று எனினும் அமையும்' என்று உரை வரைந்திருப்பது கலைச்சொல்லாக்க நெறிமுறை வகுத்த வரலாற்றில் முதல்படி எனக் கருதலாம். பிறமொழிச் சொற்களைத் தமிழில் ஒலிபெயர்க்கும் நெறிமுறையையும் தொல்காப்பியரே முதலில் வகுத்தளித்துள்ளார்.

*'வடசொற் கிளவி வடவெழுத்து ஒரீஇ*
*எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே'*

இலத்தீனில் உள்ள மூதுரைகள் (Maxima) சட்டக் கலைச் சொல்லியலில் ஒரு சிறப்புப் பகுதி ஆகும். நீதிமன்றங்களின் ஆங்கிலத் தீர்ப்புகளில் சட்டக் கருத்துப் படிமங்களைச் செறிவாக அமைத்திட இம்மூதுரைகள் இன்றளவும் துணை நிற்கின்றன. தொல்காப்பியர் செய்யுளியலில்,

*'நுண்மையுமி சுருக்கமும் ஒளியுடைமையும்*
*எண்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்*
*குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்*
*ஏது நுதலிய முதுமொழி என்ப'*

என்று முதுமொழிக்கு இயற்றிய இலக்கணம், கலைச் சொல்லுக்கு வகுத்த முதல் வரையறையே என்று வியக்க வைக்கிறது.

சங்க காலத்திலேயே தமிழர் பல அறிவியல் புலங்களிலும் துறை போகிய வல்லுநர்களாக விளங்கியிருந்தமைக்கான சான்றுகள் தொல் இலக்கண இலக்கியங்களில் விரவிக் கிடக்கக் காண்கிறோம்.

*'ஒன்றறிவதுவே உற்றறிவதுவே*
*இரண்டறிவதுவே அதனொடு நாவே*
*மூன்றறிவதுவே அவற்றொடு மூக்கே*
*நான்கறிவதுவே அவற்றொடு கண்ணே*
*ஐந்தறிவதுவே அவற்றொடு செவியே*
*ஆறறிவதுவே அவற்றொடு மனனே'*

என்று ஓரறிவு உயிர் முதல் ஆறறிவு மனிதன் ஈறாக உயிர்களின் கூர்தலறக் கோட்பாட்டைச் சார்லஸ் டார்வினுக்கு முன்னோடியாகக் கண்டுணர்த்திய தொல்காப்பியரின் இலக்கண நூலில் உளவியல் உயிரியல் சொற்படிமங்கள் புதைந்து கிடக்கின்றன.

*'மண்திணிந்த நிலனும்*
*நிலன் ஏந்திய விசும்பும்*
*விசும்பு தைவரு வளியும்*
*வளித் தலைஇய தீயும்*

*தீ முரணிய நீரும் என்றாங்கு....'* என்ற முரஞ்சியூர் முடிநாகராயர் புறநானூற்றுப் பாடலிலிருந்து நம் முன்னோர் இயற்கை அறிவியல் துறைகளில் தேர்ந்த தெளிவு நிலை பெற்றிருந்ததை அறிகிறோம்.

சிறப்புத் துறைச் சொற்களைத் தமிழர் வழங்கி வந்ததை இலக்கியங்கள் இயம்புகின்றன. வானின் கண் மின்னுவன யாவும் மீன்கள். வானத்தில் விளங்கித் தோன்றும் விண்மீன் எனப் புறநானூறு கூறும். இவ்வான்மீன், நாள்மீன், கோள்மீன் என இரு பிரிவில் அடங்கும். ஒருவர் பிறக்கும் நாளில் விண்ணின்கண் சந்திரன் நின்ற இடத்திலிருந்த மீனே நாள்மீன் எனப்படும். இயற்கை ஒளியையுடைய நாள்மீன்களின் ஒளியைக் கொண்டு விளங்குவன கோள்மீன்கள் என்னும் பேரா. டாக்டர் வித்தியானந்தனின் கருத்து சங்க கால மக்களின் வானியல் அறிவினைப் புலப்படுத்துகிறது.

இன்னும் 'மனத்துக்கண் மாசிலனாதல்' என அறவியலிலும், 'தொடிப்புழுதி கஃசா' என உழவியலிலும், 'சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல்' என்ற தொடரைப் படைத்து முறையியலிலும் 'ஆகாறு அளவிட்டிதாயினும்' போன்ற குறட்பாக்களால் பொருளியலிலும், 'அற்றால் அளவறிந்துண்க' என உடலியலிலும், 'நோய்நாடி நோய்முதல்

நாடி' என மருத்துவ இயலிலும், 'மோப்பக் குழையும் அனிச்சம்' எனத் தாவர இயலிலும் இன்னும் பல்வேறு அறிவியல்களிலும் பல்கலைச் செல்வராக இலங்கிய ஐயன் திருவள்ளுவர் பன்னூறு கலைச் சொற்களை ஆக்கியுள்ளார். அவற்றைத் திரட்டித் தொகுப்பது தமிழ் கலைச் சொல்லியலில் ஆற்ற வேண்டிய ஒரு முதன்மைப் பணியாகும்.

இரட்டைக் காப்பியங்களைக் கலை சொற்களின் சுரங்கங்கள் எனலாம். நாளங்காடி, பொய்க்கரி, நன்னூல், கோவேந்தன் முதலியவை சிலம்பின் சில சொல்லாட்சிகளாகும். மேடைத் திரைச் சீலையின் வகைகளை 'ஒருமுக எழினி' 'பொருமுக எழினி' என்னும் கலைச் சொல் தொடர்களால் இளங்கோவடிகள் குறிப்பிட்டுள்ளார்.

இலக்கிய நூல்களிலும் மக்கள் வழக்கிலும் கல்வெட்டுகள் செப்பேடுகள் முதலிய ஆவணங்களிலும் இருக்கும் சொற்களைத் திரட்டிக் காத்த பணியினைத் திவாகரம் முதலிய நிகண்டுகள் ஆற்றின.

தமிழர்கள் வேளாண் நாகரிகத்தில் வளர்ந்தவர்கள் தொழில் சார்ந்த நாகரிகக் காலத்தில பிற மொழியினரால் ஆளப்பட்டு வந்ததால் தமிழ் மொழியில் கலைச் சொல்லாக்கப்பணி 20 ஆம் நூற்றாண்டில் தான் தொடங்கியது. ஆயினும் தமிழகம் உள்ளிட்ட இந்திய நாட்டில் ஆங்கில மொழி, கல்வி மொழியாகவும் தொழில் மொழியாகவும் அமைந்து விட்ட காரணத்தால் தமிழ் மொழிக் கலைச் சொற்களுக்குத் தேவை எழாத நிலையில் அதன் வளர்ச்சியில் வேகம் இல்லாமல் இருந்தது என்று முனைவர் பொன்னவைக்கோ குறிப்பிடுகிறார்.

தமிழில் முதலில் அறிவியல் கலைச் சொற்கள் உருவாக்கம் பெற்றது தமிழகத்தில் இல்லை. தாய்த் தமிழகத்துக்கு வெளியே ஈழத்தில்தான் அம்முயற்சி தொடங்கப்பட்டது. யாழ்ப்பாணத்தின் வடபால் பருத்தித் துறைக்கு வந்த அமெரிக்கக் கிறித்துவப் பாதிரியாரான மருத்துவர் சாமுவேல் பிஷ்கிறீன் 'அங்காதி பாதம் சுகரண வாதம் உற்பாலனம்' என்ற மருத்துவ நூலை 1852ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார். தொடர்ந்து 10 நூல் வெளியிடப்பட்டன. 150 ஆண்டுகளுக்கு முன்னரே 33 மாணவர்களுக்குத் தமிழில் மருத்துவம் கற்பித்துள்ள இவர், வெல்ஸ் என்பவர் எழுதிய நூலை 'கெமிஸ்தம்' என்ற பெயரில் மொழி பெயர்த்துள்ளார். 'ஆசிரியர் பெயர் வெல்ஸ் என்பதை வெல்சு பண்டிதர் என்றும் கெமிஸ்டிரி என்பதைக் கெமிஸ்தம் என்றும்

எழுதியுள்ளார். ஆங்கிலச் சொல்லின் உச்சரிப்பைப் பேணியதோடு விகுதியைத் தமிழ் மொழிக்கமைய எழுதியது சொல்லாக்கப் பணிக்கு உதவியுள்ளது.

1849ஆம் ஆண்டு இலங்கையில் முதலில் 'பாலகணிதம்' என்ற கணித நூல் வெளிவந்தது. ஆங்கிலக் கணிதத்தின் தனி இயல்புகள் சிலவும் தமிழ்க் கணித முறையின் சிறப்பியல்புகள் சிலவும் சீராக இணைக்கப்பட்டுள்ளன.

மாயூரம் வேதநாயகம் பிள்ளை மக்கள் இயல்புகளிலும் உளநூல் துறையிலும் மிக்க பயிற்சி உடையவர். சட்டத் துறையையொட்டி 'சித்தாந்த சங்கிரகம்' என்னும் சட்டத் தீர்ப்புகளும் நுட்பங்களும் அடங்கிய சட்ட நூலை வெளியிட்டார். 1859 ஆம் ஆண்டு நீதி நூலை வெளியிட்டு தமிழ்நாட்டிற்கு ஆசிரியராகத் திகழ்ந்தார். ''நியாய சாஸ்திரங்களெல்லாம் இங்கிலீஷ் பாஷையில் இருப்பதாலும் இங்கிலீஷில் இருக்கிற நீதி வாக்கியங்களுக்குச் சரியான பிரதிபதங்கள் தமிழில் இல்லாமையாலும் இங்கிலீஷ் பாஷையை உபயோகிப்பதாகச் சில வக்கீல்கள் சொல்லுகிறார்கள். அது அவர்களுடைய தெரியாமையே அல்லாமல் உண்மையல்ல. தமிழ் நூல்களைத் தக்கபடி ஆராய்ந்தால் பிரதிபதங்கள் அகப்படுவது பிரயாசமா? என்று வேதநாயகம் எழுப்பிய வினா ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது. நடை அக்கால மணிப்பிரவாளம் என்றும், கருத்து வேரூன்றத்தக்கது.

1916ஆம் ஆண்டு சேலத்தில் இராஜகோபாலாச்சாரியாரால் விஞ்ஞானச் சொல் சங்கம் தொடங்கப்பட்டது. தமிழில், சாஸ்திரி பரிபாஷைச் சங்கம் என்ற அமைப்பில் இராஜாஜி, வெங்கடசுப்பையர் முதலானோர் இச்சங்கத்தின் வழிப் புதிய சொற்களை உருவாக்கினர். அக்காலச் சூழலுக்கு ஏற்ப வடசொற்களும் கலந்தே இவை விளங்கின.

1923இல் சென்னை மாநிலக் கல்வி இயக்கம் தென்னிந்திய மொழிகளில் கலைச் சொற்களை ஆக்குவதற்கான ஒரு கலைச் சொல் குழுவை அமைத்தது. இக்குழு உறுப்பினர்களில் ஒருவராக பா.வே. மாணிக்க நாயக்கர் செயலாற்றினார். 1923 டிசம்பரில் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் தமிழன்பர் மாநாட்டில் கலைச் சொல்லாக்கம் - கலைக் களஞ்சியம் குறித்து விவாதங்கள் நடைபெற்றன. அண்ணாமலைப் பல்கலைக் கழகம் முதன் முதலாக கல்லூரிக் கல்விக்கென வேதியியல் நூல்களை வெளியிட்டது. 1947இல்

டி.எஸ். அவிநாசிலிங்கம் செட்டியாரைப் பதிப்பாசிரியராகக் கொண்டு கலைக் களஞ்சியப் பணி தொடங்கப்பட்டது. 1954-1963 காலத்தில் கலைக் களஞ்சியங்கள் வெளியாயின. பெரியசாமித் தூரன் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு குழந்தைகள் கலைக்களஞ்சியம் 10 தொகுதிகளாக வெளியிடப்பட்டது.

பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்களின் நூற்றொகை விளக்கம் 1888 ஆம் ஆண்டு வெளிவந்தது. 1884இல் 'இந்து பதார்த்த சாரம்' 'வைத்தியம்' ஆகிய மொழிபெயர்ப்பு நூல்களும், 1895இல் வெ.ப. சுப்பிரமணிய முதலியாரின் 'கால்நடையியல்' மொழிபெயர்ப்பும் வெளிவந்தன.

அறிவியல் கலைச்சொல் படைப்பில் இதழ்களின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும். கலைக்கதிர், யுனெஸ்கோ கூரியர் முதலியவை சீரிய பணியாற்றின. செந்தமிழ்ச் செல்வி, மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடான செந்தமிழ், தமிழ்ப் பொழில் முதலிய இதழ்கள் தமிழ்ச் சொல் வளத்தை மேம்படுத்த முயன்றன. அரசியல் தளத்தில் இயக்க இதழ்களான திராவிட நாடு, காஞ்சி, முரசொலி முதலிய எளிய கவர்ச்சிகரமான மொழி நடையை வளர்த்தன. அடுக்கு நடைக்கென அவர்கள் படைத்துக் கொண்ட சொற்கள் புதிய பரிமாணத்தை அளித்தன. சான்று : வாழ்க வசவாளர்கள் இதில் 'வசவாளர்' என்பது ஒரு புதிய சொல்லாக்கம். 'அறிவியல்·தமிழ்' இன்றைய தேவைகளை நிறைவு செய்யும் இதழாகும்.

வீரமாமுனிவரின் பெயர், பொருள், தொகை, தொடை எனும் நான்முகப் பெயர் கொண்ட சதுரகராதி தொடங்கி அகராதிகள் சொற்களைத் தொகுத்து வழங்கி வந்துள்ளன. கலைக்கதிர் ஆசிரியர் ஜி.ஆர். தாமோதரன் 'அடிப்படை அறிவியல் கலைச்சொல் அகராதி' 'சமூக அறிவியல் கலைச்சொல் அகராதி' 'பயனுறு அறிவியல் அகராதி' ஆகியவற்றைப் பதிப்பித்துள்ளார். டி.வி. சாம்பசிவம் பிள்ளை - மருத்துவம், இரசாயணம், தாவரவியல் கலைச் சொல் அகராதிகளை வெளியிட்டுள்ளார். தமிழக அரசு பல பதிப்புகளாக சட்டச் சொல் அகராதிகளை வெளியிட்டுள்ளது. 1967இல் A முதல் H வரை முதல் தொகுதியாகவும் பின்னர் 1968இல் A முதல் Z வரை முழுத் தொகுதியாகவும் சட்டச் சொல் அகராதியை அரசு வெளியிட்டது. 1984 இதன் மறுபதிப்பும் வெளியிடப்பட்டது. தமிழ் ஆட்சிமொழிப் பயன்பாட்டுக்காக ஆட்சிச் சொல் அகராதியும், 74 துறைகளுக்காக சிறப்புச்

சொல்லகராதிகளும் வெளியிடப்பட்டுள்ளன. இவையன்றியும் மணவை முஸ்தபாவின் 'கணினி களஞ்சியப் பேரகராதி', டாக்டர் ட்டி. சீனிவாசனின் 'உளவியல் அகராதி' பேராசிரியர் சக்திப் புயலின் 'ஐந்து மொழி அகராதி' போன்றவையும் அந்தந்த துறைகளில் பங்காற்றி வருகின்றன.

## நெறிமுறைகளும் தகுதிப்பாடும்

கலைச் சொற்கள் ஆக்கத்தில் பல்வேறு நாடுகளில் தனித்தனியான சிறப்புச் சூழல்களும் இருந்ததையொட்டி, ஆங்காங்கு அதற்கான நெறிமுறைகளும் உருவாகி வளர்ந்துள்ளன.

தொன்மைச் சிறப்புக்கேற்பவும், மொழி வளத்துக்கேற்பவும் தமிழால் எல்லாம் முடியும் என்ற நம்பிக்கையும் அனைத்துக் கலைகளையும் தமிழில் படைக்கப்படவேண்டும் என்ற விழைவும் உள்ள தலைவர்களும் மொழியறிஞர்களும் தெரிவித்த ஊற்றமான கருத்துகள் தமிழ்க் கலைச் சொல் உருவாக்குவதற்கு நெறிமுறைகளை வகுக்க உதவின எனலாம்.

மாயூரம் வேதநாயகம் பிள்ளை பிறமொழிப் புலமை வாய்ந்தவராயினும் 'நம்முடைய சுய பாஷைகளில் வசன காவியங்கள் இல்லாமலிருக்கிற வரையில் இந்தத் தேசம் சரியான சீர்திருத்தம் அடையாதென்பது நிச்சயம்' என்று துணிந்துரைத்தார்.

பாரதியாரின் தமிழ் பற்று அவருடைய மற்றெந்த உணர்வுக்கும் குறைந்ததன்று. தமிழ்நாட்டில் தேசிய கல்வி கற்பிக்க வேண்டுமானால், அதற்குத் தமிழையே தனிக் கருவியாக ஏற்படுத்த வேண்டும்' என்று கூறுகிறார். பாரதியார் காலத்தில் தமிழுக்காகச் 'சாஸ்திரி பரிபாஷை' என்ற மாதப் பத்திரிகை சேலத்தில் தொடங்கப் பெற்றது. ஆனால் அது ஆங்கிலத்தில் தொடங்கப்பட்டது. அது குறித்து அவர் தனது மறுப்பைத் தெரிவித்துள்ளார்.

தந்தை பெரியாரின் எழுத்துக் கொள்கை நன்கு அறியப்பட்ட ஒன்று. எழுத்தில் அவருடைய சீர்திருத்தங்கள் வெற்றியும் பெருவழக்கும் கண்டுள்ளன. அவருடைய சொல்லாக்கக் கருத்துக்களும் கூர்மையாகவே வெளிப்பட்டன. அக்காலத்தில் வடமொழியாளும் வேட்கையை வெகுவாகச் சாடினார். 'மொழிபெயர்ப்புகளைப் பார்த்தால் அவை பெரிதும் நூல்களில் எப்படி வடமொழிகளைப் புகுத்துவது என்கிற

கவலையிலேயே மொழிபெயர்க்கப்பட்டவை என்றுதான் சொல்ல வேண்டும். (வி. 23.09.1962) நாம் தமிழர்கள்; இந்நாட்டின் பூர்வீகக் குடிகள்; நமது மொழி தமிழ் மொழி; நமது மொழிச் சொல்லை விட்டு விட்டு வேறு ஒருவருடைய சொல்லை நாம் ஏன் ஏற்றுக் கொள்ள வேண்டும்' என்கிறார் பெரியார்.

தமிழைப் புதுமொழியாக்கச் சகல முயற்சிகளும் எடுத்துக் கொள்ள வேண்டும். நம் மொழியில் இல்லாத ஒரு கருத்தை நம் மொழியில் ஏற்க வேண்டிய அவசியம் ஏற்படும் போது அக்கருத்துக்குண்டான வார்த்தைகளைத் தோற்றுவிப்பதில் நாம் மிக ஜாக்கிரதையாகப் பணியாற்ற வேண்டும். நாம் கண்டு பிடிக்கும் அல்லது உண்டாக்கும் வார்த்தை நாம் கூற வேண்டிய கருத்தைத் தெளிவாக விளக்கம் செய்வதாகவும் உச்சரிக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். உதாரணமாக 'காப்பி' என்ற வார்த்தைக்கு வேறு வார்த்தை உண்டாக்குவதை விட வழக்கிலிருந்து வரும் அதே வார்த்தையை நாம் தமிழில் ஏற்றுக் கொள்ளலாம். விஞ்ஞானக் கருத்துகளுக்கு வேறு வார்த்தைகளை கண்டுபிடிக்கும் போதும் ஆங்கில வார்த்தைகள் தமிழ் மொழி உச்சரிப்புக்குச் சுலபமாக இருக்குமானால் அவற்றை அப்படியே ஏற்றுக் கொள்ளுவதுதான் நலமாகும்' என்ற பெரியாரின் கருத்து கலைச் சொல்லாக்க நெறிமுறைகள் வகுப்பதில் தொல்காப்பிய நூற்பாவையொட்டிய ஒரு வழிகாட்டி எனக் கொள்ளலாம்.

பாவேந்தர் பாரதிதாசன் இத்துறையில் வெளியிட்டுள்ள சிந்தனைப் பொறிகள் கலைச்சொல் சமைப்போர் நினைவில் நிறுத்தத் தக்கவையாகும்.

*.......*

*''வெளியுலகில், சிந்தனையில் புதிது புதிதாக*
*விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெல்லாம் கண்டு*
*தெளியுறுத்தும் படங்களொடு சுவடியெலாம் செய்து*
*செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்*

*.........*

*உலகியலின் அடங்கலுக்கும் துறைதோறும் நூற்கள்*
*ஒருத்தர் தயை இல்லாமல் ஊரறியும் தமிழில்*
*சலசலென எவ்விடத்தும் பாய்ச்சிவிடவும் வேண்டும்.*

தமிழாய்வில் தன் வாழ்வினை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு உழைத்த மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் கலைச் சொல்லாக்கத்துக்கு முன்னோடியாகச் செயத்தக்க நான்கு கடப்பாடுகளைச் சுட்டுகிறார்.

1. நூல் வழக்கு, உலக வழக்கு, கல்வெட்டு இம்மூன்றினின்றும் அகராதியிற் புகாத சொற்களையெல்லாம் தொகுத்துக் கொள்ளல் வேண்டும்.
2. செந்தமிழ்ச் சொல்லியல் முறைகளைத் தெரிந்து கொள்ளல் வேண்டும் அதாவது முன்னொட்டுகள், பின்னொட்டுகள், இடையொட்டுகள், ஈறுகள் என்ற நாற்றிறப்பட்ட சொற்களின் பொருட்கள் பயன்கள் எல்லாம் தெரிந்து கொள்ளல் வேண்டும்.
3. அவ்வக் கலையில் தேர்ச்சி பெற்ற ஆங்கில அறிஞரைக் கொண்டு மொழி பெயர்க்க வேண்டும்.
4. முற்கூரிய மூவகைத் திறனும் ஒருங்கமைந்தோர் ஆய்ந்து மொழி பெயர்க்கவோ சொற்புனையவோ வேண்டும்.

அறிஞர்களும் இதழாளர்களும் அவ்வத்துறையின் நுட்பர்களும் பங்கு பெறும் கலைச் சொல்லாக்க முயற்சிகளைக் கவனித்தால், தமிழில் கீழ்க்காணும் ஐந்து முறைகளில் கலைச் சொல் உருவாக்கப்படுவதை அறியலாம்.

1. பழஞ்சொற்களைப் பயன்படுத்துதல் - எழுத்து வழக்கிலோ பேச்சு வழக்கிலோ உள்ள மருந்து, பொறி, ஆவணம், ஊர்தி, வலவன் முதலிய சொற்களை இன்றைய தொழில் நுட்பப் பெருண்மை தோன்ற பயன்படுத்துதல்.
2. சொற்பொருள் விரிவு - சொல்லுக்கான பொருளைச் சிறிது விளக்கிப் புதிய கருத்துப் படிவம் ஒன்றை விளக்குதல் எ.கா. : மின், மின்சாரம் (Electricity)
3. புதுச் சொல் படைத்தல் - ஒரு கருத்துப் படிமத்தை விளக்க வினை பெயர் முதலிய அடிச் சொல்லோடு முன்னொட்டு பின்னொட்டு சேர்த்துப் புதுச் சொல்லினைப் படைத்தல்

ஔிர் + வு - ஔிர்வு
அதிர் + வு - அதிர்வு
உயிர் + இ - உயிரி
ஒலி + அன் - ஒலியன்

4. மொழி பெயர்ப்பு - கலைச் சொல்லாக்கத்தில் மொழி பெயர்ப்பு தான் பெரும் பங்கு வகிக்கிறது. மொழி பெயர்த்துச் சொல்லாக்கும் போது அது மூலக் கருத்தை விளக்குவதாக இருத்தல் வேண்டும்.

**காட்டுகள் :**

Telephone - தொலைபேசி
Photosynthesis - ஒளிச் சேர்க்கை
Electron - மின்னணு

5. கடன் பெறல் - தகுந்த கலைச் சொல் இல்லாத போதும், மொழி பெயர்ப்பு சரியாக அமையாத போதும் பிறமொழிச் சொல்லை தற்சமம் தற்பவம் என்ற அடிப்படையில் ஒலி பெயர்ப்பு முறையில் கடன் பெற்று கலைச் சொல்லாக்கிக் கொள்ளலாம்.

Meter - மீட்டர்
Decibal - டெசிபல்
Farenheit - ஃபாரன்ஹீட்

மேற்கண்ட முறைகளில் கலைச் சொற்கள் படைக்கும் போது கைக்கொள்ள வேண்டிய நெறிமுறைகளைக் கீழ்க்கண்டவாறு குறிப்பிடலாம்.

1. புனையும் சொல் தமிழ்ச் சொல்லாக இருக்க வேண்டும்.
2. பொருள் பொருத்தமுடையதாக இருத்தல் வேண்டும்.
3. வடிவில் சிறிதாக இருத்தல் வேண்டும்
4. தமிழ் இலக்கண மரபு மாறாது இருத்தல் வேண்டும்.

### தமிழ்ச் சொல்லாக அமைத்தல்

Secretary என்ற சொல் காரியதரிசி என்று அமைக்கப்பட்டு இன்று செயலாளர் / செயலர் என தமிழ்க் கலைச் சொல்லாக உருப் பெற்றுள்ளது. Station - ஸ்டேஷன் என வழங்கப்பட்டு 'நிலையம்' ஆனதும் இவ்வாறே. Geography - பூமி சாஸ்திரம் - பூகோளம் என்றெல்லாம் சுற்றி இன்று புவியியல் ஆக நிலை பெற்றதும் அவ்வாறே. மேலும், சீனத்திலிருந்து 'கரும்பும்', பாரசீகத்திலிருந்து 'புகையிலை'யும், அமெரிக்காவிலிருந்து 'உருளைக் கிழங்கும்' வந்த போது நாம் தூய தமிழ்ப் பெயர்களிட்டு ஏற்றுக் கொண்டவர்கள் தாமே.

### பொருள் பொருத்தமுடைமை

நுண்ணிய வேறுபாடுகளை காட்டிப் பொருளுக்குப் பொருத்தமான சொற்களாக அமைக்க வேண்டும்.

**காட்டுகளாவன :** Denial - மறுதலிப்பு Prohibition - விலக்கு
Contradiction - முரண் Refutaiton - மறுப்பு

### வடிவில் சிறியனவாக இருக்க வேண்டும்

சிறு வடிவம் எடுத்தாளுவதற்கு எளிதானதாக அமையும். குறுக்க வடிவச் சொற்களே நிலைபெறும். ஐயன் திருவள்ளுவரின் ஈரடிக் குறட்பாக்களும், சங்கச் சான்றோர்களின் ஈரசைச் சொற்களுமே நிலைபேற்றுக்குச் சான்றாவன.

**எடுத்துக்காட்டு :** Tractor - உழுவை ; Clerk - எழுத்தர்

தமிழில் கலைச் சொல்லாக்குபவருக்கு வேண்டிய தகுதிப்பாடுகளாக

1) தேர்ந்தெடுத்தத் துறையில் சிறப்பறிவு

2) ஆங்கிலத்தில் தேர்ச்சியும் ஆங்கிலக் கலைச் சொற்பொருள் உணரவல்ல அறிவும்

3) முழுமையாக தமிழ்ப்படுத்தற்கு வேண்டிய தமிழ்ச் சொல்லாட்சி - தமிழ் வேர்ச் சொற்களை இனங்காணத் தக்கத் தமிழ் இலக்கண இலக்கியப் புலமை என இவை ஒருங்கே வேண்டும் எனக் கொள்ளலாம்.

## எதிர் உள்ள சிக்கல்கள்

தவழ் நிலையில் உள்ள தமிழ்க் கலைச் சொல்லாக்க இயலில் சிக்கல் தோன்றுவது இயற்கையே. சொல்லாக்குபவருக்குத் தமிழில் தொழில் நுட்பப் பயிற்சி இல்லாமை, பலரும் பலவிதமாகப் பொருள் தந்து ஒன்றுக்குப் பல கலைச் சொற்களை அமைத்தல், பயன்படுத்தப்படாமல் கலைச் சொல் அகராதி அளவில் முடங்கி விடும் கலைச் சொற்களை அமைத்தல், காலந்தோறும் கலைச் சொல் வடிவத்தை நிலையின்றி மாற்றிக் கொண்டே இருத்தல், பல தொழில் நுட்பப் பொருண்மைகளையும் ஒரு கலைச் சொல்லாலேயே வழங்குதல் தமிழ்க் கலைச் சொல் துறை பிற நாட்டுத் தொடர்பின்றி சுருங்கிய எல்லையில் செயல்படுவது என இத்துறையில் உள்ள சிக்கல்களை விரிவாகக் காண்போம்.

1) தமிழில் சொல்வளம் மிகுதி. ஆனால் கலைச் சொல் வளம் குறைவு. இதற்கான காரணமும் முனைந்து ஆராய்ந்து கண்டுபிடிக்க வேண்டியதில்லை. எல்லாரும் அறிந்ததுதான். அதாவது, நமக்குத் தமிழில் தொழில்நுட்பப் பயிற்சி இல்லை. கற்பதெல்லாம் ஆங்கிலத்தில், கலைகள் எல்லாம் பிற மொழியில், பின்னர் கலைச் சொற்கள் மட்டும் தமிழில் பல்கிப் பெருக வேண்டும் எனில் அது முதன்மையான சிக்கல் தான்.

2) ஆர்வத்தால் சிலரும், துறையில் பட்டறிவு பெற்றதால் இன்னும் சிலரும், அரசின் ஏற்பாட்டால் சிலரும் எனப் பல தளங்களில் கலைச் சொற்களைப் படைக்கிறார்கள். அவை அவரவர் அறிவு நிலைகளுக்கு ஏற்ப பல மாறுபாடுகளுடன் அமைந்துள்ளன. சான்றாக abstract என்ற கலைப் பொருளுக்குப் பலரும் தந்துள்ள கலைச் சொற்களைப் பார்ப்போம்.

| மணவை முஸ்தபா | கணினி களஞ்சியப் பேரகராதி | கருத்தியல், சுருக்கம், பொழிப்பு |
|---|---|---|
| மா. ஆண்டோ பீட்டர் | கணினி கலைச் சொற்கள் | கருத்தியல் |
| பேரா. சக்திப்புனல் | ஐந்து மொழி அகராதி | நுண்மையான, உருவமற்ற |
| டாக்டர் ட்டி. சீனிவாசன் | உளவியல் அகராதி | அருவக் கருத்து |

ஒரு பொருள் பலசொல் செய்யுள் நயத்துக்காக, கூறியது கூறல் குற்றம் தவிர்ப்பதற்காக இலக்கியத்தில் பயன்படுத்துவது அழகு தான். ஆனால், கலைச் சொல்லியலில் ஒரு தொழில் நுட்பப் பொருண்மைக்கு ஒரு சொல்தான் என நிலை பெற்று, அச்சொல்லே அனைவராலும் வழங்கப்பட வேண்டும்.

இந்நிலையைக் காணும் போது தமிழில் கலைச் சொல்லியல் இன்னும் தொழில் ரீதியில் அமையாது தொடக்க நிலைத் தள்ளாட்டத்திலேயே உள்ளதை அறியலாம்.

3) கலைச் சொற்களைப் படைப்போர் தம் புலமையும் அறிவும் மீதூர அவற்றைப் படைக்கக் காண்கிறோம். அச் சொற்கள் அறிவியல் தொழில் நுட்பர்களாலும், பயன்படுத்துபவர்களாலும் ஆளப்படாமல் கலைச் சொல் அகராதிகளிலேயே முடங்கி விடுகின்றன. 'தைராய்டு' என்னும் மருத்துவக் கலைச் சொல் மருத்துவர்களாலும், ஆய்வக மருந்தகப் பணியாளர்களாலும் பொருள் புரிந்து கொள்ளப்பட்டு வழக்கில் ஆளப்படுகிறது. நோயாளிகளும் அதன் தமிழ்ப் பெயர்ப்பான 'புரிசைச் சுரப்பி' என்னும் கலைச் சொல் மேற்காணும் துறை சார்ந்தவர்களால் மட்டுமன்றி மருத்துவ மாணவர்களாலும் விளங்கிக் கொள்ள முடியாத 'கலைக்களஞ்சியச் சொல்லாக' மட்டும் முடங்கியுள்ளது.

4) கலைச் சொற்கள் தனித்தனித் துறைகளுக்கே உரியன ஆகையில் அவற்றின் பொருள் துறைக்குத் துறை மாறுபடக் கூடும். Disk ஒரு துறையில் தகடாகவும், இன்னொரு துறையில் மின்காந்தத் தட்டாகவும் பொருள் தரக்கூடும். ஆனால், அச்சொற்கள் அவ்வத் துறையில் நிலைபெற்று விட்ட கலைச் சொற்களாகும். Oxygen என்பது உடலியக்கத்தின் இன்றியமையா வளியாகக் கண்டுபிடிக்கப்பட்ட நாளிலிருந்து உலக அளவில் அது Oxygen என்ற பெயராலேயே நிலையாக அறியப்பட்டு வருகிறது. ஆனால், தமிழில் முதலில் 'பிராணவாயு' எனவும் தற்போது 'உயிர்வளி' எனவும் வழங்கப்படுகிறது. இது இன்னும் பெயர் மாறக் கூடுமோ இப்பெயரே நீடிக்குமோ என்ற ஊசலாட்ட நிலையில் தமிழ்க் கலைச் சொல்லியல் உள்ளது எனலாம். ஆட்சிமொழி என்றும் அலுவல் மொழி என்றும் இருபட வழங்குவது நிலை பெறாத் தன்மையையே வெளிக்காட்டுகிறது.

**சான்றாக :** தமிழக அரசின் சட்டச் சொல் அகராதியின் இரு பதிப்புகளில் உள்ள சொல்லாக்க நிலையற்ற தன்மையையும் அவை செழுமையுறுவதற்கு மாறாக மாறியிருப்பதையும் காணலாம்.

| ஆங்கிலச் சொல் | தமிழ்ச் சொல் | |
|---|---|---|
| | 1968 பதிப்பு | 1979 பதிப்பு |
| Document | ஆவணம் | பத்திரம் |
| Hurt | உடலூறு | காயம் |
| Nusance | தொல்லை | பிரச்சனை |
| Kidnapping | கவர்ந்து செல்லல் | பிள்ளை பிடித்தல் |
| Punishment | தண்டனை | சிட்சை |
| Title | உரிமை மூலம் | பாத்யதை |

5) ஒரு கலைச்சொல் அதன் தொடர்புடைய சிறு மாற்றங்களைக் குறிக்க வேறு வேறு பெயர்களால் குறிக்கப்படுகின்றன. ஆனால், தமிழில் அவை அனைத்தும் ஒரே பொதுப் பெயராலேயே அறியப்படுகின்றன. Plan, Scheme, Programe, Project என இவை ஐந்தாண்டுத் திட்டம், பயிர் காப்புறுதித் திட்டம், 20 அம்சத் திட்டம் பரம்பிக் குளம் ஆழியாறு திட்டம் என்று திட்டம் என்ற ஒரே கலைச் சொல் கொண்டே குறிக்கப்படுகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் வேறு ஒரு சான்று காட்டி இச்சிக்கலை வல்லுநர்கள் முன் வைக்கிறார்.

'பையன் என்ன படிக்கிறான்? சட்டம் படிக்கிறான்

வழக்கறிஞர் அறையிலே என்ன படிக்கிறார்? சட்டம் படிக்கிறார்.

'லா' படிக்கும் பொழுதும் சட்டம் படிக்கிறான் என்று சொல்லுறோம்.

'ஆக்ட்' புத்தகத்தைப் படிக்கும் பொழுதும் சட்டப் புத்தகம் படிக்கிறான் என்று சொல்லுகிறோம்.

'பில்' வரும் பொழுதும் சட்ட முன்வடிவு என்கிறோம். ஆங்கிலத்தில் சொன்னால் 'பில்' என்கிறோம். தமிழில் சொல் இல்லை.

சட்ட மன்றம் என்கிறோம். ஆங்கிலத்திலே 'லெஜிஸ்லேடிவ் அசெம்பிளி' என்று சொல்லப்படுகிறது.

ஆங்கிலத்தில் 'கான்ஸ்டிடியூசன்' என்று சொல்கிறோம். அதற்குத் தமிழிலே - முன்னால் அரசியல் என்ற வார்த்தையைப் போட்டு - அரசியல் சட்டம் என்கிறோம்.

லீகல் அட்வைசர் என்பதைச் சட்ட ஆலோசகர் என்கிறோம்.

இலக்கியத்தில் வேண்டுமானால், 'பல பொருள் ஒரு சொல்' அழகுணர்ச்சியை அளிக்கலாம். ஆனால் தொழில் நுட்பத்தில் ஒரு துறையில் ஒரு கலைச் சொல்லுக்கு ஒரு பொருள் மட்டுமே தர வேண்டும். அல்லாக்கால் பொருண்மைக் குழப்பம் விளைப்பதோடு கலைச் சொற்கள் பற்றாக் குறையையும் படம் பிடித்துக் காட்டும்.

6) தமிழ்க் கலைச் சொல்லியலின் செயல் எல்லை சுருங்கியது. உலக அளவில் கலைச் சொல்லாக்கத்தில் ஈடுபட்டுள்ள 65 நாடுகளுள் இந்தியாவும் ஒன்று. ஏறத்தாழ 31 மொழிகளில் மொழி பெயர்ப்பு மற்றும் ஆவணப்படுத்தும் முயற்சிகள் நடைபெற்று வருவதாக 'உலகக் கலைச் சொல் செயல்பாட்டு வழிகாட்டி' (World guide to terminological activities) தெரிவிக்கிறது. இந்திய மொழிகளில் இந்தியை மட்டுமே குறிப்பிடும் அதில், தமிழ், தெலுங்கு மலையாள மொழிகளில் நடைபெறும் கலைச் சொல்லாக்கப் பணிகளைப் பற்றிய குறிப்பு ஏதும் இல்லை. மற்ற இந்திய மொழிகளைப் போல் இந்திக் கலைச் சொற்களைத் தமிழில் ஏற்க நம் மொழியமைப்பு இடந்தராது என்பதோடு தேவையும் அற்றது. ஆனால் உலக அமைப்போடு தொடர்பின்றி தனித்து விடப்படுவதும் சிக்கலே ஆகும்.

### முடிவுகள்

கலைச் சொல்லின் பயன்பாடு, உலக அளவிலான வளர்ச்சிகள், தமிழில் இவ்வியல் வளர்ந்த வரலாறு, இன்றுள்ள சிக்கல்கள் இவற்றை ஆய்வு செய்த எல்லையில் இத்துறை மேலும் செப்பமும் சீர்மையும் பெறுதற்கான முடிவுகளைக் கீழ்க்காணுமாறு பட்டியலிடலாம்.

1) இன்றளவில் அவரவர் தனித்தனியாகவும் நிறுவனங்கள் சார்ந்தும் ஆக்கியுள்ள கலைச் சொற்களையெல்லாம் அரசு ஓரிடத்தில் திரட்டிக்

குவிக்க வேண்டும். பின்னர், அவற்றைத் துறை வாரியாக வகைப்படுத்த வேண்டும்.

2) மூவர் கொண்ட உயர்நிலைக் கலைச் சொல்லினர் குழு ஒன்றினை அரசு நியமிக்க வேண்டும். அம்மூவருள் ஒருவர் தமிழச் செஞ்சொற் புலமை வாய்ந்தவராகவும், இரண்டாமவர் ஆங்கில மொழியறிஞராகவும், அடுத்தவர் பல்கலைத் தொழில்நுட்ப வல்லுநராகவும் இருத்தல் வேண்டும். துறை வாரியான துணைக் குழுக்களையும் அமைக்க வேண்டும். அத் துணைக் குழுக்களிலும் தமிழறிஞர், ஆங்கிலப் புலவர், அத்துறை வல்லுநர் என மூவர் உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்.

3) துறைத் துணைக் குழுவினர் இன்றளவில் உள்ள பல்லாயிரம் கலைச் சொற்களையும் ஆய்வு செய்து செப்பமிட்டுத் தரப்படுத்தித் துறை வாரியாக கலைச் சொல் வரைவும் (draft) தொகுதிகள் உருவாக்க வேண்டும்.

4) துறைத் துணைக் குழுவினர் வரைந்த வரைவுத் தொகுதிகளை, உயர்நிலைக் கலைச்சொல் குழுவினர் மேற்பார்வையிட்டுத் தொடர்புடைய பலருக்கும் சுற்றுக்கு விட்டுக் கருத்தறிய வேண்டும். அக்கலைச் சொற்களைப் பயன்படுத்தும் துறை சார்ந்தோர், பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள், மாணாக்கர்கள், தொழிலகத்தார், அறிவியல் இதழாளர்கள் ஆர்வமுள்ள பொது இயக்கத்தார் எனப் பலரும் அறியச் செய்து அவர்களின் கருத்துக்களைப் பெற வேண்டும்.

5) ஏற்கனவே உருவாக்கப்பட்ட கலைச் சொற்கள் மட்டுமே அன்றி அன்றன்று புதிது புதிதாக கண்டுபிடிக்கப்படும் தொழில் நுட்பப் பொருள்களுக்கும் அப்போதைக்கப்போது வரைவுச் சொற்கள் உருவாக்கிச் சுற்றுக்கு விட வேண்டும்.

6) வரைவுக் கலைச் சொற்களுக்கான கருத்துகள் பெறப்பட்ட பின்னர் அவற்றின் அடிப்படையில் உயர்நிலைக் கலைச் சொல் குழுவினர் நுண்ணாய்வு செய்து தரப்படுத்தி அத்தொகுதிகளை அரசுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

7) அரசளவில், அந்தந்த துறை சார்ந்த அமைச்சகங்கள் அவற்றைப் பரிந்துரைத்து அமைச்சரவையோ அதற்கான அமைச்சர் குழுவோ அதனை ஏற்க வேண்டும்.

8) இவ்வாறு நிலைப்படுத்தப்பட்ட இறுதிக் கலைச்சொல் தொகுதியிலிருந்து மட்டுமே, அதிலுள்ள சொற்களை மட்டுமே, அவ்வப்போது யாவரும் பயன்படுத்த வேண்டும். கல்லூரிகள், மாணவர்கள், தொழிலகங்கள், இதழ்கள் எனப் பலரும் ஒரு பொருளுக்கு ஒரு சொல்லையே அதுவும் ஏற்பளிக்கப்பட்ட கலைச் சொல் தொகுதியுள்ள சொல்லையே பயன்படுத்த வேண்டும்.

9) அரசும் இக் கலைச் சொல் தொகுதிகளை இணையதளத்தில் அதிகாரப்பூர்வமாக வெளியிட்டுப் பயன்பாட்டுக்கு அனுமதிக்க வேண்டும். ஒரு வங்கியின் தானியங்கி இயந்திரத்திலிருந்து (ATM) பணம் பெறுவதைப் போல, இரத்த வங்கியிலிருந்து தேவைப்படுவோர் தங்களுக்குத் தேவைப்படும் வகைக் குருதி பெறுவது போல, அரசின் கலைச் சொல் இணைய தளத்திலிருந்து தேவையான சொல்லைத் தேடிப் பயன்படுத்திக் கொள்ள வகை செய்ய வேண்டும்.

10) இப்படித் தரப்படுத்தப்பட்ட சொற்கள் நிலைபேறாக்கம் செய்த பின்னர் வேறு யாரும் தாங்களாகவே கலைச் சொற்களை உருவாக்கக் கூடாது எனத் தடை விதிக்க வேண்டும். யாருக்கேனும் ஒரு புதுச் சொல்லைப் பற்றிய கருத்து இருந்தால் அக் கருத்தை 'உயர்நிலைக் கலைச் சொல்லினர் குழு'விற்குத் தெரிவிக்கலாம். அவர்களே புதுச்சொல் புனையும் தகுதி படைத்தவர்களாவர்.

11) இவையெல்லாம் செய்தாலும் அது இரண்டாம் நிலை கலைச் சொல்லாக்கமே. ஏனெனில் அக்கலைப் பொருள் ஏற்கனவே உலக அளவில் கண்டு பிடிக்கப்பட்டு அதற்கான கலைச் சொல்லும் பிற மொழியில், பெரும்பாலும் ஆங்கிலத்தில் உருவாக்கப்பட்டு நடைமுறையாகிவிடுகிறது என்பதே முதல் நிலையாகும். அவ்வாறெனில், நாம் முதல் நிலையின் கலைச் சொல்லைப் படைக்க முடியாதோ எனின் முடியும். நாம், கண்டுபிடிப்புகளை, அறிவியல் கண்டுபிடிப்புகளை, தொழில் நுட்பப் புதுமைகளை உருவாக்கினால் நம்மொழியில் அவற்றுக்கு முதல் நிலை கலைச் சொல்லைப் படைக்கலாம். கட்டுமரம் என்பது நம்முடைய

கண்டுபிடிப்பு. அது நம் தமிழ் மொழியிலான முதல் நிலைக் கலைச் சொல். அது ஆங்கில அகராதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டு 'kattamaran' என வழங்கப்படுகிறது. 'காசு' என்பது நாம் நாணய அளவாகப் புழங்கிய கலைப் பொருளும் தமிழக் கலைச் சொல்லுமாகும். அதுவே 'Cash' என்ற நிதியில் கலைச் சொல்லாக உலக அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இவையிரண்டும் பழைய கண்டுபிடிப்புகள். இவை பெருங்கடலில் சிறு நீர்த் திவலைகள். இவை போதுமா? போதா. புதிது புதிதாக நாம் அறிவியல் தொழில் நுட்பங்களைக் கண்டுபிடிக்க வேண்டும். நாம் பொருளைக் கண்டுபிடித்தால் நாம் பெயரிடும் தகுதி பெறுவோம். நம் பிள்ளைக்கு நாம் தானே பெயரிடுவோம்.

இதற்குச் சான்றாக ஒரு நிகழ்வினைப் பார்ப்போம். ஓர் அமெரிக்கர் ஓர் ஆங்கிலேயர் இருவரும் பல அடுக்குக் கட்டடம் ஒன்றனுள் நுழைகின்றனர். அவர்கள் மூன்றாம் தளத்திலுள்ள அலுவலகத்துக்குச் செல்ல வேண்டும்.

'வாருங்கள் லிப்டில் (Lift) செல்லலாம்' ஆங்கிலேயர் அழைக்கிறார் அமெரிக்கர் அவரைத் திருத்துகிறார்.

'இல்லை.... அது லிப்ட் இல்லை. எலிவேட்டரில் (Elevator) செல்வோம்.

'தெரியாமல் சொல்லாதீர்கள். உங்களுக்கு ஆங்கிலம் தெரியவில்லை.... அது லிப்ட் தான்.... ஆங்கிலத்தை நாங்கள் தான் கண்டுபிடித்தோம்' விடாப்பிடியாய் மொழிப் பெருமையைப் பேசுகிறார்.

'இருக்கலாம்..... உங்கள் ஆங்கிலம் உங்களுடையதாகவே இருக்கட்டும். ஆனால் எலிவேட்டரை நாங்கள் தான் கண்டுபிடித்தோம். அதற்கு நீங்கள் எப்படிப் பெயரிட்டுக் கொள்ள முடியும். அது எலிவேட்டர் தான்'

இவ்வாறு அமெரிக்கர் சொன்னதும் ஆங்கிலேயர் வாய் திறக்கவில்லை. அமெரிக்காவில் மின்தூக்கிக்கு எலிவேட்டர் என்றே பெயர். இக்கலைச் சொல் உலக வழக்குப் பெற்று வருகிறது. அது போல ஆழிப் பேரலைக்குச் 'சுனாமி' என்று பெயரிட்டு சப்பானியர் வழங்கும் கலைச் சொல்லையே உலகம் ஏற்றுக் கொண்டுள்ளது. எனவே, நம் இளைஞர்கள், நம் அறிவியலாளர்கள், நம் ஆய்வு மாணாக்கர்கள் புதுப் புது

தொழில் நுட்பங்களைக் கண்டுபிடித்து நம் மொழிக் கலைச் சொற்களைப் பெருகப் படைத்து உலகளவில் பயிலச் செய்வார்களாக.

12) இன்றைக்கு நம் மாணாக்கர்கள் சிறு விழுக்காட்டினர் மழலையர் பள்ளி முதல் ஆங்கில வழியில் கல்வி கற்கின்றனர். பெருமளவில் பள்ளிக் கல்வியைத் தமிழில் பயின்று உயர்கல்வியின் போது ஆங்கில மொழிப் பயிற்சிக்கு மாறுகின்றனர். இவர்கள் யாரும் தாய்மொழி வழிக் கல்வியை முழுமையாகத் தொடரவில்லை. இவர்கள் தாய்மொழியில் சிந்தித்து ஆங்கில மொழியில் மொழி மாற்றித் தங்கள் கருத்துக்களை வெளியிடுகின்றனர். இக்கல்வி இயல்பான கருத்துத் தெளிவிற்கும், ஆய்வு மனப்போக்குக்கும் ஏற்றதாக இல்லை. ஏற்கனவே உள்ள கண்டுபிடிப்புகளை அறிந்து கொள்வதற்கும் அத்துறைப் பணிகளில் வேலை பெறுவதற்குமே இவர்களுடைய கல்வி பயன்படுகிறது. நம்முடைய பல்கலைக் கழகங்களும் ஆராய்ச்சிக்காகப் பெரிதும் முனையாமல் உயர்கல்வி நிலையங்களை நிருவாகம் செய்யும் பணியையே மேற்கொள்கின்றன. தொடக்கம் முதல் உயர்நிலை வரை தாய்மொழி வழிக் கல்வியையே வழங்கி, ஆய்வுச் சூழல்களை நம் பல்கலைக்கழகங்கள் வழங்கினால் நம் இளைஞர்கள் நம் மண்ணுக்கேற்றபடியான தொழில்நுட்பங்களைக் கண்டுபிடித்து முதல் நிலைக் கலைச் சொற் பெயர்களை நம் தமிழில் சூட்டுவார்கள். எனவே, அனைத்து நிலையிலும் தமிழ் வழியிலேயே கல்வி பயிற்றுவிக்க வேண்டும்.

13) பன்னாட்டுத் தரப்படுத்து அமைப்பின் (ISO) கீழ் கலைச் சொல்லியல் கொள்கைகளும் ஒழுங்கமைப்பும் என்ற தொழில்நுட்பக் குழு (TC 37) நிறுவப்பட்டது. இன்னும் பன்னாட்டளவில் இன்ஃபோடெர்ம், (Inforterm) பன்னாட்டுக் கலைச் சொற்கள் (Wetworster) பன்னாட்டு மின்நுட்பவியல் சொற்கோவை (International Electro Technical Vocabulary) முதலிய அமைப்புகளிலும் கலைச் சொற்களஞ்சியங்களிலும் தமிழ்க் கலைச் சொல்லியலின் நேரடித் தொடர்பும் ஈடுபாடும் இல்லை. அத்தொடர்பையும் ஈடுபாட்டையும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இந்திய அளவில் 'இந்தி' மட்டுமே அதிகார மொழியாக இருப்பதாலும் பிற வடமொழி சார்பு மொழிகள் இந்திக் கலைச் சொற்களை ஏற்றுக் கொள்ளுவதாலும் தமிழ் மட்டும் பின்னடைவு

கொள்கிறது. திராவிட மொழிக் குடும்பத்தில் தமிழ் தலைமைத் தன்மை கொண்டது என்றாலும் தமிழ் தனித்ததன்று. திராவிட மொழிகள் என்ற சொல்லாக்கத்தை உருவாக்கிய கால்டுவெல் அவர்கள் அந்நான்கு மொழிகளுக்கிடையே உள்ள தொடர்பை ஒப்பிலக்கண ஆய்வு மூலம் நிறுவியுள்ளார். செம்மொழித் தமிழோடு இன மொழிகள் பிற மூன்றையும் இணைத்துப் பொதுவான கலைச் சொற்களைப் படைத்தால் அவை ஆளப்படும், செயற்பரப்பும் விரிவுபடும். திராவிட மொழிகளின் கலைச் சொல் அமைப்பு ஒன்று பன்னாட்டு அமைப்புகளுடன் நேரடித் தொடர்பும் இணைந்து செயலாற்றும் உரிமையையும் ஏற்படுத்த வேண்டும்.

14) மேற்படி செம்மொழித் தமிழ்க் கலைச்சொல் துறை, தனித்தோ திராவிட மொழிக் குடும்பக் கலைச் சொல் துறையாக இணைந்தோ பன்னாட்டுத் தரப்படுத்து அமைப்புகளுடன் தொடர்பு கொண்டு செயலாற்ற ஆவண செய்து உதவுமாறு மைய அரசைத் தமிழக அரசு கேட்டுக் கொண்டு, அதற்கான அழுத்தமும் கொடுத்துச் செயல்பட வேண்டும்.

இதுவரை, கலைச் சொற்களின் வரையறை இலக்கணம், அவற்றின் இன்றியமையாமை, பன்னாட்டளவில் கலைச் சொல் துறை வளர்ந்து செயல்படும் தன்மை, தமிழில் கலைச் சொல்லாக்க முயற்சிகள் பல தளங்களில் இயங்கும் வரலாறு, கலைச் சொல்லாக்க நெறிமுறைகள், இத்துறை கொள்ளும் சிக்கல்கள் ஆகியவற்றை விரிவாக ஆய்வு செய்து அவற்றுக்கான தீர்வுகளையும் அலசி ஆய்வு முடிவுகளாகக் குறிப்பிட்டு நிறைவு செய்ய விழைகிறேன். இது ஒரு பருந்துப் பார்வை (Birds Eye View) என்ற அளவில் பரவலான பரப்பு எடுத்துக் கொள்ளப்பட்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இப்பொதுவான ஆய்வு இதன் உள்ளடக்கம் ஒவ்வொன்றிலும் தனித்தனி ஆழமான ஆய்வுகளை மேற்கொள்ள அறிஞர்களையும் ஆய்வு மாணவர்களையும் தூண்டுமாக.





# மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம்

## 110ஆம் ஆண்டுத் தொடக்கவிழா
## அழைப்பிதழ்

*இனியு மோர்தமிழ்ச் சங்கம் காண்பேன்*
*இருந்த முதலிடை கடைச்சங்கம் போலவே*
*எனச்சொன்ன பாண்டித்துரைத் தேவன் சொல்லை*
*இவ்வையம் அந்நாளில் நம்பவே இல்லை!*

*வியந்தது வையம் சென்றநாள் சிலவே*
*விரிந்தது மதுரைத் தமிழ்ச்சங்க நிலவே*
*அயர்ந்த தமிழரின் ஆடலும் பாடலும்*
*அறிவின் செயலும் மிளிர்ந்தன பலவே!*

*புலவர் வகுப்பு மூன்று படைத்தான்*
*புன்மையின் மடமையின் என்பை உடைத்தான்*
*பலதமி ழிலக்கிய மாசு துடைத்தான்*
*பாண்டித் துரைத்தேவன் புகழ்க்கொடி எடுத்தான்*

- பாவேந்தர் பாரதிதாசன் (தேனருவி)

பேரன்புடையீர்,

வணக்கம். நிகழும் திருவள்ளுவராண்டு 2041 ஆவணித்திங்கள் 29ஆம் நாள் (14-09-2010) செவ்வாய்க்கிழமைம மதுரை நான்காம் தமிழ்ச்சங்கத்தின் 110ஆவது ஆண்டு தொடக்கவிழா சிறப்பாக நடைபெற இருக்கிறது. தமிழ் உணர்வாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவண்

**மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம்**
மதுரை

நாள் : 14-9-2010 செவ்வாய்க்கிழமை
இடம் : மதுரைத் தமிழ்ச்சங்க வளாகம், மதுரை

| | |
|---|---|
| காலை நிகழ்வு | முற்பகல் 10-00 மணி |
| குத்துவிளக்கு ஏற்றி விழாவைத் தொடங்கி வைப்பவர் | **திருமிகு. சி. காமராஜ்** இ.ஆ.ப. அவர்கள்<br>மதுரை மாவட்ட ஆட்சியர், மதுரை |
| தலைமை | **முகவை மன்னர் நா. குமரன் சேதுபதி** அவர்கள்<br>தலைவர், மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை |
| முன்னிலை | **திருமிகு. இரா. அழகுமலை** அவர்கள்<br>செயலாளர், மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை |
| வரவேற்புரை | **திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார்** அவர்கள்<br>துணைத் தலைவர், மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை |
| தொடக்கவுரை | **திருமிகு. இரா. குருசாமி** அவர்கள்<br>செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை |
| மகிழ்வுரை | **திருமிகு. கி. வைத்தியநாதன்** அவர்கள்<br>ஆசிரியர், தினமணி நாளிதழ், சென்னை |
| அறிமுகவுரை | **திருமிகு. மு. நாகேசுவரன்** அவர்கள்<br>தமிழ்ச் சங்கங்களின் ஒருங்கிணைப்பாளர், திருப்பூர் |
| வாழ்த்துரை | **திருமிகு. கு. புகழேந்தி** அவர்கள்<br>தலைவர், கர்நாடகாத் தமிழ்ச்சங்கங்களின் கூட்டமைப்பு |
| | **திருமிகு. எஸ். துரைசாமி** அவர்கள்<br>தலைவர், புவனேஸ்வர் தமிழ்ச்சங்கம் |
| | **திருமிகு. எம். முத்துராமன்** அவர்கள்<br>செயலாளர், கேரளத் தமிழ்ச்சங்கங்களின் கூட்டமைப்பு |
| | **திருமிகு. வி. திவாகர்** அவர்கள்<br>செயலாளர், ஆந்திரத் தமிழ்ச்சங்கங்களின் கூட்டமைப்பு |
| விழாச் சிறப்புப் பேருரை | பெரும்புலவர், தமிழ்ச்சங்கச் சான்றோர்<br>**திருமிகு. இரா. இளங்குமரனார்** அவர்கள் |
| நன்றியுரை | **திருமிகு. க. முத்தையா பசும்பொன்** அவர்கள்<br>ஆட்சிக்குழு உறுப்பினர், மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை |

| | |
|---|---|
| **மாலை நிகழ்வு** | *பிற்பகல் 2-00 மணி* |
| **தலைமை** | **முகவை மன்னர் நா. குமரன் சேதுபதி** அவர்கள்<br>தலைவர், மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை |
| **ஆசியுரை** | **ஸ்ரீலஸ்ரீ குருமகா சன்னிதானம்**<br>**மதுரை ஆதீனம்** அவர்கள் |
| **முன்னிலை** | **திருமிகு. இரா. குருசாமி** அவர்கள்<br>செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை<br>**திருமிகு. இரா. அழகுமலை** அவர்கள்<br>செயலாளர், மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை |
| **வரவேற்புரை** | **திருமிகு. சு. வீரணசாமி** அவர்கள்<br>ஆட்சிக்குழு உறுப்பினர், மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை |
| **விழா மலர் வெளியீட்டுச் சிறப்புரை** | தமிழ்ச்சங்கச் சான்றோர்<br>**முனைவர் திருமிகு. தமிழண்ணல்** அவர்கள் |
| **விழா மலர் முதற்படி பெறுபவர்** | **திருமதி. கிரிஜா இராகவன்** அவர்கள்<br>கோவைத் தமிழ்ச்சங்கம் |
| **பா. முருகப்பனின் "வெற்றிக்கனி" நூல் அறிமுகம்** | **டாக்டர் திருமிகு. ஆ. முருகநாதன்** அவர்கள்<br>திருப்பூர்த் தமிழ்ச்சங்கம் |
| **முதற்படி பெற்றுச் சிறப்புரை** | **திருமிகு. ஒரிசா பாலசுப்பிரமணியம்** அவர்கள்<br>சென்னை |
| **நன்றியுரை** | **திருமிகு. இரா. கண்ணன்** அவர்கள்<br>ஆட்சிக்குழு உறுப்பினர், மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை |

## தங்கள் வருகையை விரும்பும்

- தமிழ்ச்சங்க ஆட்சிப்பேரவை
- செந்தமிழ்க் கல்லூரிக் கல்விப்பேரவை

*தமிழன் என்றோர் இனமுண்டு*
*தனியே அவர்க்கோர் குணமுண்டு*
*அமுதம் அவனது மொழியாகும்*
*அன்பே அவனது வழியாகும்.*

*- நாமக்கல் கவிஞர்*

### காலை 9-00 மணி

மாணவர்கள் அனைவரும் ஊர்வலமாகச் சென்று **வள்ளல் பொன். பாண்டித்துரைத்தேவரின்** திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துதல்.

# ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி பி.ஏ.,

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. சுப. அண்ணாமலை

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா


தொடர்பு முகவரி

ஆசிரியர்

செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை
மதுரை - 625 001
தொலைபேசி : 0452 - 6575615



பதிப்பாசிரியர் : **இரா. அழகுமலை,** எம்.ஏ., எம்.ஃபில்.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை - 1
தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : **தவம் பிரிண்டர்ஸ்,** 32, மேலமாசி வீதி, மதுரை - 1

RNI Regd. No. 5508/56 September 2010

# செந்தமிழ்க் கல்லூரி

## மதுரைத் தமிழ்ச் சங்கம்



(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது)

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை – 625 001 ✆ 0452 - 2343707, நிகரி : 0452 - 4373475

**2010 - 2011ஆம் ஆண்டிற்கான சேர்க்கை நடைபெறுகிறது**

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**நன்கொடை கிடையாது**

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன**

| இரா. அழகுமலை | முனைவர் சு. விஜயன் | இரா. குருசாமி |
|---|---|---|
| செயலாளர் | முதல்வர் (பொறுப்பு) | செயலாளர் |
| மதுரைத் தமிழ்ச் சங்கம் | செந்தமிழ்க் கல்லூரி | செந்தமிழ்க் கல்லூரி |

அனுப்புநர்,
செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை - 625 001

From
SECRETARY
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

Printed by **V. Govindarajan**, published by **R. ALAGUMALAI** M.A., M.Phil. on behalf of **Madurai Tamil Sangam, Madurai** and printed at **Davam Printers, 32, West Masi Street, Madurai - 1**, and published at **54, Tamil Sangam Road, Madurai.** Editor **R. ALAGUMALAI** M.A., M.Phil.